
கல்கி
KALKI
20.9.98
ரூ. 4.50
அமரர் கல்கி
நூற்றாண்டுத்
தொடக்க விழா!
பெண்ணுரிமை, என்
ஃபேவரிட் சப்ஜெக்ட்!


ASHIKA
A Treasure Full of Beautiful Dreams
Ashika Sarees
BENSONS-98
TARIKA
ASHIKA
SAREES

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 7.9.1998

வாழ்த்துச் செய்தி

தமிழ் இலக்கிய உலகில் தலை சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராக விளங்கிய பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா 9.9.1998 அன்று கொண்டாடப்படுவது அறிந்து மகிழ்கிறேன்.

பேராசிரியர் கல்கி அவர்கள் மயிலாடுதுறை வட்டத்தில் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த போதிலும், கடுமையான தமது உழைப்பின் மூலம் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகவும், சிறந்த பத்திரிகையாளராகவும், ஆற்றல் மிகுந்த எழுத்தாளராகவும், சீரிய சமூகத் தொண்டராகவும் வரலாற்றில் நிலைத்த புகழுடன் வாழ்கிறார்.

"தமிழ் நடையில் ஒரு நகைச்சுவையையும், சரித நிகழ்ச்சிகளின் மீது சமையல்கட்டுக்குக்கூட ஒரு ஆவலையும் தூண்டிவிட்ட எழுத்தாளர்"

- எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள், கல்கி அவர்களின் எழுத்தாற்றல் குறித்துப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

தமிழின் முதல் சரித்திர நாவலைத் தந்தவர், தமிழில் பருவ இதழ்களின் முன்னோடி என்பன போன்ற பெருமைகளுடன் இன்றும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பேராசிரியர் கல்கி அவர்களின் படைப்புகளைத் தமிழக அரசு அண்மையில் அரசுடைமையாக்கி, அன்னாருக்குப் பெருமை சேர்த்துள்ள நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து, கல்கி அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு தொடக்க விழா சிறப்புடன் நிகழவும், அவர்தம் பெருமைகள் என்றும் நின்று நிலைக்கவும் இதயம் கனிந்து வாழ்த்துகிறேன்.

அன்புள்ள

(மு. கருணாநிதி)

பெறுநர்

கல்கி கி. ராஜேந்திரன்,
ஆசிரியர், கல்கி,
1, ஐந்தாவது தெரு,
லேக் ஏரியா,
வள்ளுவர் கோட்டம் அருகில்,
சென்னை - 34

விழா விவரங்கள் - பார்க்க பக்கம் 4.



அமரர் கல்கி நூற்றாண்டு சிறப்புப் போட்டிகள்!

ரூ.60,000

பரிசுத் திருவிழா!

நாவல் போட்டி : பரிசு : ரூ. 25,000

- கல்கியில் 26 வாரங்கள் தொடராக வெளியிடக்கூடிய அளவிலான நாவலாக இருக்க வேண்டும்.
- சரித்திர நாவல், சமூக நாவல், மர்ம நாவல், விஞ்ஞானப் புதினம் (Science Fiction) என எதுவானாலும் அனுப்பி வைக்கலாம்.
- தரம் மட்டுமே கருத்தில் கொண்டு பரிசு முடிவு செய்யப்படும்.

கடைசி தேதி : மார்ச் 15, 1999.

மினி தொடர் கதைப் போட்டி: பரிசு ரூ. 10,000

- கல்கியில் நான்கு வாரங்கள் வெளியிடக்கூடிய மினி தொடர்கதைகள் வரவேற்கப்படுகின்றன!
- மின்னல் வேகத்தில் முன்னேறும் கதையாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வாரத்துப் பகுதியும் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.
- தலையைப் பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு சஸ்பென்ஸ் இருக்க வேண்டும்!
- மர்மக் கதையாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை!

கடைசி தேதி : டிசம்பர் 15, 1998.

இசைப் பாடல் போட்டி: பரிசு ரூ. 10,000

- உள்ளத்தை உருக்கி வார்த்தைகளில் வடிக்கும் இசைப் பாடல்கள் பரிசீலனைக்கு வரவேற்கப்படுகின்றன.
- பக்திப் பாடலாகவோ, தேச பக்திப் பாடலாகவோ, சமுதாய விழிப்புணர்வு கீதமாகவோ இருக்கலாம்.

● கீர்த்தனை வடிவில் பாடல் அமைய வேண்டிய கட்டாயமில்லை.

● எழுத்து வடிவில் பாடலை அனுப்பினால் போதுமானது. இசையமைத்து அனுப்ப வேண்டாம்.

கடைசி தேதி : ஜனவரி 15, 1999.

நகைச்சுவைப் பயணக் கட்டுரைப் போட்டி : பரிசு ரூ. 10,000



● உள்நாட்டு, வெளிநாட்டு, ஏன் பக்கத்து ஊர்ப் பயணம் குறித்தும் எழுதலாம்.

● இடைவிடாது சிரிக்கும்படி கட்டுரை அமைய வேண்டும்.

● பயணக் கட்டுரைக்கான இதர இலக்கணங்கள் – வரலாறு, பூகோளக் குறிப்புகள், வர்ணனைகள், மக்கள், இயற்கை, பழக்க வழக்கங்கள் யாவும் அமையப் பெற வேண்டும். நகைச்சுவையுடன் தகவல்களைப் பின்னித் தர வேண்டும்.

● இக் கட்டுரை கல்கியில் 5 முதல் ஆறு பக்கங்களுக்குள் (படங்கள் உள்பட) அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 10, 1999.

வாசகர்களுக்கான போட்டி: பரிசு ரூ. 5,000

சென்ற வாரம் தொடங்கி கல்கி கலெக்ஷன் பகுதியை உன்னிப்பாகப் படித்து வாருங்கள்.

பொன்னியின் செல்வன் நீங்கலான பகுதியில் இடம்பெறும் கட்டுரை/கவிதைகளுள் உங்களை அதிகம் கவர்ந்தது எது? ஏன்...? என்பதை ஒரு பக்க விமர்சனமாக எழுதி அனுப்புங்கள்.

● மே, 1999 இறுதி வரையிலான கல்கி கலெக்ஷன் பகுதியைத் தொடர்ந்து படித்து, பிறகு சிறந்த ஒன்றைத் தேர்வு செய்து விமர்சனம் எழுதுங்கள்.

● விமர்சிக்கப்படும் கட்டுரை இடம்பெற்றுள்ள இதழ் தேதியைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

● விமர்சனம் கல்கியில் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 20, 1999.

அனுப்பப்படும் அனைத்துப் படைப்புகளும் 'சொந்தக் கற்பனையே' என்ற உறுதிமொழியுடன் அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பரிசு மட்டுமே வழங்கப்படும்!

அனைத்துப் போட்டிகளிலும் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு செப்டெம்பர் 9, 1999 – அமரர் கல்கி நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.





குதூகலம்!

'பாரதிய வித்யாபவனில் ரஜினி படமெல்லாம் ரிலீஸ் பண்ண ஆரம்பித்து விட்டார்களா என்ன?'

– சாலையோடுபோன மிஸ்டர் பொது ஜனத்துக்கு இப்படியொரு சந்தேகம் வந்திருந்தால் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

அப்படியொரு கோலாகலம், சென்ற புதன்கிழமை மாலை!

அமரர் கல்கி நூற்றாண்டுத் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்க வந்திருந்த மூப்பனார், வியப்பின் எல்லைக்கே சென்று, "நானும் இதே அரங்கில் எத்தனையோ கூட்டங்களுக்கு வந்திருக்கிறேன்; தலைமையேற்று நடத்தியிருக்கிறேன்; ஆனால் இப்படியொரு பிரும்மாண்டக் கூட்டத்தை- நாற்காலிகள் போதாமல் தரையில் உட்கார்ந்தும் நின்று கொண்டும் ஆர்வம் காக்கிற கூட்டத்தை- முதல்முறையாக இப்போதுதான் பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டதில் அரை மில்லி மீட்டர் கூட உயர்வு நவிற்சி இல்லை.

எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கல்கி வாசகர்கள், அமரர் கல்கியின் அழியாக் காவியங்களில் மனம் பறி கொடுத்து விட்ட ஏராள ரசிகர்கள் என அங்கே ஒரு மெகா சைஸ் குடும்பம் கூடியிருந்தது!

தமிழ்நாட்டு மரபுக்குப் புறம்பான ஒரு செயலுடன் விழா தொடங்கியது. அதாவது, அழைப்பிதழில் குறிப் பிடப்பட்டிருந்த ஆறு மணிக்கு அரை விநாடி கூடத் தாமதமில்லாமல்!

வரவேற்றுப் பேசிய சாவியின் குரலில் இருபது வயது உற்சாகம்! ஜிவ்வென்று ஒரு

• வந்திருந்தோரில் ஒரு பகுதி





• விருது பெறுகிறார் கிஜி. விருது பெற்ற தமிழ்ச்சியுடன் இடது ஓரத்தில் கிருஷ்ணன்

கொண்டாட்டம்!

ஐம்பது, அறுபது வயதுகளைத் தாண்டிக் கடந்து பின்னால் போய் அமரர் கல்கியுடனான அவரது நேரடி அனுபவங்களை ஞாபக பீரோவிலிருந்து இறக்கி, ராக்கெட் விட்டார். நகைச்சுவை ராக்கெட்டுகள்.

"அப்பல்லாம் பத்திரிகைகளுக்கு குனேகா செண்ட் பூசி அனுப்புவாங்க. எதுக்குன்னு கேக்கறீங்க? எழுத்து வாசனையை அறிமுகப் படுத்தத்தான்!"

கல்கி, எழுதப்படிக்கத் தெரியாத தம் மனைவிக்குத் தமிழ் கற்றுக் கொடுத்துத் தம் கதைகளைப் படித்து ரசிக்குமளவுக்கு அவரது தமிழறிவை உயர்த்தினார் என்று குறிப்பிட்ட சாவி, அமரர் கல்கியின் அபார நகைச்சுவை உணர்வுக்குப் பல சான்றுகளை அள்ளித் தெளித்தார்.

"என் தந்தையார் பற்றி நானே அறியாத பல விஷயங்களை இன்று சாவி புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கிறார்" என்று கி.ரா. பேசுமளவுக்குப் பல புதிய தகவல்கள்!

"கொத்தமங்கலம் சுப்புவின் காந்திமகான் கதை வெகு பிரசித்தம். சுப்பு அந்தக் கதை சொல்லும் போதெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு அழுது விடுவார். ஒரு முறை சுப்புவின் கூட்டத்துக்குத் தலைமை ஏற்ற கல்கி, அவரைப் பேசக் கூப்பிட்ட விதத்தைப் பாருங்கள்: 'இப்போது சுப்பு, காந்திமகான் கதை சொல்லி அழுவார்!'

- சிரிப்பில் வெடித்து விட்டது அரங்கம்!



• மூப்பனார்: தீர்மானங்களை அறிவித்தபோது....

வரவேற்புரைக்குப்பின் குத்துவிளக்கேற்றினார் மூப்பனார்.

"இன்று ஏற்றப்படுகிற இவ்விளக்கு, அமரர் கல்கி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் தொடக்கமாக மட்டுமல்லாமல் நாட்டில் நிலையானதொரு நல்லாட்சி அமைந்திடவும் பிரார்த்தித்து ஏற்றப்படுகிறது" என்று கி.ராஜேந்திரன் குறிப்பிட்டார்.

அதற்குப்பிறகுதான் நடந்தது அசாத்தியமான ஒரு முயற்சி! 'யானையைப் பிடித்துப் பானைக்குள் அடைக்கிறேன்' என்று குறிப்பிட்டுவிட்டு, அமரர் கல்கியின் வாழ்க்கைச் சரிதத்தை, சுவாரஸ்யமான பல சம்பவங்களாகத் தொகுத்து ஒரு பூச்சரமாக்கிய சிவசங்கரியின் பேச்சு ஒரு பிசிசார்க்கார் ரகம்!

அப்பட்டமான மாயாஜாலப் பேச்சு, அவருடையது. சுமார் இருபத்தைந்து நிமிடங்களுக்குள் ஒரு மாமனிதரின் வாழ்க்கைச் சரிதத்தை, அவரது பன்முகத்



திறமைகளை, விறுவிறுப்பான, வியப்பூட்டும் சம்பவங்களை கொலு வரிசைபோல அமைத்துத் தம் பேச்சால், கேட்பவர்களைக் கிறங்கடித்து விட்டார் சிவசங்கரி.

அக்காலத்தில் வாரம்தோறும் 'கல்கி'யை வாங்குவதில், அமரர் கல்கியின் தொடர்களைப் படிப்பதில் மக்கள் காட்டிய ஆர்வம் பற்றிக் குறிப்பிட்ட சிவசங்கரி சொன்ன ஒரு விஷயம்:

"என் பாட்டி மிகவும் வயதானவர். கல்கி யின் ரெகுலர் வாசகி. அப்போது பொன்னியின் செல்வன் முதல்முறை வெளிவந்து கொண் டிருந்த சமயம். வாரா வாரம் அதைப் படிக்கும் போது என் பாட்டி புலம்புவார்: 'ஐயோ, நான் செத்துப் போவதற்குள் இந்தப் பொன்னியின் செல்வன்' முடிந்துவிட வேண்டுமே!'

அதைப் படிப்பதில் அத்தனை ஆர்வம்!"

'இந்தத் தொண்ணூற்றெட்டில் சமூக சீர் திருத்தம் பேசுவது பிரமாதமான விஷயமில்லை. ஆனால் கல்கி வாழ்ந்த கால கட்டத்தில் அது பற்றியெல்லாம் பேசினாலே ஜாதிப்பிரஷ்டம் பண்ணி விடுவார்கள்! ஆனால் எதுபற்றியும் அச்சமின்றி எழுதியும் பேசியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படச் செய்தவர் அவர் ஒருவர்தான்" என்று கல்கியின் துணிச்சலை சுட்டிக்காட்டிய மூப்பனார், தாம் கல்கி நூற்றாண்டுக் குழுவின் தலைவராகவும் அன்று நடந்த தொடக்க விழாவின் தலைவராகவும் இருப்பதைக் காட்டிலும் இன்னொரு விஷயத்துக்காக மிகப் பெருமை கொள்வதாகக் கூறி, சிறு சஸ்பென்ஸ் வைத்தார். அது: "நானும் தஞ்சாவூர்க்காரன்; அமரர் கல்கியும் தஞ்சாவூர்க்காரர்!"

கல்கி நூற்றாண்டு விழாக் கொண்டாட் டங்கள் மிகச் சிறப்பாக நடந்தேறத் தம் முழு ஒத்துழைப்பையும் தருவதாக முதல்வர் கலைஞர் உறுதி சொன்னதை மேடையில் பலத்த கரகோஷத்துக்கிடையே தெரிவித்த மூப்பனார், நூற்றாண்டு விழாக்குழுவின் தனிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை அறிவித்தார்.

- அமரர் கல்கி அவர்களின் நினைவாக இந்த நூற்றாண்டு சமயத்தில் ஒரு தபால் தலை வெளியிடுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதுடன் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசினையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது.
- சென்னை அடையாறு காந்தி நகரில்தான் அமரர் கல்கி அவர்கள் தமது இறுதிக் காலத்தில் வசித்தார் என்பதால் அடையாறு காந்தி நகரில் உள்ள நான்காவது மெயின் ரோடுக்கு கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை என்று பெயர் மாற்றம் செய்யுமாறு மாநில அரசையும் சென்னை மாநகராட்சி யையும் கேட்டுக் கொள்வது.
- அமரர் கல்கி அவர்கள் பிறந்த கிராமத்திற்கு மிக அருகில் உள்ள மணல்மேடு என்ற ஊரில் இருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 'அமரர் கல்கி மேல்நிலைப் பள்ளி' என்று பெயர் மாற்றம் செய்யுமாறு மாநில அரசைக் கேட்டுக் கொள்வது. இதற்கு ஏதேனும் நன்கொடை வழங்க வேண்டுமென் றால் அதற்கான முயற்சிகளை மேற்கொள் வது.
- அமரர் கல்கி அவர்கள் பிறந்த குக் கிராமமான புத்தமங்கலத்திற்கு (மணல் மேட்டிற்கு அருகே) நேரில் சென்று அஞ்சலி செலுத்துவது. அந்தக் கிராமத்தின் மேம் பாட்டிற்கு முடிந்த அளவில் உதவுவது. இந்தக் கிராமத்தில் சிதிலமடைந்துள்ள இரண்டு சிறிய கோவில்களின் சீரமைப்புப் பணிக்கு கல்கி குடும்பத்தினர் வழங்க முன்வந்துள்ள ரூ. இரண்டு லட்சத்தை ஏற்றுக் கொண்டு தமிழக அரசின் அற நிலையத்துறை அவற்றின் சீரமைப்புக்கும், குட முழுக்கிற்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்வது.
- தமிழகத்தின் முக்கியமான பெரு நகரங்களிலும், புதுடில்லி, மும்பை, கல்கத்தா ஆகிய மாநகரங்களிலும் மாதம் ஒரு விழாவாக அமரர் கல்கி நூற்றாண்டு விழாவினை உள்ளூர் பிரமுகர்கள் உதவியுடன் நடத்த முயற்சிகளை மேற்கொள்வது.
- அமரர் கல்கி அவர்களைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலரும் எழுதியுள்ள கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூல் வடிவில் வெளியிடுவது.
- அமரர் கல்கி அவர்கள் எழுதியுள்ள கலைப் படைப்புகளில் இருந்து மிகச் சிறந்த வற்றைத் தேர்ந்தெடுத்து நூல் வடிவில் பிரசுரிப்பது. இதற்கு ஒரு தொகுப்பாசிரியரைப் பொறுப்பாக்கி, தலையங்கம், சிறுகதை, சமுதாயப் பார்வையில் எழுதப்பெற்ற கட்டுரைகள், சங்கீத விமர்சனம், சினிமா விமர்சனம், கவிதைகள், குறுநாவல்கள் போன்றவற்றில் சிறந்த சிலவற்றைத் தொகுத்து புத்தக உருவில் வழங்குவது.
- கல்கி அவர்களைக் குறித்து ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்கள், M.Phil பட்டம் பெற்றவர்கள் ஆகியோரது பட்டியலைத் தயாரித்து இந்த விழா வின் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் அவர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி கௌரவிப் பது.
- அமரர் கல்கி அவர்களுக்குச் சென் னையில் ஒரு முக்கியமான இடத்தில் சிலை நிறுவி அதன் பராமரிப்பை கல்கி காரியாலயம் போன்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசின் ஒத்துழைப்பையும் அனுமதியையும் பெறுவது.
- அமரர் கல்கி அவர்கள் எழுதி திரைப் படமாக உருவாகியுள்ள, 'தியாக பூமி', 'மீரா',

'பார்த்திபன் கனவு', 'கள்வனின் காதலி' போன்ற திரைப் படங்களை இந்த நூற்றாண்டினபோது தூர்தர்ஷன் மூல மாகவோ அல்லது தனியார் தொலைக் காட்சி மூலமாகவோ ஒளிபரப்புவதற்கு முயற்சி மேற்கொள்வது.

• அகில இந்திய வானொலியில் அமரர் கல்கி அவர்களின் குரல் ஒலிப்பதிவாகி கைவசம் இருக்கிறதா என்று கேட்டறிந்து, மறு ஒலிபரப்புக்கு கோரிக்கை வைப்பது.

– இப்படி ஒவ்வொரு தீர்மானமாக மூப்பனார் அறிவிக்க, சபையோரின் விண் முட்டும் கரகோஷத்துக்கிடையே முத் தாய்ப்பாக, நூற்றாண்டு நிறைவு விழாவை காமராஜர் அரங்கில் 9.9.1999 அன்று முதல் வர் கலைஞர் தலைமை ஏற்று நடத்தித் தரச் சம்மதித்திருப்பதாக அறிவித்தார் மூப்ப னார்.

அமரர் கல்கியின் இசையார்வமும் அவரது இசை விமர்சனங்களும் வெகு பிரசித்தம். அதன் நினைவாக ஆண்டு தோறும் இளம் இசைக்கலைஞர்களுக்கு வழங்கப் படும் 'கல்கி கிருஷ்ணமூர்த்தி' விருது இவ் வாண்டு இளம் வயலின் கலைஞர்கள் லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன், விஜயலட்சுமி இருவருக்கும் வழங்கப்பட்டது.

தேர்ந்த இசை ரசிகரான மூப்பனாரிடம் விருதைப்

• களை கட்டிய கச்சேரி



பெற்றுக் கொண்ட கிருஷ்ணனுக்கு அன்று இரட் டைப் பூரிப்பு! அவர் முதல் முதலாக மேடை ஏறி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைந்த தினமும் அன்றுதான்!

இந்தச் சந்தோஷமும் விருது பெற்ற மகிழ்ச்சியும் சேர்ந்து அன்று அவர் தம் சகோ தரியுடன் இணைந்து வழங்கிய இசை நிகழ்ச்சி அடுத்த வருடம் வரை மறக்க இயலாதபடி அமைந்த விட்டது! அப்பா லால்குடி ஜெயராமன் போட்ட வலுவான அடித்தளம், தானே வளர்த்துக் கொண்ட உயர்தரமான கற்பனை, தனித்துவமும் லாகவமுமான ஸ்டைல், பாடல் தேர்வில் இருந்த அபார கவனம் எல்லாம் சேர்ந்து அன்றைய நிகழ்ச்சியை அலங்கரித்துவிட்டன!

சிலிர்க்கும்படி ஒரு ஸ்ரீரஞ்சனி, கலை யழகோடு ஒரு கமலாமனோஹரி, 'ஹா'வென்று வியப்புறவைத்த ஹரிகாம்போதி என சபையைக் கட்டிப்போட்டுவிட்டார். சளைக்காமல் ஒரு ஷண்முகப்ரியா வழங்கிய விஜயலக்ஷ்மி அதில் தன் தனித்தன்மையை வெளிப்படுத்தி பிரமிப்பூட்டினார்! பிறகு, மெல்ல மோகனத்தைக் கூப்பிட்டார் கிருஷ்ணன். ஒரு குழந்தை போலத் தவழ்ந்து வந்த அந்த சொகுசான ராகத்தைக் கொஞ்ச நேரம் கொஞ்சிவிட்டு, சீவி சிங்காரித்து ஊஞ்சலில் உட்காரவைத்து, 'ஜிவ்வோ' என்று ஒரு ஆட்டம் ஆடினார் பாருங்கள்– சிலிர்த்துப் போய்விட்டது கூட்டம்!

மிருதங்கம் வாசித்த பக்தவத்சலத்துக்கு அன்று முழுமெஜாரிடி பெற்று ஆட்சியமைத்த பிரதமரின் உற்சாகம். அவர் விரல்கள் நடத்திய நர்த்தனத்தில் பாரதிய வித்யா பவன் அரங்கமே கிடுகிடுத்தது. நாகராஜன் கஞ்சிராவும் வினாயகராம் கடமும் வேறு சேர்ந்து விட்டால் கேட்கவா வேண்டும்?

சாதாரணமாகக் கச்சேரியில் தனியா வர்த்தனம் என்பது ரசிகர்களுக்கு டீ ப்ரேக் மாதிரி.

ஆனால் மிஸ்ரசாபுவில் அன்று இந்த மூவர் கூட்டணி செய்த ரகளையில் ஒரு நாற்காலி அசையவில்லை!

பொருத்தமான இளம் கலைஞர்களுக்கு விருது அளித்திருப்பதைக் கொண்டாடு கிறோம், கொண்டாடுகிறோம் என்று மிருதங்கமும் கஞ்சிராவும் கடமும் மாறி மாறி உச்சஸ்தாயியில் அறிவிக்க, ஒரு பாரதியார் பாட்டு, கல்கியின் இரு இசைப் பாடல்கள், லால்குடிக்கே பிரத்யேகமான ஸ்டைலில் ஒரு தில்லானா, கடைசியில் ஒரு நேயர் விருப்பமாக 'கற்பகமே' என்று அளந்து அளந்து விருந்தளித்தார் கள் கிருஷ்ணனும் விஜயலட்சுமியும்.

கலை வண்ணம் மிளிர்ந்த தாமலின் மேடை அலங்காரங்களின் பின்னணியில், அனுராதா சுரேஷ்கிருஷ்ண மூர்த்தியின் இனிய இறை வணக்க இசையுடன் தொடங்கிய விழா, கிருஷ்ணன், விஜயலட்சுமியின் சொக்க வைக்கும் இசையுடனே நிறைவுற்றது!

கடைசிவரை அசையாமல் இருந்து ரசித்த கல்கி அன்பர்களைச் சொல்லவேண்டும். மூப்பனார் குறிப்பிட்டதுபோல நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் வெற்றி யில் முக்கிய இடம் அவர்களுடையது தானே! ○

— ஔரங்கசீப்

படங்கள் : யோகா

நகரத் துப்புரவு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்று சிந்திக்கிற வித்தியாசமான பாங்க் ஆபீசர் 'எக்ஸ்நோரா' எம்.பி. நிர்மல். அவரது மனைவி விஜயலட்சுமியும் வித்தியாசமான பெண்மணிதான். எப்படி? அவர் எம்.டி. முடித்த டாக்டர். சென்னை மருத்துவக் கல்லூரியில் ஆசிரியர். ஆனால், பிரைவேட்டாய் கிளினிக் நடத்தவில்லை; மற்ற ஆஸ்பத்திரிகளுக்கும் போய் பிராக்டிஸ் செய்வதில்லை!

"அதென்னவோ,



ஆரம்பம் முதலே, பணம் சம்பாதிப்பதற்காகத் தனியாக க்ளினிக் நடத்துவதில் ஆர்வம் இருந்தது இல்லை. ஒரு குடும்பத் தலைவியாக, வேலைக்குச் செல்லும் பெண்மணியாகத்தான் நினைத்து, வாழ்கிறேன்" என்கிறார்.

"ஆனாலும் எங்கள் தெருவில் உள்ள குடிசைவாசிகள் பலரும், உடம்பு சரியில்லை என்றால், என்னிடம் வருவார்கள். அவர்களுக்கு, மருந்து எழுதிக் கொடுப்பேன். ஆனால் பணம் வாங்கிக் கொள்ள மாட்டேன்."

இன்றைக்கும், ரொம்ப சிம்பிளாய் இருக்கிறார். பஸ்ஸில்தான் கல்லூரிக்கும் சென்று வருகிறார். ("நான் பலதடவை கார் வாங்கிக் கொள்ளேன் என்று சொல்லி விட்டேன். கேட்கவில்லை. வீட்டிலிருந்து, எம்.எம்.சி போய் வர சௌகரியமாய் பஸ் இருக்கிறபோது, கார் எதற்கு? என்று கேட்பாள் என் மனைவி" என்கிறார் நிர்மல்)

சொந்த ஊர் தஞ்சை என்றாலும், பிறந்து, வளர்ந்தது எல்லாம் சென்னையில் ஜார்ஜ் டவுன்தான். தமிழ் மீடியத்தில்தான் பள்ளிப் படிப்பு. அதன் பின் ஸ்டெல்லாவில் இன்டர். நிறைய மார்க் வாங்கியதால் மெடிகல் சீட் கிடைப்பதில் சிரமம் இருக்கவில்லை என்கிறார்.

"அந்தக் காலத்தில், மெடிக்கல் காலேஜில் ராகிங் உண்டா?"

"உண்டு. உண்டு. முதல் வருட

ஸ்டூடன்ட்ஸ் எல்லாம், கல்லூரி திறந்து சில மாதங்கள் வரை கூடுமானவரை கும்பல், கும்பலாகத்தான் ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்குப் போவோம். சில சமயங்களில், ஆசிரியரும் கூடவே வருவார். ஆனாலும் கூட, ராகிங் அனுபவம் உண்டு.

அதெல்லாம் ரொம்ப சிம்பிள். பாட்டுப் பாடு... டான்ஸ் ஆடு. இப்படி நட என்கிற ரீதியில் வேடிக்கையாகத்தான் இருக்கும். இன்று நிலைமை எத்தனை மோசமாகி விட்டது! ராகிங் என்பது கொடூரப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. மாணவர்களின் வக்கிர எண்ணங்களுக்கு வடிகால் ஆகிவிட்டது. இது வெட்கித் தலை குனிய வேண்டிய விஷயம்" – படபடவென்று பேசுகிறார்.

"நீங்கள் படித்த கல்லூரியிலேயே ஆசிரியராய்ப் பணி புரியும் அனுபவம் எப்படி இருக்கிறது?"

"காலச் சக்கரத்தின் சுழற்சியால், உட்கார்ந்து கொண்டு பாடம் கேட்ட காலம் போய், நின்று கொண்டு பாடம் நடத்துகிற கட்டம் எனக்கு வந்திருக்கிறது. மாணவர்களைப் பொருத்தவரை, எங்கள் தலைமுறையை விட, இப்போது புத்திசாலிகளாய் இருக்கிறார்கள். பல விஷயங்களைக் குறித்தும் விசாலமான அறிவு இருக்கிறது. எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் டாக்டர் ரத்னவேல் சுப்ரமணியம், டாக்டர் மதன கோபால் போன்ற ஜாம்பவான்கள். அவர்களுடன் எங்களை ஒப்பிடுவது அவ்வளவு சரியில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்."

"நீங்கள் பிராக்டீஸ் செய்வதில்லை என்றாலும், பொதுவாக இன்றைய டாக்டர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன மேடம்?"

"எங்கள் பேராசிரியர், நோயாளி நடந்து வரும் விதத்தை வைத்தே, அவருக்கு என்ன வியாதி என்று 50% கண்டு பிடித்து விடலாம். நோயாளியை முதலில் பேச விடுங்கள். பொறுமையுடன் கேளுங்கள். அதன்பின் நீங்கள் பேசுங்கள். பாதி வியாதி அதிலேயே குணமாகி விடும்' என்பார். ஆனால், இன்று நிலைமை என்ன? பொறுமையாய் நோயாளிகள் பேசுவதைக் கேட்க, டாக்டர்களுக்கு எங்கே நேரம் இருக்கிறது?

மனித உடம்பை கம்பார்ட்மென்ட்களாகவே இன்று, ஸ்பெஷலிஸ்ட்கள் பங்கு போட்டுக் கொண்டல்லவா ட்ரீட்மென்ட் கொடுக்கிறார்கள்? அச்சிட்ட பட்டியலில் டிக் அடித்து, பலவித டெஸ்ட்களை எடுத்து வரச் சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது, பிராக்டீஸ் செய்ய வேண்டாம் என்று முடிவெடுத்தது நல்லதுதான் என்றே படுகிறது!"

"இரண்டு பேரும் சேர்ந்து சினிமாவுக்குப் போவதுண்டா?"

"அந்த ராசியெல்லாம் எனக்கு இல்லை. சில நாட்களுக்கு முன், ஒரு படத்தின் பிரிவியூவுக்கு வரச் சொன்னார் ஒரு நண்பர். இரண்டு பேரும் புறப்பட்டு,

அந்த ராசி எனக்கு இல்லை!

தியேட்டருக்குப் போனால், அங்கு பிரிவியூ காட்சியே இல்லை. எங்கே படம் திரையிடப்படவுள்ளது என்று சரியாய்க் கேட்டுக் கொள்ளாததால் வந்த குழப்பம்! இது போன்ற ஏமாற்றங்கள் எனக்குப் பழகிப் போய் விட்டன!" ●

சந்திப்பு: **பாரதிமௌலி**
படம்: **ஸ்ரீஹரி**

விஜயலட்சுமி நிர்மல்



நாட்டி கிஷோர் குமார்

கிஷோர் குமார், மிகப் பிரபலமான இந்திப் பாடகர் – கம் – நடிகர். ரொம்ப விசித்திரமான கேரக்டர். கிஷோர் குமாரின், வாழ்க்கைக் கதையை, பெங்குயின் நிறுவனம் புத்தகமாக வெளியிட்டுள்ளது. அதிலிருந்து சில படு சுவாரசியமான சம்பவங்கள் இதோ.

'பாய் பாய்' படத்தின் படப்பிடிப்பு. டைரக்டர், கிஷோர் குமாரிடம் காட்சியை விளக்கிவிட்டு, நடித்துக் காட்டச் சொன்னார். கிஷோர் குமாரோ மறுத்து விட்டார். டைரக்டர் எவ்வளவோ முயன்றும், கிஷோர் குமார் மசியவில்லை. கடைசியில், கிஷோரின் அண்ணன் அசோக்குமாரை அணுகி, உதவும்படிக் கேட்டுக் கொண்டார் டைரக்டர். அசோக் குமார், தம்பியிடம் பேசிப் பார்த்தார். 'ஐயாயிரம் ரூபாய் பாக்கி இருக்கிறது. அதைத் தரச் சொல்லுங்கள். நடிக்கிறேன்' என்றார் கிஷோர் குமார்.

"பணம் வந்து கொண்டிருக்கிறது. நடிக்க வாருங்கள். நடித்து முடித்துவிட்டுப் புறப்படும் போது, பணம் கொடுத்து விடுகிறோம்" என்றார் டைரக்டர். அசோக்குமாரும் ஒத்துழைக்கும்படி தம்பியிடம் சொன்னார்.

"இவர்கள் எல்லாம் பொய்யர்கள்; சொன்னபடி பணம் வராது. பணம் வரட்டும். நடிக்கிறேன்" என்றார் கிஷோர் குமார்.

டைரக்டர் ரொம்ப கெஞ்சிக் கேட்டுக் கொண்டபின், போனால் போகிறது என்று நடிப்பதற்கு முன் வந்தார் கிஷோர் குமார்.

ஏதோ முணுமுணுத்தபடியே நடக்க வேண்டிய காட்சி. கிஷோரின் உதடுகள் முணுமுணுத்த வார்த்தைகள்: "ஐயாயிரம் ரூபா... ஐயாயிரம் ரூபா."

காட்சி முடிந்தது. ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்காமல், தன் காருக்குச் சென்று அமர்ந்த கிஷோர் குமார், தம் டிரைவரிடம் காரை எடுக்கச் சொன்னார்.

பாக்கிப் பணம் பற்றி, அசோக் குமாரிடம் டைரக்டர் சொன்னது: "ஸாரி! பாக்கி பணத்துக்கு ஏற்பாடு செய்யவே இல்லை."

● கிஷோர் குமார், டைரக்டர் சொல்வதைக் கேட்பதில்லை என்று ஒரு டைரக்டரும், தயாரிப்பாளரும் கோர்ட்டுக்குப் போனார்கள். டைரக்டர் சொன்னபடி கேட்கத்தான் வேண்டும் என்று கோர்ட் உத்தரவிட்டது.

ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்தார் கிஷோர் குமார். ஆனால் காரை விட்டு இறங்கவில்லை. எல்லோரும் பொறுமையாய்க் காத்திருந்தார்கள். கிஷோர் குமார் காரிலேயே உட்கார்ந்திருந்ததன் காரணம் புரியவில்லை. கடைசியில் 'டைரக்டர் வந்து, காரை விட்டு இறங்கச் சொன்னால்தான் இறங்குவேன்' என்று சொன்னார். சொன்னபடியே, டைரக்டர் வந்து இறங்கும்படிச் சொன்ன பிறகுதான் இறங்கினார். அதேபோல, கார் ஓட்டிச் செல்லும் இன்னொரு காட்சியில், டைரக்டர் 'கட்' சொல்ல மறந்து விட்டதால், செட்டிலிருந்து பல மைல் தூரத்துக்குக் காரை நிறுத்தாமலேயே போய் விட்டார் கிஷோர் குமார்.

● 'அரை டிக்கெட்' படத்தின்போது,



• மனைவி, குழந்தையுடன் கிஷோர்

ஜாக்கிரதை!

டைரக்டருக்கும் கிஷோர் குமாருக்கும் பனிப்போர். கிஷோர் குமாருக்கு எப்படியாவது பிரச்னை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வருமான வரித்துறைக்கு ஒரு கடிதம் போட, அதன் பேரில், கிஷோர் குமார் வீட்டில் இன்கம் டாக்ஸ் ரெய்டு நடந்தது. இது, டைரக்டரின் வேலையாகத்தான் இருக்கும் என்பது கிஷோர் குமாரின் எண்ணம். அந்த டைரக்டரைத் தம் வீட்டுக்கு அழைத்தார். 'பழையதை மறந்து, நட்பைப் புதுப்பித்துக் கொள்ளத்தான் அழைக்கிறார் போலும்' என்று டைரக்டரும் கிஷோர் குமார் வீட்டுக்கு வந்தார். சிரித்த முகத்துடன் அவரை வரவேற்று, உபசரித்த கிஷோர் குமார், தனது வீட்டைச் சுற்றிக் காட்டுவதாய்ச் சொல்லி அழைத்துக் கொண்டு போனார்.

ஒரு பீரோவைத் திறந்து காட்டினார். (தட்டுகள் இல்லை) "பின் பக்கத்தைத் திறந்து கொண்டு உள்ளே போனால் ரகசிய அறை; அங்கே போகலாமா? என்று கேட்டு டைரக்டரை முதலில் போகச் சொன்னார். அவர் உள்ளே நுழைந்ததும், சட்டென்று பீரோவை மூடி, பூட்டி விட்டார். (அது உண்மையில் பீரோதான். டைரக்டரை உள்ளே வைத்துப் பூட்டுவது கிஷோர் குமாரின் திட்டம்)

பீரோவின் உள்ளே இரண்டு மணி நேரம் மூச்சுத் திணறிப் போனார் டைரக்டர்.

பூட்டைத் திறந்த போது, வியர்வையில் தொப்பலாகி, மயக்கமடைந்து, நிற்கக் கூட முடியாமல் தடுமாறினார் டைரக்டர்.

"இனி என் வழிக்கு வந்தால் தெரியும் சேதி" என்று கிஷோர் குமார் மிரட்ட, விட்டால் போதும் என்று போய் சேர்ந்தார் டைரக்டர்!

● வழக்கமாய் 'நாய் ஜாக்கிரதை' என்று வீட்டு வாசலில் போர்டு வைப்பார்கள். ஆனால், கிஷோர் குமார், தன் வீட்டில் ''கிஷோர் குமார் ஜாக்கிரதை'', என்றுதான் போர்டு வைத்திருப்பார். போர்டுக்கு ஏற்ப, அவர் நடந்து கொண்ட சம்பவமும் ஒரு தடவை நடந்திருக்கிறது.

அவரிடம் கடன் வாங்கியிருந்தவர், பணத்தைத் திருப்பிக் கொடுக்க வந்தார். பணத்தைக் கை நீட்டி வாங்கிக் கொண்ட பின்னும் அவரது கையைப் பிடித்துக் கொண்டு, கிஷோர் குமார் செய்த ஒரு காரியம் – செல்லமாய் கையில் ஒரு கடி!

கிஷோர் குமாரின் இன்னொரு முகத்தைக் காட்டும் சம்பவம் இது :

தயாரிப்பாளருக்குப் பணத் தட்டுப்பாடு. ஷூட்டிங்கையே ரத்து செய்ய வேண்டிய நிலைமை. விஷயம் அறிந்ததும், ஷூட்டிங்கை கேன்சல் செய்ய வேண்டாம் என்று சொல்லிவிட்டு, உடனே தம் டிரைவரை வீட்டுக்கு அனுப்பி, டைரக்டருக்குத் தேவைப்பட்ட இருபதாயிரம் ரூபாயைக் கொண்டு வரச் செய்து, தக்க நேரத்தில் உதவி, தயாரிப்பாளரைக் கை தூக்கி விட்டார். ○

தொகுப்பு : **கௌதம் ராம்**

ஆர்யபட்டா



பாரதி வந்ததும் அறையில் ஒரு சங்கடமான மௌனம் நிலவியது. கணவனை இந்த வாரம்தான் இழந்த பெண். அவள் துக்கத்தைக் கிளறிவிடாமல் கேள்விகள் கேட்க வேண்டும். ப்ரபாகர்ராவுக்கு ஏன்தான் இந்த வேலைக்கு வந்தோமோ என்று தோன்றும் சமயங்களில் ஒன்று இது.

"உக்காருங்க" என்றாள் பாரதி, சற்றே தடுமாற்றத்துடன்.

"இருக்கட்டும் மிஸஸ் ஆனந்த்! நீங்க எங்க கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாரா இருக்கீங்களான்னு தெரிஞ்சுக்கவே வந்தோம். சந்தர்ப்பம் சரியில்லைன்னா அடுத்த வாரம் வரோம்."

"என்ன சார் பிரயோசனம்? ஆனந்தே போய்ட்டப்புறம்."

"அதில்லை மிஸ்டர் சேகர், குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டியது எங்க கடமை இல்லையா?"

"பாரதிக்கு அதனால என்ன பிரயோசனம் சொல்லுங்க."

பாரதி குறுக்கிட்டு, மெல்ல ஆனால் அழுத்தமாகப் பேசினாள்.

"முன்னா, சும்மாரு! ஏதாவது கண்டுபிடிச்சிங்களா சார்."

"விசாரிச்சுகட்டிருக்கோம்."

"போலீஸ்னுடைய ஸ்டாக் பதில்."

"காப்பி சாப்ட்டியா முன்னா."

"இன்னும் இல்லை பாப்லு" என்று சேகர் பரிவுடன் சொல்ல,

"ரொம்ப தலைவலி. கிச்சன்ல சொல்லி ஷாமிலியை எல்லாருக்கும் காப்பி கொண்டு வரச் சொல்லு! உங்களுக்குச் சர்க்கரை போடலாமா?"

"போடலாம்" என்றார் ப்ரபாகர்ராவ். இந்தச் சமயத்திலும் விருந்தினர் மேல் பரிவு இருப்பதை வியந்து.

"யாரையாவது அரஸ்ட் பண்ணிங்களா?" என்று கேட்டபோதுதான் அந்த இளைஞனை முழுசாகப் பார்த்தார். சேகருக்குச் சாந்தமான, கலக்கமில்லாத முகம். பாரதியைப் பார்க்கும் பார்வையில் பரிவும் பாசமும் ஆறுதல் சொல்ல வேண்டிய, அரவணைக்க வேண்டிய கடமையும் தெரிந்தது.

"இல்லை. இன்னும் இல்லை மிஸஸ் ஆனந்த்."

"பாரதின்னே கூப்பிடலாம்."

"பாரதி, சென்ற சில மாதங்கள்ள உங்க கணவர் புதுசா யாரையாவது சந்திச்சாரா?"

"ஆராய்ச்சி, ஆபீஸ் விஷயமா பல பேரைச் சந்தித்தார்."

"அவங்க யாரையாவது குறிப்பா உங்களால பேர் சொல்ல முடியுமா?"

"முடியாது. ஸாரி! நான் அவர் ஆராய்ச்சி விஷயத்தில் தலையிடவே இல்லை."

"என்ன ஆராய்ச்சி செய்து

கொண்டிருந்தார்? அதாவது தெரியுமா?''

''அதான் தெரியாதுங்கறானே ஸார்.''

''நான் கேட்டதே இல்லை. அவரும் எங்கிட்ட அதைப்பற்றிப் பேசினதே இல்லை. பிஸிக்ஸ்ல cold fusionல ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை அடிச்சுக் கொடுத்திருக்கேன். ஞாபகம் இருக்கு.''

''அவரை எப்படி முதல்ல சந்திச்சிங்க.''

''ஒரு லாப் அஸிஸ்டண்டாத்தான்.''

பாரதிக்கு அந்த தினம் தெளிவாக நினைவிருந்தது.



ஆனந்த் அலுவலக அறையில் ஒரு கையில் சிகரெட் வைத்துக் கொண்டு ஒரு கையில் ஆறின காப்பிக் கோப்பையுடன் ஆராய்ச்சிக் கட்டுரை படித்துக் கொண்டிருந்தான். சிகரெட் அவன் கையைச் சுடும் வரை கவனிக்காமல், கையை உதறி அதைத் தூர எறிந்தான்.

பாரதி, 'மே ஐ கமின் ஸார்' என்றாள். மிகவும் பயம், பதற்றத்துடன். சோனாலி என்ன என்னவோ சொல்லியிருக்கிறாள். ரொம்ப முன்கோபக்காரர், பொறுமையற்றவர். நினைத்தது கிடைக்கவில்லையென்றால் மேசையில் எதையும் எடுத்துத் தூக்கி எறிந்துவிடுவார். நெற்றி பத்திரம்!

ஆனந்த் 'கமின்' என்று சொல்ல, அவள் உள்ளே செல்ல, சற்று நேரம் கவனிக்காமலேயே இருந்தான்.

பாரதி தலையை அசைத்தாள். அவள் லோலாக்கு மெலிய சப்தமிட்டதைக் கேட்கும் அளவுக்கு நிசப்தம்.

ஆனந்த், ''என்ன வேணும்? யார் நீ.''

''உங்க லாப் அஸிஸ்டண்ட்.''

''ஓ எஸ்! பார்கவி.''

''பாரதி ஸார்.''

ஆனந்த், ''அதானே சொன்னேன்? என்ன இது?''

''உங்க ரிஸர்ச் ரிப்போர்ட்.''

அதை அவன் மேசை மேல் வைக்க, ''முடிச்சுட்டியா? உங்கிட்ட எப்ப நான் கொடுத்தேன்?''

''நேற்று சாயங்காலம். எங்கிட்ட கொடுக்கலை. சோனாலிகிட்ட.''

ஆனந்த் முதன் முதலாக அவளை நிமிர்ந்து பார்த்தது அவளுக்கு நன்றாக நினைவிருந்தது.

8

''ஒரு நாள்ள டைப் அடிச்சுட்டியா?''

''வர்ட் ப்ராஸஸர்ல பண்ணேன்.''

''எம்பத்து எட்டு பேஜ்? இம்பாஸிபிள்.''

''ராத்திரி ஓவர் டைம் ஸ்டே பண்ணேன் ஸார்.''

சுஜாதா

''ஓ, அதான் ட்ரஸ் கலைஞ்சிருக்கு. பாரும்மா! கவர்மெண்ட் ஆப் இண்டியாவுக்கு இத்தனை கடுமையா உழைக்கக் கூடாது.''

நான் போட்டிருக்கும் டிரஸ்ஸை கவனிக்கிறான். இப்போது மற்றொரு அதிர்ச்சியையும் தந்து விடலாம் என்று ''உங்க ரிப்போர்ட் பிரமாதமா இருந்திச்சு. சில ஐடியாஸ் ரொம்ப புதுசா இருந்தது. Especially on cold fusion.''

ஆனந்த் அவளை ஆச்சரியமாகப் பார்த்து ''யுமீன், அந்த ரிப்போர்ட் புரிஞ்சுதா உனக்கு?''

''நான் பிஸிக்ஸ்ல போஸ்ட் க்ராஜுவேட்.''

ஆனந்த் ''உனக்கு கல்யாணம் ஆயிருச்சா'' என்றான் சட்டென்று.

பாரதி வெட்கத்துடன் ''இல்லை ஸார்'' என்றாள்.

"நல்ல வேளை!"

"ஏன்!"

"கல்யாணம் பண்ணிக்கிட்டு கர்ப்பமாகி மெட்டர்னிட்டி லீவ்ல போய்டாதே... நேத்திலருந்து வீட்டுக்குப் போகவே இல்லையா?"

"இல்லை ஸார். நான் இருக்கறது ஆஸ்டல்."

"ஆல்ரைட், ஐல் ட்ராப் யு! என் கண்ணாடியை எங்க வச்சேன்னு தெரிஞ்ச உடனே..."

"கண்ணாடி போட்டுக்கிட்டு இருக்கிங்க ஸார்."

"பாத்தியா? காலைலருந்து தேடிக்கிட்டு இருக்கேன். கார் கீ? என்று மேசையில் தேடினான்.

"ஒரு வேளை கார்லயே இருக்கலாம்."

ஆனந்த் "ஓ! ஆமாம், நான் இன்னைக்கு கார்லயே வரலை! சோம சுந்தர் ட்ராப் பண்ணார். சர்வீஸிங் கொடுத்திருக்கிறேன்."

பாரதி "மூச்சு விட மறந்துராதிங்க" என்று சிரித்தான்.

"டெல்லிக்குப் போறீங்களாமே...! என்ன திடீர்னு?"

"யாருக்காவது தன்னோட ஆதரவு வேணுமான்னு தலைவர் விசாரிச்சிட்டு வரச் சொன்னாரு!"

– கோவை கே. அனிதா



"**எ**ன்ன சிரிக்கிறிங்க பாரதி?"

"அவரை முதல்ல சந்திச்சது ஞாபகம் வந்தது."

"உங்களை ஆனந்துக்கு அறிமுகப்படுத்தினது சோனாலிதானாமே."

"ஆமாம்."

"ஆனந்த் சோனாலியைத்தான் முதல்ல கல்யாணம் செய்யறதா பேச்சு இருந்ததா? உங்களுக்குத் தெரியுமா அது?"

"அப்படித்தான் லாப்ல அத்தனை தகுதியுள்ள பெண்களும் நினைச்சுக்கிட்டிருந்தாங்க. ஆனந்த ஆண் பெண் எல்லார் கூடயும் சரளமா பழகுவார். அதை சோனாலி தப்பா நினைச்சு..."

"சண்டை கூடப் போட்டாங்களாமே."

"அப்படித்தான் கேள்விப்பட்டேன். கல்யாணத்துக்கு சோனாலி வரலை. ரிசைன் பண்ணிட்டுப் போய்ட்டாங்க. அதுக்கப்புறம் சோனாலியை நாங்க சந்திக்கவே இல்லை."

"அப்படியா? உங்களை அப்பட்டமா ஒரு கேள்வி கேட்கலாமா?"

"ம்."

"சோனாலி ஆனந்தை கொன்னிருப்பாங்கறிங்களா."

அவள் அதிர்ச்சியடைந்து "இல்லை ஸார்! அவ்வளவு தூரத்துக்கு அவளுக்கு வெறுப்பில்லை."

"யார் கொன்னிருக்க முடியும்னு நினைக்கிறிங்க?"

சேகர் குறுக்கிட்டு, "யாருன்னு தோணவே இல்லை ஸார். அதானே எங்களுடைய ஆச்சரியம்? ஆனந்த் அத்தனை பாப்புலரா இருந்தார். அருமையானவர்."

"அவருக்கு லாப், வீடு இரண்டைத் தவிர வேற எதாவது வாழ்க்கை இருந்ததா? எதாவது உங்ககிட்ட மறைச்சிருக்காரா? அதன் அறிகுறிகள் உங்கள் மணவாழ்க்கைல..."

"இல்லை ஸார்! இல்லவே இல்லை. அவர் பெரிய தேசபக்தர்! இல்லாட்டி எப்பவோ அமெரிக்கா போய் நிறையவே சம்பாதித்திருப்பார். அவருடைய திறமைக்கு... குண்டு பட்டதும் எப்படித் துடிச்சிருப்பார்! ரொம்ப வலிச்சிருக்குமா ஸார்?" அவள் கண்களில் இயல்பாகக் கண்ணீர் உருண்டோடியது.

"பாப்லு டேக் இட் ஈஸி" என்று சேகர் அவளுடைய கண்களைத் துடைத்தான். உள்ளே சென்று ஒரு பெரிய ஃபைலைக் கொண்டு வந்து காட்டினாள்.

"பாருங்க, எத்தனை எத்தனை அமெரிக்க பல்கலைக் கழகங்களிலிருந்து உதவித் தொகை கொடுத்து போஸ்ட் டாக்டோரல் ரிசர்ச் பண்ண வேண்டுகோள்கள்."

ப்ரபாகர்ராவ் அவற்றை அலட்சியமாகப் புரட்டிக் கொண்டு "வீடு மாத்தறதா சொன்னாங்க?"

"ஆமாம்."

"புது வீடா?"

"ஆமாம்! ராஜேஸ்வரி நகர்ல! என்னவெல்லாம் கனவு கண்டிருந்தோம்! அந்த வீட்டை எப்படியெல்லாம் அழகு படுத்தணும்னு....

"குழந்தைக்கு இப்பவே ரூம்போட்டு என்ன கலர் டிஸ்டெம்பர்னு கூடத் தீர்மானிச்சோம். மூலையிலருந்து சாவு வேடிக்கை பாத்துக் கிட்டே இருந்திருக்கறது தெரியாம."

இப்போது பாரதி அடக்க முடியாமல் அழுதாள். தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டாள்.

"எக்ஸ்க்யூஸ் மி அப்புறம் சந்திக்கலாம்" என்று சேகர் அவளை அழைத்துச் செல்ல, ப்ரபாகர்ராவ் மிகவும் வருத்தப்பட்டார்.

சே! தப்பாக ஏதோ கேட்டு நினைவுகளைக் கிளறி விட்டோமே என்று.

அங்கிருந்து விடைபெற்று அலுவலகம் செல்லும் போது மணி ஆறாகிவிட்டது. ஃபாக்ஸ் கடிதங்கள் பல காத்திருந்தன. "சங்கர் நீ பெங்களூர் ஆர்மரிக்கு போய் சோனாலி கையெழுத்து இருக்குதான்னு பாத்துரு. அவ துப்பாக்கி விஷயமா பொய் சொல்றான்னு நினைக்கிறேன். எதுக்காகப் பொய் சொல்றான்னு தெரியணும்."

"முதல்ல பொய் சொல்றாளான்னு தெரியணும் ஸார்."

"அவ சொன்னது உண்மைன்னா அவளைத் துப்பாக்கி வாங்கினதா காட்ட யாரு விரும்பறாங்கன்னு தெரியணும்."

"எனக்கென்னவோ டாக்டர் சோமசுந்தர் மேலேயே திருப்பித் திருப்பி கவனம் போவுது."

"சங்கர்? நான் என்ன அடிக்கடி சொல்வேன்? எம்ட்டி ஓ."



"இந்தப் பேப்பருக்கு மாநாட்டு விளம்பரம் கொடுத்துத் தொலைங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா தலைவரே!"

"ஏம்பா, இப்ப என்ன அதுக்கு?"

"மாநாட்டு பேரணி ஒரு இடத்தைக் கடக்க ஒண்ணரை நிமிஷம் ஆனதுன்னு நக்கல் பண்ணியிருக்கானுக!"

— உ. ராஜாஜி

"மிஸ்ட்ரஸ்ட் தி ஆப்வியஸ்."

"அதேதான்."

அப்போது டெலிபோன் ஒலித்தது. "ஸார் நான் ஏர்போர்ட்லருந்து பேசறேன். எஸ்ஐ சிக்கோ கவுடா ஸார். சோனாலி இனிங்கற ஒரு சஸ்பெக்ட் பார்ட்டியை ஃபாலோ பண்ணும்படியா ஏஸிபி ஆபிஸ்லருந்து உத்தரவு வந்தது."

"ஏஸிபிதான் பேசறேன் சொல்லுங்க."

"சோனாலி இனிங்கற சஸ்பெக்ட் பார்ட்டி இண்டியன் ஏர்லைன்ஸ் ப்ளைட் பிடிச்சு சிங்கப்பூர் போறதுக்கு போர்டிங் பாஸ் வாங்கி செக் இன் பண்ணிக்கிட்டிருக்காங்க."

"ப்ளைட் எப்ப புறப்படுது?"

"அரை அவர்ல ஸார்."

"உடனே வரோம்."

(தொடரும்)



1998 செப்டெம்பர் 20
வெகுதான்ய புரட்டாசி 4
மலர் : 57
இதழ் : 8

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தமிழகத்தில் தகவல் புரட்சி!

இது தகவல் புரட்சி யுகம். உலகெங்கும் நிகழ்ந்து வரும் கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் முன்னேற்றங்களுக்கு நாம் ஈடு கொடுத்தே ஆக வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இந்த விஷயத்தில் விழிப்புடன் இராவிட்டால் உலகம் நம்மைக் கடந்து சென்று விடும்.

ராஜீவ்காந்தி இந்த உண்மையை உணர்ந்ததால்தான் சாம் பிட்ரோடா என்கிற தகவல் தொடர்பு வல்லுனரைப் பொறுப்பாக்கி சிடாட் நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இதனால் நம் நாட்டுத் தொலைபேசித் துறை நல்ல முன்னேற்றம் கண்டது.


அரசியல் மாற்றங்கள் காரணமாக வெளியேற்றப்பட்ட பிட்ரோடா, வொர்ல்ட் - டெல் நிறுவனப் பிரதிநிதியாக மீண்டும் நம் நாட்டுக்கு உதவ முன்வந்தார்.

புரட்சிகரமான இன்டர்நெட் வலைப்பின்னல் திட்டங்களைச் சில மாநிலங்களில் புகுத்தலாம் என மத்திய அரசுக்குப் பட்டியலிட்டுத் தந்தார்.

மத்திய அரசு யோசித்துக் கொண்டிருந்த வேளையில், தமிழக முதல்வர் முடிவெடுத்துவிட, வொர்ல்ட் - டெல்லுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. தமிழக அரசின் சுறுசுறுப்பை பிட்ரோடாவே சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, மாநிலம் முழுதும் இன்டர்நெட் வசதி பரவலாக்கப்பட்டு, ஒரு டெலிபோன் பூத்துக்குப் போய் எஸ்.டி.டி போடுகிற மாதிரி, இனி யார் வேண்டுமானாலும் குறைந்த கட்டணத்தில் இன்டர்நெட் வசதியைப் பயன்படுத்தலாம் என்கிற நிலைமைக்கு வித்திடப்பட்டிருக்கிறது.

இதோடு நிறுத்திக் கொள்ளாமல், தமிழகத்தில் திட்டமிடப்பட்டுள்ள தகவல் புரட்சிக்கு வேறு



பல முனைகளிலும் களம் இறங்கியிருக்கிறது தமிழக அரசு.

டானிடெக் என்கிற **(Tamil Nadu Information Technology Institute - TANITEC)** கல்வி மையம் நிறுவப்பட்டு அது பல்கலைக் கழக அந்தஸ்து பெறுகிற அளவுக்கு விரைவில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கல்வி மையம் ஒரு தொழில் நிறுவனமாக **(Company)** அமைக்கப்படும்; கல்வியாளர்கள், தொழில் அதிபர்கள், அரசு அதிகாரிகள் அதன் இயக்குனர்களாக இருப்பார்கள். ஏற்கெனவே இயங்கும் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் இந்த இன்ஸ்டிட்யூட்டில் முதலீடு செய்ய அழைக்கப்பட்டுள்ளன. பிள்ளையார் சுழியாகக் கணிசமான முதலீடும் வந்திருக்கிறது.


தகவல் தொழில் நுட்பத் துறையை கவனிக்க ஒரு செயல்படை நிறுவப்பட்டு, அதற்கு முதல்வரே தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். நாட்டின் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதிகள் வரலாறு காணாத வகையில் ஒரேயிடத்தில் கூடி, இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாகச் செலவிட்டு திட்டங்களை விவாதித்திருக்கிறார்கள்.

தகவல் தொழில் நுட்பம் தொடர்பான திட்டங்களுக்கு அரசுத் தரப்பு முட்டுக்கட்டைகள் இன்றி விரைவாக அனுமதி வழங்கப்படும் என்று முதல்வர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

அது மட்டுமல்ல, தமிழகம் அடுத்தப் பத்தாண்டுகளுக்குள் முழுமையான கம்ப்யூட்டர் கல்வியறிவு பெற்ற மாநிலமென்ற நிலைக்கு உயரும் எனவும் முதல்வர் அறிவித்திருக்கிறார்.

கல்வித் துறை, தொழில் துறை, அரசுத் துறை, பொதுமக்கள் என அனைத்துத் துறைகளையும் இழுத்துப் பிணைத்திருப்பது அரசின் முழுமையான ஈடுபாட்டையும் நல்நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

காகிதத் திட்டங்களாக இல்லாமல், ஜெர்மானிய, ஜப்பானிய, தமிழ் மொழிகளில் மென்பொருள் தயாரித்தல் போன்ற புதிய வளமான திட்டங்களும் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தமிழகம் சிலிகான் வாலிக்கு நிகரான ஒரு தொழில்நுட்பத் தலமாக உயருமானால் நாட்டின் பொருளாதாரமேகூட திசை திரும்பி மேம்பட வாய்ப்பு இருக்கிறது.



ஆனால் தமிழக முதல்வர் எத்தனைக்கெத்தனை தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தில் சுறுசுறுப்புக் காட்டியிருக்கிறாரோ, அத்தனைக்கத்தனை மத்திய அரசு தமிழக அரசின் திட்டங்கள் குறித்து மெத்தனம் கொண்டிருக்கிறது.

எண்ணூரில் திரவ பெட்ரோலிய வாயு தொழிலகம் நிறுவ திட்டமிடப்பட்டு அங்கீகாரமும் பெற்றுள்ளது. இந்தத் தொழிலகம் இயங்க, எண்ணூர் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் முடிய வேண்டியது மிக அவசியம். ஆனால், மத்திய அரசுடைய பொறுப்பில் இருக்கின்ற அந்தப் பணிகள் உரிய காலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கிடையே திரவ பெட்ரோலிய வாயு தொழிற்சாலைக்கான டெண்டர்கள் முடிவு செய்யப்படும் தருவாயில் இருக்கின்றன. தாமதப்படுத்தினால், திட்டச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துப் போய்விடும்!

துறைமுகப் பணிகளை உடனடியாகத் தொடங்குங்கள் என்று தமிழக முதல்வர் வேண்டிக் கேட்டு, பிரதமருக்குக் கடிதம் எழுத வேண்டிய நிலைமை! இந்தக் கடிதத்துக்குப் பிரதமரிடமிருந்து பதில் வரவில்லை; தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தியிடமிருந்து பதில் வந்திருக்கிறது! திரவ எரிவாயு தொழில் திட்டத் தாமதத்துக்கு மாநில அரசே காரணம் என்று அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்!

மாநில அரசில் மாற்றுக் கட்சி பொறுப்பு வகிப்பதால் ஒத்துழைப்பு மறுப்பதென்பது பண்பாடற்ற அரசியல் மட்டுமல்ல; தவறான அரசியலும்கூட...

தாமதமின்றியும் தயங்காமலும் ஒத்துழைத்து, மாநில திட்டங்கள் நிறைவேற உதவினால், மத்திய அமைச்சர் தமக்கும் தாம் சேர்ந்த கூட்டணிக்கும் நல்ல பெயரையும் நன்மதிப்பையும் சம்பாதித்துக் கொள்ளலாம்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது அந்த மாநிலத்துக்கோ அங்கே ஆளும் கட்சிக்கோ மட்டுமே பெருமை சேர்க்கும் விஷயமல்ல... மாநில வளர்ச்சி நாட்டினுடைய ஒட்டு மொத்த வளர்ச்சியின் ஓர் அடையாளமே... இதை மறந்து, குறுகிய, கட்சிக் கண்ணோட்டத்தில் செயல்படுவது தேச விரோதமே! ●



அகிரா குரசேவா

ஒரு மே

உலகப் புகழ்பெற்ற ஜப்பானிய திரைப்பட இயக்குநர் அகிரா குரசேவா பதினஞ்சு நாள் முன்னால வரைக்கும் உயிரோட இருந்தார்; இப்ப இல்லைங்கற செய்தி, தீவிர சினிமா ரசிகர்களுக்குப் பெரிய ஷாக். குரசேவா மாதிரி ஒரு perfect film makerனு விரல் நீட்டிக் காட்ட இன்னிக்கு யாரும் இல்லை.

அவரோட 'ரஷோமான்', 'ஸெவன் சமுராய்', 'ரெட் பியர்ட்', 'த்ரோன் ஆஃப் பிளட்', 'ட்ரங்கன் ஏஞ்சல்' எல்லாம் கற்பனைக்கு எட்டாத அற்புதங்கன்னு சொன்னா, தப்பில்லை. குறிப்பாக ரஷோமான்.

இந்தப் படம் வந்து இன்னிக்கு சுமார் நாப்பத்தெட்டு வருஷங்கள் முடியப் போறது. ஆனா குரசேவா பேரைச் சொன்னதும் உடனே ஞாபகம் வரக் கூடிய படம் இது. மனித வாழ்க்கைல 'பொய்மை'ங்கற விஷயம் எப்படி ஒரு தவிர்க்கவே முடியாத அம்சம்ங்கறதை முகத்துல அறையறாப்பல காட்டற படம். (செத்துப் போனவனோட ஆவி கூட மீடியம் மூலம் வந்து இதுல பொய் பேசும்!)

நல்ல சினிமான்னா அது மேற்கத்திய நாடுகள்ளேருந்துதான் வரணும்ங்கறதை முதல் முதல்ல உடைச்சுக்காட்டி, அமெரிக்கர்களே பார்த்து பயந்த டைரக்டர் குரசேவா.

குரசேவா ஃபீல்டுக்கு வந்த காலத்துல ('40களில்) ஜப்பானில் ஸ்டுடியோ முதலாளிகளோட கட்டுப்பாட்டுல இருந்தது, சினிமா உலகம். அவங்க வெச்சது தான் சட்டம். முதலாளிகள் போட்டுக் குடுக்கற பட்ஜெட்டுக்குள்ள, அவங்க விரும்பற மாதிரி படம் எடுத்துத் தரதுதான் டைரக்டர்களோட வேலை. இதையும் உடைச்சவர் குரசேவா.

குரசேவா நிறைய செலவு வைப்பார், சொன்ன நேரத்துல படத்தை முடிக்க மாட்டார், ப்ரொட்யூசர்களை மதிக்க மாட்டார்னு ஏகப்பட்ட கம்ப்ளெயின்ட்ஸ் உண்டு.

ஆனா, சில வருஷங்கள் முன்னால நான் ஒரு குரசேவா ஃபெஸ்டிவல்ல அவரோட சில படங்களைப் பார்த்தபோது, 'உமக்கே நாம் ஆட்செய்வோம்'னு அவர் சொல்றதுக்கெல்லாம் பணிஞ்சுபோறது தப்பில்லைன்னுதான் தோணிச்சு. அத்தனை அற்புதமான films.

Something like an autobiographyன்னு தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைப் புஸ்தகமா எழுதியிருக்கார் குரசேவா. அதுல தன்னோட குருநாதர் யாமமோட்டா பத்தியும் அவர் தனக்கு சினிமா சொல்லிக் கொடுத்த விதம் பத்தியும் ரொம்ப உருக்கமா எழுதறார். சினிமா எடுக்கறது, கேமரா, லைட்டிங், எடிட்டிங், ரீ ரெக்கார்டிங் பத்தியெல்லாம் பல தீர்மானமான அபிப்பிராயங்களை முன் வைக்கிறார்.

அத்தனை தெளிவையும் தீர்மானத்தையும் தனக்கு உண்டாக்கினது தன்னோட குரு யாமாஸான்தான்னு குரசேவா சொன்னாலும் யாமாஸான் என்ன சொல்றார் தெரியுமா?

"குரசேவாவுக்கு, எப்படிக் குடிக்கறதுங்கறதைத் தவிர நான்

சுமி சூப்பர் மார்க்கெட்

வேறெதையும் சொல்லித் தரலை!"

சினிமா தவிர அவருக்குக் கலைப் பொருள் சேகரிக்கிறது, படம் வரையறது, விதவிதமான உணவு வகைகளை ஒரு கை பார்க்கறதுன்னு பல ஆர்வங்கள் இருந்திருக்கு. ஆனா மனுஷர் கொஞ்சம் 'மூடி டைப்'பாம்.

கம்யூனிஸ்ட் இல்லாட்டாலும் அவரோட படங்கள்ல கம்யூனிஸ பாதிப்பு இருக்கும். தான் ஒரு டைரக்டர் ஆன பிறகும் நட்பு முறைல பல இயக்குநர்களுக்கு ஸ்கிரிப்ட் பண்ணிக் கொடுக்கற உயர்ந்த எண்ணம் அவருக்கு இருந்திருக்கு.

குரசேவா இறந்ததுல உலகம் கொஞ்சம் இழந்திருக்கு.

யாகவா முனிவர் Vs சிவசங்கர் பாபா மோதல்தான் போனவாரம் Talk of the town. ரெண்டுபேர் சண்டை போட்டுக்கறதைப் பார்க்கறதுல மக்களுக்கு (including Sumi) என்ன ஒரு குரூர சந்தோஷம்! இதுவே அவங்க தீவிர ஆன்மிகம், சத்-சித்-ஆனந்தம்னு பேசியிருந்தாங்கன்னா

...யின் கதை

ஒருத்தராவது உட்கார்ந்து பார்த்திருப்போமா?

கொஞ்சம் சீரியஸா யோசிச்சா, இந்த மோதலுக்கு என்ன அவசியம்னு ஒரு குழப்பம் வருது. இவர், அவரை ஃப்ராட்னு சொல்லி, எவிடன்ஸ் தூக்கிப் போடறதும் அவர் இவரை ஃப்ராட்னு ப்ரூவ் பண்ண எவிடன்ஸ் காட்டறதையும் தவிர வேற என்னதான் செஞ்சாங்க? கட்சிக் கூட்டங்கள்ல நடக்கறதேதான்! (லாங்வேஜ்கூடப் பெரிய வித்தியாசமில்லை.)

ரெண்டு, மூணுவாரமா ரொம்ப சீரியஸான விஷயங்கள் மட்டுமே எழுதறேன்னு உரிமையோட கோவிச்சுக்கிட்டு, ஒரு டெயில் பீஸ் ஜோக் அனுப்பியிருக்கார் நம்ம ரசிகர் மன்ற உறுப்பினர் சிட்லப்பாக்கம் ஷண்முக சுந்தரம். ஒரே ஒரு வரிதான்! But very sharp and sweet. இது அவரோட சொந்தக் கண்டுபிடிப்புதான்னா, ஹாட்ஸ் ஆஃப்!

புதிய கணித விதி

நேர்க்கோடு என்பது, ஒரு குழந்தைக்கும் அது உடைக்க விரும்பும் பொருளுக்கும் இடையிலுள்ள குறைந்த பட்ச தூரம்!

- சுமி

பக்கம் 96-ல்.



1





2



7



காலேஜ் கார்னர்

8





9



10



11

இந்த வார 'காலேஜ் கார்னரி'ல் இடம் பெறும் மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்களிடம் ''நீங்கள் ஒரு சந்நியாசியாக இருந்தால்...?'' என்று கேட்டதுதான் தாமதம். 'அருள் மழை' பொழிந்து விட்டார்கள்!

1. என். மௌர்னி (எம்.ஏ. ஆங்கிலம்)

பக்தி மிகுந்து முக்தி பெறுவது மட்டுமா சந்நியாசியின் வேலை? வாழ்வில் வழி தவறிப் போவோரை முதலில் மனம் மாற்றுவேன்.

2. டி. பாலாஜி (எம்.ஏ. ஆங்கிலம்)

ஏன் ஸார்.. சந்நியாசிகளுக்கு நல்ல பெயர் இருந்த காலத்திலெல்லாம் இந்தக் கேள்வியைக் கேட்காமல் பேர் கெட்டுப் போயிருக்கும்போது வந்து கேட்டால் நான் என்னத்த சொல்றது?

3. டி. வினோத் கண்ணா (பி.ஏ. ஆங்கிலம்)

பில் கிளின்டனுக்குக் கட்டாயமாகக் காவி உடுத்தி, அவரை என் சிஷ்யனாய் வச்சுக்குவேன்.

4. ஆர்.கே. மணிமுருகன் (பி.பி.ஏ. முதலாண்டு)

முடிஞ்சளவுக்கு எல்லோரையும் நிஜ பிரும்மச்சாரி சன்னியாசிகளாக்கி, நாட்டில் மக்கள் தொகையைக் குறைக்க முயல்வேன்.

5. மு.மு. முத்தையா (எம்.ஏ.தமிழ்)

அரசு நிறைவேத்த முடியாம போன மசோதாவை நான் நிறைவேத்துவேன். 33 சதவீதம் என்ன, நூறு சதவீதமும் பெண்களுக்குத்தான் இடம் என் ஆஸ்ரமத்தில்! (அடிக்க வராதீங்க!)

6. எம். தாஹீரா பானு (பி.எஸ்ஸி கணிதம்)

ஜாதி மத வேற்றுமைகளை நீக்க கிராமம்,



தலைவன் வழி!

கிராமமாய் நடைப்பயணம் போவேன்.

7. ஜி. மாரியம்மாள் (பி.எஸ்ஸி கணிதம்)

இப்ப இருக்கற சூழ்நிலைக்கு நம்மளை ஒரு பரமஹம்சரைப் போலவோ, விவேகானந்தரைப் போலவோ வாழ விடாது நம்ம சமூகம். அதனால் சந்நியாசமே வேண்டாங்க! ஸாரி...

8. எஸ். மகாமீனா (பி.ஏ. தமிழ்)

ஹையா... சாமியார் ஆனா சூப்பர் ஸ்டாரை ஈஸியா சந்திக்கலாம். சந்திச்சு அவர் மனசுல இருக்கிறதையெல்லாம் 'டக்'குன்னு தெரிஞ்சுக்குவேன்!

9. பா. கார்த்திகேயன் (பி.ஏ. தமிழ்)

நாட்டின் ஒரே சந்நியாசியிருந்தாதான் மரியாதை! அதனால முதல் காரியமா மத்த சந்நியாசிகளுக்கெல்லாம் வேலை வெட்டி கிடைக்க ஏற்பாடு செஞ்சி, அனுப்பிடுவேன்.

10. டி. ஜெகவீரபாண்டியன் (பி.எஸ்ஸி முதலாண்டு)

பல கன்னிகளுக்குக் கணவனாக, பல அரசியல்வாதிகளுக்கு ஆலோசகனாக இருந்து அடிக்கடி கருக்கலைப்பும் ஆட்சிக் கலைப்பும் நடக்க ஏற்பாடு பண்ணும் சன்னியாசியாக இல்லாம, கூடியவரை யோக்கியமாக இருக்க முயற்சி செய்வேன்.

11. எம். பரசுராமன் (பி.எஸ்ஸி, இரசாயனம்)

'திருவோடு' சின்னம் வாங்கி, தேர்தலில் போட்டியிடுவேன்.

12. செ. விஜயபாஸ்கரதாஸ் (பி.எஸ்ஸி. கணிதம்)

என் ஆசிரமத்தில் பெண்களுக்கு அனுமதி இல்லை!

13. வி. சிவக்குமார் (எம்.ஏ தமிழ்)

ஒருபுறம் இல்லற வாழ்க்கையும் இருக்கும். அப்பத் தானே சந்நியாசத்தின் மீது ஈடுபாடு கூடிக் கிட்டே போகும்!

14. ஆ. சேவியர் பிரகாஷ் (எம்.ஏ தமிழ்)

கனி தின்ன



16



17





18

விருப்பமில்லை. ஆளை விடுங்க.

15.பி.முத்துக்குமார் (எம்.எஸ்ஸி. இரசாயனம்)

நேரே வாஜ்பாய்கிட்டேயும், நவாஸ் ஷெரீஃப்கிட்டேயும் போய், 'ஒழுங்கா இந்திய - பாகிஸ்தான் நல்லுறவு ஏற்பட வழி பண்ணுறுங்க; இல்லைன்னா ரெண்டு பேர் மண்டையும் சுக்கல், சுக்கலா வெடிச்சு சிதறும். காளியாத்தா என் கனவில சொல்லிட்டா..' அப்படின்னு புருடா விடுவேன்.

16. து. சங்கையா (எம்.ஏ. தமிழ்)

தனிமை வேண்டி இமயம் போவேன். தேர்தல் வந்தால் வெளிநாடு போவேன். அவ்வப்போது இலவசத் திருமணம் நடத்தி வைப்பேன். ரொம்பப் போரடிச்சா ஒரு படம் நடிப்பேன்..ஹி..ஹி.. நான் எப்பவும் தலைவன் வழிதாங்க!

17. எஸ். மதிப்ரியா (எம்.எஸ்ஸி, தாவரவியல்)

சந்நியாசியாயாச்சு. அப்புறமென்ன? முதல்ல என் சிஷ்யைகிட்ட அப்பாயின்மெண்ட் வாங்கிக்கிட்டு அப்புறமா வந்து சந்திங்க. பதில் சொல்றேன்.

18. ஏ.ஹன்னா செல்வ குமாரி (எம்.எஸ்ஸி, தாவரவியல்)

ஏதாவது சாட்டிலைட் டிவி.யில அரை மணி நேரம் 'ஸ்லாட்' வாங்கி கோமாளித்தனமாய் பேட்டியும், ஆசிர்வாதமும் வழங்க வேண்டியதுதான். நானும் பிரபலமாவேன். மக்களுக்கும் ஜாலியாய்ப் பொழுது போகும்.

19. ஆர். அங்கயற்கண்ணி (எம்.ஃபில், தமிழ்)

என் ஆசிரமத்தில் எவ்வளவு எலிகள் இருந்தாலும் பூனை மட்டும் வளர்க்க மாட்டேன். (பரமஹம்ஸர் சொன்ன கதை தெரியும்தானே?)

20. வி. பாலமுரளி (பி.எஸ்ஸி, கணிப்பொறியியல்)

என் ஆசிரமத்தில் கழுறும் மெத்தைகளுக்கோ, வீடியோ கேமிராக்களுக்கோ நிச்சயம் இடமிருக்காது.

21. எஸ். சேதுராஜா (பி.எஸ்ஸி, தாவரவியல்)

கடவுள் பக்தியைவிட, தேச பக்தியையே மக்களிடம் பரப்ப முயற்சி செய்வேன்.

22. எம்.வி. மேகநாதன் (பி.எஸ்ஸி இயற்பியல்)

நான் சந்நியாசியானால் பேப்பர்களிலும், ஜெயின் மாதிரியான கமிஷன்களிலும் என் பெயரும் அடிபடும். வேறென்ன?

23. ஜோதி ராமலிங்கம் (பி.எஸ்ஸி, இயற்பியல்)

சந்நியாசியாகி விட்டால் முற்றும் துறந்து விடவேண்டும். புகழுக்கோ, பெருமைக்கோ ஆசைப்படக் கூடாது. எனவே பேட்டி வேண்டாம்.. ப்ளீஸ்!

24. ஜி. பாலாஜி (பி.ஏ. ஆங்கிலம்)


கம்ப்யூட்டரில் யாகம் நடத்தி, இன்டர்நெட் மூலம் இறைவனை அழைக்கும் மாடர்ன் சந்நியாசியாவேன்.



25



26



27

25. இ. ரேவதி (பி.எஸ்ஸி இயற்பியல்)

சந்நியாசி என்றாலே 'போலி' என்றாகி விட்ட இன்றைய நிலையில், அன்னை தெரஸாவின் இழப்பை ஈடு செய்யும் வகையில் மற்றொரு தெரஸா போல் இயங்குவேன்.

26. அ. செல்வமணி (எம்.ஃபில், தமிழ்)

கொலை வேண்டேன், களவு வேண்டேன்; தலைமைப் பீடம் வேண்டேன், பிற உயிரிடத்து காதல் மட்டுமே வேண்டுவேன்.

27. ம. கருணாநிதி (எம்.ஏ, தமிழ்)

'விழிபுணர்ச்சிகளை' தவிர்த்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவேன்.

28. ஆர். ரவீந்திரன் (எம்.ஃபில், தமிழ்)

மார்த்தாண்டம் மகேசனாகவோ, விராலிமலை வீரனாகவோ இல்லாமல் மெய் வழி போதிக்கும் உண்மை சந்நியாசியாய் இருப்பேன்.

29. ஏ. தனசுந்தரி (எம்.எஸ்ஸி தாவரவியல்)

'காவி' கடிதார் போட ஆரம்பிக்க வேண்டியதுதான்.

30. எம்.எஸ். பத்மபிரியா (எம்.எஸ்ஸி, தாவரவியல்)

மூடப் பழக்கங்களை அறவே ஒழிப்பேன்.

சந்திப்பு: **கிரண் நியூஸ்**
படங்கள்: **'நேஷனல்' சுந்தர்**





வட்டமேஜை

✉ இயக்குநர் மணிரத்னத்தின் நேர்காணலில் உமது நிருபர்களின் கேள்விக் கணைகளை அவர் தம் விடைகளால் எதிர்கொண்ட விதம் பாராட்டுக்குரியது! அவரின் மிகச் சிறந்த படம் எது என்ற கேள்விக்கு அடுத்தப் படம் தான் என்ற பதில் அக்கலைஞனின் கலை யார்வத்தைப் பிரதிபலித்தது!

நெய்வேலி - 9, க. சுந்தர்.

✉ 'இருவர்' படத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம் வரலாற்றை அப்பட்டமாகச் சொன்னதா? எம்.ஜி.ஆரை தகுதிக் குறைவு செய்து, மற்றொரு தலைவரைப் புகழ்ந்து விட்டு, இப்போது வசதியாக இப்படி பேட்டி கொடுக்கும் மணிரத்னத்தின் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை!

பொன்மலை, ஆர். பிரகாஷ்

சிக்கல் வரப் போகுதய்யா!

✉ 'படையப்பா' படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் அரைகுறை மனத்துடன் இசை அமைக்க இருக்கிறார் என்று எழுதிவிட்டீர்களே. ஏதாவது 'சிக்கல்' வந்துவிடப் போகிறது!

கோவை - 14, ஏ.எஸ். இராமசாமி

✉ விழுப்புரம் கலெக்டரின் நடைப் பயணம் உண்மையில் தேவையான ஒன்றுதான். அரசின் திட்டங்கள் சரிவர மக்களைச் சென்று அடையாததாலேயே சில சமயங்களில் அவை பயன் தராமல் போய் விடுகின்றன. சம்பந்தப்பட்ட இடத்துக்கே சென்று, அங்கு உள்ள உண்மை நிலைமையை எடுத்துரைத்த கல்கிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

மயிலாடுதுறை, எல். துர்காதேவி.

✉ ''மழையைக் கட்டும் மாயை'' படித்தேன். ஒரு சமூகக் கொடுமையையும், மூட நம்பிக்கைகளையும் இந்த அளவு நகைச்சுவையுடன் அங்கதத்துடன் சாட அமரர் கல்கியால் மட்டுமே முடியும். எப்போதோ நடந்த விஷயத்தை இப்போது படிக்கும் போதும் இப்படி ரசிக்க முடிகிறதே. 1934ல் படித்தவர்களுக்கு எத்தனை ஆனந்தமாய் இருந்திருக்கும்!

நெல்லை - 53, தி.சு. பாலசுப்பிரமணியன்.

✉ "கள்ளச்சாராயம் கற்பித்த பாடம்" என்ற தலையங்கக் கருத்துக்களைப் படித்தேன். நியாயமான கருத்துக்களை மனிதாபிமானத்துடன் கல்கி எடுத்துச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது.

விழுப்புரம் - 2, வை. வெங்கடேசன்.

✉ 'சமத்துவக் குடும்பத்துக்குச் சமத்துவபுரம் கிடைக்குமா?' கட்டுரை கல்கியில் இடம் பெற்றுவிட்ட பிறகு எதற்குக் கவலை? இனி கலைஞர் கவனித்துக் கொள்வார்!

பெங்களூர், மு. புஷ்பராசன்.

✉ 'குண்டு ஒண்ணு வெச்சிருக்கேன்' மூலம் எங்கள் மனத்தில் அழியாத இடம் பெற்று விட்டார் கிருஷ்ணா.

புதுக்கோட்டை - 24, ப. ராமகிருஷ்ணன்.

✉ 'நான் சினிமா நடன இயக்குனரானால்' என்ற கேள்விக்குப் 'பணம் முக்கியம் இல்லை. அதை சம்பாதிக்க வேறு வழிகள் எத்தனையோ உள்ளன' என்று கடைசியாகக் கூறியிருந்தேன். ஆனால் நான் கூறியதாக வந்த கருத்தில் 'எனக்குப் பணம் வேணும்; அதுக்கப்புறம்தான் மத்தது எல்லாம்' என்று தவறாக வெளியாகி உள்ளது. கூடவே 'ஜி' என்கிற எனது இனிஷியல் 'டி' என்று தவறாக வெளியாகியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாலாஜாபேட்டை, ஜி. தமிழரசி



✉ இவ்வார கார்டூன்கள் மூன்றும் சுருங்கச் சொல்லி நிறைய விளங்க வைத்து விட்டன!

சிதம்பரம் - 1, ஸ்ரீ வித்யா காளிதாஸ்

வைரம் ஜொலிக்கிறது வாழ்க்கை இனிக்கிறது

எனது பெற்றோருக்கு ஆறு குழந்தைகள். மூன்று ஆண்கள். மூன்று பெண்கள். நான் அவர்களின் மூத்த பெண். அதனால், அவர்கள் வாழ்வில் நடந்த சுகங்கள், சோகங்கள், அவற்றை அவர்கள் சமாளித்த விதம் எல்லாவற்றையும் அறிந்தவள் நான். என் தாய் சுக துக்கங்களை ஒன்றாகப் பாவிக்கத் தெரிந்தவர். எங்கள் ஆறு பேரையும் நன்கு படிக்க வைத்து, வேலையில் அமர்த்திட, அவர்கள் செய்த தியாகம், மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் சொல்லால் விவரித்திட முடியாது. இன்று என் அண்ணன்கள் இருவரும் பாங்க் மானேஜர்கள். தம்பியோ, எண்ணூர் தெர்மல் பவர் ஸ்டேஷன்-ல் எலக்ட்ரிகல் என்ஜினியர் ஆக இருக்கிறான். தம்பி +2 முடித்த சமயம், அப்பா ரிடையர் ஆகி விட்டார். அவனுக்கு மெரிட்டில் என்ஜினியரிங் சீட் கிடைத்தது. ஆனாலும் மேற்கொண்டு படிக்க வைக்க பணம்...? அது சமயம் கை கொடுத்து உதவியது ஸ்ரீராம் சிட்ஸ் தான். என் அப்பா தொடர்ந்து ஸ்ரீராமில் சீட்டு கட்டி வந்தார். அவர் காட்டிய வழியில், நாகப்பட்டிணத்தில் இருந்த போது நானும் ஸ்ரீராமில் சீட்டு கட்டி வந்தேன். பின், என் வீட்டுக்காரருக்கு மதுரைக்கு மாற்றல் கிடைத்து விட்டதால், மதுரை மேலமாசி வீதியில் உள்ள ஸ்ரீராம் கிளையில், தொடர்ந்து கட்டி, தற்சமயம் அந்த சீட்டும் நிறைவு பெற்று விட்டது. விரைவிலேயே இன்னொரு சீட்டும் சேர உள்ளேன்.

எனக்கும், எனக்கடுத்த தங்கைக்கும் எப்படியோ தங்களிடமிருந்த நகை, வெள்ளிப் பாத்திரங்களை வைத்துக் கல்யாணம் செய்து கொடுத்தனர் எனதருமை பெற்றோர். என் கடைசி தங்கையின் திருமணத்தின் போது, தந்தை மனஉறுதியுடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் கலங்காமல் ஸ்ரீராம் கிளைக்குச் சென்று, தான் கட்டியிருந்த சீட்டின் பேரில், பணத்தைத் தள்ளி எடுத்து, கல்யாணத்தை இனிதே நடத்தி முடித்தார். இத்தகைய அருமையான எங்கள் பெற்றோரின் 60ம் ஆண்டு நிறைவு விழாவை (சஷ்டி அப்த பூர்த்தி) நாங்கள் ஆறு பேரும் சேர்ந்து மிகவும் கோலாகலமாக நடத்தினோம். அது சமயம் எடுத்த போட்டோவைத் தான்



நான் இணைத்துள்ளேன்.

இதே போல் ஸ்ரீராம் சிட்ஸும், மேலும் பல சந்தாதாரர்களைப் பெற்று, வைர விழா, பவள விழா என கோலாகலமாகக் கொண்டாடி வாழ்த்துக்கள் பல!

ஜெயா சம்பத்
மதுரை

இவருடைய செய்தித்தாள் மக்கள் கையில். மக்கள் தீர்ப்பு இவர் கையில்.



இது, நாம் படைத்த அரசு என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் இதை உருவாக்கி, ஆட்டிப் படைப்பது இந்த பத்திரிகை ஆளுநரும் இவர் கூட்டாளிகளும். இப்போது நாம் செய்யக் கூடியதெல்லாம், பார்த்துக்கொண்டிருப்பதுதான்.

அக்னி

260 எபிஸோடுகளை
கொண்ட பிரம்மாண்டமான புதிய தொடர்.

VIJAY TV

வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை.
இரவு 7.00 மணி முதல் 7.30 வரை.



உயிரே... 200 பட அனுபவம்!

'உயிரே' மூலம் 'டப்பிங்' ஹீரோவாகத் தமிழ்ப் பெரும் ரசிகர்களுக்கு அறிமுகமான ஷாருக்கான், விரைவில் ஒரு நேரடி தமிழ்ப்படத்தில் அறிமுகமாகப் போகிறார் என்று பேச்சு அடிபட்டது.

ஊட்டிக்கு ஒரு படப்பிடிப்புக்குச் செல்லும் வழியில் பெங்களூரில் இறங்கிய ஷாருக்கானை மடக்கி, நிஜமா என்று கேட்டோம்.

''நிஜமென்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம். உங்கள் ஊர் விஜயுடன் இணைந்து ஒரு படத்தில் நடிக்க ஏவி.எம். நிறுவனம் கேட்டுள்ளது. இன்னும் முடிவு செய்யவில்லை. 'உயிரே'வை தமிழ் மக்கள் எப்படி வரவேற்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டு முடிவு செய்யலாமென்று இருக்கிறேன்."

''மணிரத்னத்தின் இயக்கத்தில் நடிப்பது பற்றி- நடித்தவர்கள் ஒருத்தர் விடாமல் ஓஹோவென்று புகழ்ந்து தள்ளுவது வழக்கம். நீங்கள் எப்படி?"

"அந்தப் புகழ்ச்சி காரணமில்லாததில்லையே! இந்த ஒரு படத்தில் நடித்த அனுபவம், என் இத்தனை வருஷ நடிப்புக்கே ஒரு அர்த்தம் சேர்த்திருக்கிறது. வெளிப்படையாக ஒன்று சொல்லட்டுமா? அவரது 'வேலை வாங்கும் ஸ்டைல் (நடிகர்களை இஷ்டப்படி நடிக்க விடுவது) என்னைக் கலவரப் படுத்தியது. முதலில். இந்த ஆள் சொதப்பிவிடுவாரோ என்று பயந்தேன். பிறகு ரஷ் போட்டுப் பார்த்தபோதுதான் என் பயம் நீங்கி வியப்பு ஏற்பட்டது. எனக்கு இப்படி ஒரு திறமையா என்று நானே வியக்கும்படி இருந்தன காட்சிகள்! 'தில்ஸே'வில் ஒப்பந்தமான ஒரே காரணத்தால் நான் சில படங்களில் நடிக்கிற வாய்ப்பை இழந்தேன் என்பது உண்மைதான். ஆனால், இந்த ஒரு படமே எனக்கு இருநூறு படங்களில் நடித்த அனுபவத்தையும் திருப்தியையும் அளித்து விட்டது."

"தில்ஸேவை பெங்களூரில் வெளியிடுவதில் ஏதோ பிரச்னை- கோர்ட் தடை விதித்துள்ளது என்றும் இங்குள்ள விநியோகஸ்தர்களிடம் பேசிச் சரி கட்டவே நீங்கள் வந்துள்ளதாகவும் கூறப் படுகிறதே?"

''அபாண்டம். இங்குள்ள எந்த டிஸ்ட்ரிப்யூட்டரையும் எனக்குத் தெரியாது. தவிர நான் படத்தின் தயாரிப்பாளர் அல்லவே! நடித்ததுடன் என் பங்கு ஓவர். இங்கு படம் வெளியாவதில் பிரச்னை என்பதே நீங்கள் சொல்லித்தான் தெரியும்."

"மாதுரியுடன் இனி நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறீர்களாமே?"

"என்னை ஏன் வம்பில் மாட்டி விடுகிறீர்கள்? இரண்டு வருடங்களாக நான் அவருடன் எந்தப் படத்திலும் நடிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் எங்களுக்குள் எந்தப் பிரச்னையும் இல்லை. இப்போது ஊட்டியில் படப்பிடிப்புக்குப் (மோரா நாம் தோஸ்த்) போய்க் கொண்டிருக்கிறேனே, இந்தப் படத்தில் எனக்கு மாதுரிதான் ஜோடி. ஒரு விஷயம். நான் பத்திரிகையாளர்களைச் சந்திக்க மறுப்பதன் காரணமே இதுதான். ஏதாவது புரளி கிளப்பி விட்டு விடுகிறீர்கள்!" (சிரிக்கிறார்) ●

பேட்டி: நீலா

காதில் விழுந்தவை



ரகசியம், பரம ரகசியம்!

● ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே நடக்கும் மோதல்களில் பல இந்து கோயில்கள் குண்டு வீச்சால் சேதமடைந்திருப்பதாக வாஜ்பாய் அரசின் கவனத்துக்கு வைகோ கொண்டு வந்திருக்கிறார். இதன் விளைவாக, நாட்டிலேயே எல்லோரது மதிப்பையும், மரியாதையையும் பெற்ற அந்த மடத்தைச் சார்ந்த பெரியவருடன் அதிகாரிகள் கலந்து பேசினார்கள். இப்போது மடத்தைச் சேர்ந்த ஒருவர் கோயில்களின் நிலையைக் கண்டு வர ஸ்ரீலங்கா செல்ல இருக்கிறாராம். பின்பு தேவையானால் மடத்தின் பெரியவரே கடல் தாண்டிச் செல்லக் கூடுமாம். பரம ரகசியமான இந்த உண்மை இப்போது நம் காதில் விழுந்து விட்டதால், சம்பந்தப்பட்டவர்கள் மறுப்பதற்கும் நிறைய வாய்ப்பு இருக்கிறதாம்.

● சமீபத்தில் மத்தியப் பிரதேசம், பச்மார்ஹியில் சோனியா காங்கிரஸின் உரத்த சிந்தனை மாநாட்டிற்குத் தமிழ்நாட்டிலிருந்து திண்டிவனம் ராமமூர்த்தி, குமரி அனந்தன், பிரபு ஆகியோர் சென்றிருந்தனர். "புது நிர்வாகிகள் பற்றியெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்; முதலில், இருப்பவர்களைக் கொண்டே கட்சியை வளர்க்கப் பாருங்கள். த.மா.கா.வில் ஊசலாடுபவர்களை உடனே கட்சிக்குக் கொண்டு வாருங்கள்'' என்று சோனியா முன்னிலையில் சற்றுக் கண்டிப்புடன் சொன்னாராம் மணி சங்கர் அய்யர். மபியிலிருந்து வந்தவுடன் திண்டிவனத்தார், கராத்தே தியாகராஜன், அடைக்கலராஜ் ஆகியோருடன் ஆலோசித்தாராம். தமாகா சட்டமன்ற உறுப்பினர்களில் கொஞ்சம் 'வீக்காக' இருப்பவர்களை அடையாளம் காண்கிறார்களாம். இதற்கிடையில், 'போகிறவர்கள் போகட்டும்' என்ற ரீதியில் மூப்பனார் சொல்வதாக தமாகா வட்டாரங்கள் சொல்கின்றன.

● வைகோ பேரணிக்கு வர இருக்கும் வட இந்தியத் தலைவர்களுக்கு திராவிட இயக்கத்தைப் பற்றி என்ன தெரியும்? இந்தக் கேள்வி மதிமுக வட்டாரத்தில் எழ, திராவிட இயக்க வரலாற்றைப் பற்றி ஆங்கிலத்தில் சிறு புத்தகம் தயாராகி விட்டது. இன்று தமிழ்நாட்டில் திராவிட இயக்க வரலாற்றைப் பற்றித் துல்லியமாக அறிந்த ஒரு சிலரில் மதிமுகவின் ஏடான 'சங்கொலி'யின் ஆசிரியர் திருநாவுக்கரசும் ஒருவர். அவர் தலைமையில் உள்ள குழு இந்த ஆங்கிலப் புத்தகத்தைத் தயாரித்திருக்கிறது. இந்த நிலையில் பேரணிக்கு வாஜ்பாய் வருவது உறுதி என்றாலும் அத்வானி வருவது கொஞ்சம் சந்தேகமே என்கிறார்கள். ஜெவை இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்பும் சில பா.ஜ.க. பிரமுகர்களும், தில்லி தொழிலதிபர்களும் 'அழைப்பு வரும்போது, யாராவது ஒரு முக்கிய பாஜக புள்ளி திருச்சி அ.தி.மு.க. விழாவுக்கும் சென்று கலந்து கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துகிறார்களாம்.

● தமிழகத்தில் அரசு அதிகாரி ஒருவர் திடீரென மாற்றப்பட்டதற்கு, தம்பித்துரைதான் காரணம் என்றெல்லாம் சொல்லப்பட்டது அல்லவா! இது ஒருபுறம் இருக்க, அவர் பொறுப்பில் இருந்த எட்டு மாத காலத்தில் நன்றாக இருந்த தலைவர் பங்களாவை மராமத்து செய்யும் வகையில் 27 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டதாம். இது சம்பந்தமாக இப்போது புலனாய்வு அதிகாரிகள் குடைந்து கொண்டிருக்கிறார்கள்.


● தமிழக அரசின் கால்நடைத் துறையில் ஏதாவது மாற்றல் வேண்டுமானால் சேலத்தில் உள்ள பெரிய அதிகாரி ஒருவரை கவனித்தால் போதுமாம். சென்னையில் இருந்து உத்தரவுகள் பறக்குமாம்.

— தில்லப்பா

சனாதன தர்ம பரிபாலனா அறக்கட்டளை

(பதிவு செய்யப்பட்டது)

62, V மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை – 600 035.
தமிழ்நாடு போன்: 4334465



காஞ்சிபுரம் மாவட்டம்: அச்சரப்பாக்கம், பெரும்பேறு, மேல் மருவத்தூர் ஆகிய திருத்தலங்களுக்கு அருகில் உள்ளது விளாங்காடு என்னும் கபத்வாரண்ய ஷேத்ரம்.

விளாங்காடு ஸ்ரீ ஆதிமூல நாராயணன் ஆலயப் பணி 4.6.98 அன்று தொடங்கப்பட்டது.


கலியுக வரதன், கண்கண்ட தெய்வம், கஜேந்திர வரதனின் அருள், கலிக் கொடுமை நீக்கி, கருணை பாலிக்கின்றது. நாரதர் பிருகு முனிவருடன் நவக்கிரக மண்டல ரகசியங்களை நிலை நாட்டிய திருத்தலம் விளாங்காடு. இது நவக்கிரகங்களால் ஏற்படும் சகல தோஷங்களையும் நீக்கும் திருத்தலம். இக பர சௌபாக்யம் அருளும் ஸ்ரீதேவி பூதேவியுடன் ஸ்ரீ ஆதிமூல நாராயணன் எழுந்தருளியுள்ள திருத்தலம். கருடாழ்வார் கருணையையும், சுதர்ஸன ஆழ்வார் பெருமையையும் பற்றிப் புராதன ஓலைச் சுவடிகள் வர்ணிக்கின்றன.

இத்துணை மகிமை வாய்ந்த ஆலயத்தின் திருப்பணி தொடர்ந்து நடைபெறவும், மஹா சம்ப்ரோஷணம் நிறைவேறவும் அன்பர்கள் தங்களால் இயன்ற பொன், பொருள் கைங்கர்யங்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காசோலை அல்லது டிராப்ட் அனுப்புவோர் **சனாதன தர்ம பரிபாலனா டிரஸ்ட்** என்னும் பெயருக்கு மேற்கண்ட முகவரியில் அனுப்பவும்.

குறிப்பு: வருமான வரிச் சட்டத்தின் 80-ஜி பிரிவின் கீழ் வரிவிலக்கு கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. நன்கொடை அளிப்பவர்களுக்கு வரிவிலக்கு ஆணையின் நகல் அது கிடைக்க பெற்றவுடன் அனுப்பி வைக்கப்படும்.

எல்லாமே என் பொண்டாட்டிதான்



சிக்கலில்லாமல் தொடங்கும் கதை, சலிப்பில்லாமல் தொடருகிறது. அப்புறம் தான் தொபீர்.

நான், தன் குடும்பம், புறா வளர்த்தல், பசு கறத்தல், வாசல் கோலம், வரட்டி தட்டல் என்று இருக்கிறார் ராதிகா. ஆளும் கட்சியின் மாவட்டச் செயலாளரான தம் கணவரைப் பார்க்க வீட்டுக்கு வருபவர்களைக் கூட 'கட்சி, அரசியலையெல்லாம் ஆபீசோடு வச்சுக்குங்க' என்று விரட்டுகிறார். ஆனால் காலத்தின் கட்டாயத்தால் எம்.எல்.ஏ. வாகிறார். நியாயத்துக்கெதிராகக் கணவன் என்பதால், கணவனுக்கெதிராகச் செயல்பட வேண்டிய கட்டாயம்! சவால் விட்டுப் பிரியும் கணவன் இறுதியில் உணர்ந்து, மன்னிப்புக் கோரி, இணைகிறான்.

தொகுதியில் ஒரு பெண் வேட்பாளரைத்தான் தன் கட்சி நிறுத்தப் போகிறது என்று முடிவானதும், தன் மனைவியை டம்மி எம்.எல்.ஏ.வாக்கி, தான் நினைப்பதையெல்லாம் சாதிக்க மணிவண்ணன் முடிவெடுப்பதும், அப்படி முடியாமல் போவதும் சுவையான திருப்பங்கள். பெண்கள் இடஒதுக்கீட்டை சுவாரசியமாக அலசப் போகிறார்கள் என்று நிமிர்ந்து உட்கார்ந்தால், திசைமாறிப் போய் ஏமாற்றமடைய வைக்கிறார் டைரக்டர்.

வில்லன் அல்ல எனும்படியான சிக்கலான ஒரு பாத்திரத்தை மணிவண்ணன் பிசிறுதட்டாமல் கையாண்டிருக்கிறார். இனியாவது மாறுபட்ட ரோல்களில் அவரைப் பார்க்கலாமா?

முதலமைச்சரிடம் அழும் இறுதிக் கட்டம் வரை ராதிகா துலக்கிவிட்ட பளீர்.

அனாதையாக இருந்து ஒரு தம்பதியரால் வளர்க்கப்படுபவன் அவர்களை அப்பா/ஐயா, அம்மா என்றுதானே கூப்பிட வேண்டும்? பின் ஏன் மணிவண்ணன் - ராதிகாவை ராம்கி, 'மாமா - அத்தை' என்கிறார்? வேறொன்றுமில்லை, அவர்கள் மகள் சங்கவியைக் கல்யாணம் செய்துகொண்டு கதைக்கு உதவத்தான்!

இப்படிப் பல பலவீனங்கள் உண்டு!

ராம்கி மட்டுமல்ல, சுயநல அரசியல்வாதி குமரிமுத்து, டிபிகல் குப்பத்துக்காரராக வடிவேலு, அப்படி இல்லாத குப்பத்துக்காரராக சார்லி, வசந்தசேனை மாதிரி விசித்ரா - எல்லோருடைய திறமைக்கும் அவ்வப்போது தீனிபோடும் காட்சிகளை அளித்திருக்கிறார் இயக்குனர்.

ஒரு கட்டத்துக்கு மேல் ஒரு வட்டத்தைத் தாண்டாமல் அடம்பிடிக்கிறது கதை. சின்ன வீட்டில் மணிவண்ணன் அவமானம், துப்பாக்கியோடு சத்திரத்தில் வில்லன், குண்டு வீச்சு, மருத்துவமனை என்று படுஅபத்தமாகக் காட்சிகளை நகர்த்தி 'உச்சகட்ட எரிச்சலோடுதான் ரசிகர்களை வீட்டுக்குப் போகச் செய்வோம்' என்று ஏதாவது வேண்டுதலோ?

— ஜி.

கலப்படம், உஷார்!



• பாதிக்கப்பட்ட நோயாளிகள்

'எபிடமிக் ட்ராப்ஸி' என்னும் எமன்!

தில்லி மக்கள் 1995ல் வந்து, சில உயிர்களைக் குடித்துப் போன 'ப்ளேக்' (plague) நோயை மறப்பதற்குள் இன்னொரு எமன் இப்போது வந்திருக்கிறது. 'எபிடமிக் ட்ராப்ஸி' (Epidemic dropsy) எனும் உருவில். ஆனால் இது ஏதோ ஒரு கிருமியால் உண்டாகும் நோய் அல்ல. லாபம் காண்பதற்காக, உணவுப் பொருளில் கலப்படம் செய்த சில பேராசைக்காரர்களால் உண்டானதே!

கடுகு எண்ணெய், வட மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உபயோகப்படுத்தப்படுகிற முக்கிய சமையல் எண்ணெய். இதனுடன் ஆர்கிமோன் மெக்ஸியோனா (argemone mexiana) எனும் விஷச் செடியிலிருந்து கிடைக்கும் எண்ணெயும் கலந்து விற்றால் விற்பவர்களுக்குக் கொள்ளை லாபம்! வாங்குபவர்களுக்கு நஷ்டமும் உடல் கஷ்டமும்.

இந்த மாதிரி நடந்த கலப்படத்தால், இன்று தில்லியில் 26 பேர் மரணம். 400 பேர் வெவ்வேறு மருத்துவமனைகளில் நோயோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். மரணமடைந்த பெரும்பாலோர் 16லிருந்து 25 வயதுக்குட்பட்டவர்கள். மேலும் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

'ஆர்கிமோன் மெக்ஸியாணா' என்பது உடனே கொல்லும் விஷம் அல்ல. கொஞ்சம் கொஞ்சமாக உடலில் சேரும் இந்த நஞ்சு, முதலில் கால் மற்றும் உடல் வீக்கம், வயிற்றுப் போக்கு, வாந்தியுடன் ஆரம்பிக்கும். தொடர்ந்து கண்ணை பாதித்து குருடு வரை கொண்டு போய் விடும்! தொடர்ந்து உண்டால், இந்த நஞ்சு கிட்னியையும், இதயத்தையும் பாதித்து, பின் மரணத்தில் கொண்டு போய் விடும்!

இந்த விஷம் தவறாகக் கடுகு எண்ணெயில் கலப்பதற்கு சான்ஸ் மிகச் சிறிது. ஏனென்றால் கடுகுச் செடி, தான் வளரும் இடத்தில் வேறெந்தச் செடியையும் வளர விடாது. கடுகு

எண்ணெய்யைப் பெருமளவு உபயோகிக்கும் மேற்கு வங்காளத்தில், ஐம்பதுகளில் பெரும் அளவில் பாதிப்பை உண்டு பண்ணியது இந்த நோய். அதன் பின் 1954ல் இந்திய அரசாங்கம் உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. இச் சட்டம் பலமுறை திருத்தப்பட்டு, இன்று கலப்படம் செய்பவருக்கு ரூ. 1000 வரை அபராதமும், 18 மாதம் சிறைத் தண்டனையும் உண்டு.

புதுதில்லியில் நடந்தது என்ன? தொடர்ந்து ஒரே பகுதியில் இருந்து மக்கள் பல்வேறு மருத்துவமனைகளில்



• கமல்குமார்



• அனில் குமார்

உடல் வீக்கத்துடன் சேர்க்கப்பட, மருத்துவர்கள் 'எபிடமிக் ட்ராப்ஸி' என சந்தேகப்பட்டு, அவர்கள் வீட்டு எண்ணெய்யைப் பரிசோதிக்க, அதில் விஷம் கலந்திருப்பது தெரிந்தது. அவர்களுக்கு எண்ணெய் விற்ற கடைகளில் இருந்த எண்ணெயிலும் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. தில்லி அரசாங்கம், உடனே கடுகு எண்ணெய் விற்பனையைத் தடை செய்தது. ஆனால் அதற்குள் காலம் கடந்து விட்டிருந்தது. புகழ் பெற்ற 'தாரா'(Dhara) நிறுவனத்தின் எண்ணெயில் சமைத்தவர்களுக்கும் இதே கதி! அதையும் பரிசோதிக்க, அதிலும் கலப்படம்!

இதற்கெல்லாம் காரணம் கமல்குமார் அகர்வால் என்பவரும் அனில்குமார் என்பவரும்தான். தில்லியின் கடுகு எண்ணெய் உற்பத்தியாளர்களில் 'பெரியவர்கள்' இவர்கள்தாம். கலப்படம் செய்யப்பட்ட எண்ணெய் என்று தெரிந்தும் கடைகளுக்கும், நேஷனல் டெயரி(dairy) டெவலப்மென்ட் போர்டுக்கும்(Dhara) விற்றவர்கள்.

தில்லியைத் தொடர்ந்து மேற்கு வங்காளமும், அதைத் தொடர்ந்து பிற வடகிழக்கு மாநிலங்களும் மஹாராஷ்ட்ராவும் கடுகு எண்ணெய்க்குத் தடை விதித்திருக்கின்றன.

தில்லியின் ஹெல்த் மினிஸ்டர் ஹர்ஷ வர்த்தன் 'கலப்படம் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும்படி சட்டம் மாற்றப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார். இதைப் படிக்கும் தமிழர், 'நமக்கு ஒன்றுமில்லை, நாம் என்ன கடுகெண்ணெயா உபயோக்கிறோம்?' என்று நினைக்கலாம்.

மஹாராஷ்ட்ராவில் இந்த நோய் கடலை எண்ணெயை உபயோகிக்கிறவர்களுக்கும் வந்திருக்கிறது!

புது தில்லியிலிருந்து:
ஆனந்தி நாகராஜ்

''என் கணவர் பத்திரிகையில் வர்ற வாசகர் கடிதத்தை மட்டும் படிக்கவே மாட்டார்!''

''ஏன் அப்படி?''

''அடுத்தவருக்கு வந்த லெட்டரை எல்லாம் படிக்கக் கூடாதாம்!''

– மதுரை என். உஷா தேவி



ஜன்னல்



த. ரத்தினாபதி
(அறிமுக எழுத்தாளர்)


அன்புள்ள காதலரே,

இப்ப நீங்க எங்க இருக்கீங்க, என்ன பண்றீங்கன்னு எனக்குத் தெரியாது. என் ஞாபகம்கூட உங்களுக்கு இருக்கான்னு தெரியாது. ஆனா எனக்குக் கல்யாணம் ஆன பிறகும், நாம ரெண்டு பேரும் பார்த்தே நாலு வருஷம் ஆன பிறகும், இன்னும்கூட என் மனசில் நீங்க இருக்கீங்க.

உங்களை முதன்முதலாப் பார்த்த நாள் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. நான் கோயமுத்தூர் நிர்மலா காலேஜ்ல முதல் வருஷம் படிச்சிக்கிட்டு இருந்தேன். ஒரு லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கி இருந்தேன். அதுக்கு எதுத்த வீட்ல நீங்க உங்க அப்பா, அம்மா, பாட்டி, தங்கையோட குடி வந்தீங்க. என் ஹாஸ்டல்மேட்ஸ் ஓடி வந்து, ஏய், எதுத்த வீட்டுக்கு ஒரு சூப்பர் காத்து வந்திருக்குடி. உன் ரூம்ல இருந்து பார்த்தா அந்த வீடு முழுக்கத் தெரியும். இனி உன் பாடு ஜாலிதான்' என்று கிண்டலடித்தார்கள். எங்களுக்குள் அழகான பையன்களைக் 'காத்து' என்று குறிப்பிடுவது வழக்கம். 'காற்றே இல்லை; ஒரே புழுக்கமா இருக்கு' என்று பையன்கள் யாரும் இல்லாதபோது நாங்கள் அலுத்துக் கொள்வோம்.

நீங்கள் வந்த இரண்டு நாட்களிலேயே உங்கள் பெயர் 'நவநீத்' என்று அறிந்து கொண்டோம். நீங்கள் சி.ஏ படித்துக் கொண்டிருப்பவர் என்பதையும் உங்கள் தங்கை மூலம் அறிந்தோம். நீங்கள் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பாராமல் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டீர்கள். எனவே விரைவில் 'சைவச் சாமியார்' என்று பெயர் வைத்து விட்டோம்.

தேர்வுக்காக ஒருநாள் நான் என் அறையின் ஜன்னலருகே அமர்ந்து மும்முர



காதல்

மாகப் படித்துக் கொண்டிருந்தேன். யாரோ பார்ப்பது போன்ற உள்ளுணர்வு தோன்ற, திடீரென்று நிமிர்ந்தால், நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்; திகைத்தேன்! எனக்கு உங்களிடம் மிகவும் பிடித்ததே பல பெண்கள் உள்ள ஹாஸ்டலில் உங்கள் வயதிற்குரிய குறும்புத்தனத்துடன் யாரையும் சைட் அடிக்காத கண்ணியம்தான். ஆனால் நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது, எனக்குள் ஒருவித பயத்தையும் சந்தோஷத்தையும் தந்தது. நான் உங்களைப் பார்த்தும் பாராதது போல் ஜன்னலிலிருந்து அகன்று விட்டேன்.

அன்று சித்ரா பௌர்ணமி. நாங்களனைவரும் மாடியில் நிலவை ரசித்தபடி அரட்டையடித்துக் கொண்டு இருந்தோம். நேரம் செல்லச் செல்ல என் தோழிகள் கீழிறங்கிச் சென்று விட்டனர். நான் அங்கேயே இருந்தேன். திடீரென்று நீங்களும் உங்கள் வீட்டு மொட்டை மாடிக்கு வந்தீர்கள். என்னையே வைத்த கண் வாங்காமல் பார்க்க ஆரம்பித்தீர்கள். எனக்குள்ளும் உங்களைப் பார்க்க ஆவல் எழுந்தது. ஆனால் விருட்டென்று எழுந்து கீழிறங்கி வந்து விட்டேன். எனது அறையிலிருந்து நீங்கள் என்னைத் தேடுவது தெரிந்தது. எனக்குப் பெருமை!

இப்பொழுது நீங்களறியாமல் உங்களை நான் பார்க்க ஆரம்பித்து விட்டேன். எனது அறை ஜன்னலின் திரைச் சீலையின் பின் மறைந்துக் கொண்டு நீங்கள் உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உங்கள் தங்கை, பாட்டி, நாய்க்குட்டி இவற்றுடன் விளையாடுவது, பேசுவதையெல்லாம் பார்ப்பேன். உங்கள் வண்டி வரும் ஓசை கேட்டவுடன் ஓடி வந்து நின்று விடுவேன், உங்களைப் பார்க்க. என் படிப்போடு இதுவும் ஒரு கடமை போல ஆனது.

ஒரு நாள் உங்கள் யமஹாவை

போட்டிக்கதை — 3

ஸ்டாண்ட் போட்டு விட்டு நிமிர்ந்த நீங்கள், நான் மாடி ஜன்னலில் நின்று உங்களைப் பார்ப்பதைப் பார்த்து விட்டீர்கள். உடனே சிரித்தும் விட்டீர்கள்! நானோ, வெட்கத்தால் முகம் சிவந்தேன். பின் இந்தப் பார்வைப் பரிமாறல்கள் நமக்குள் வழக்கமானது. தினமும் காலை எழுந்தவுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதும் இரவு படுக்கும் முன்னரும் பார்த்து குட் நைட் சொல்லி விடுவதும் நம் கட்டாயப் பழக்கமானது.

நான் உங்களை ரசிக்க ஆரம்பித்தேன். எனது சைகைப் பேச்சுகள் மூலமே நாம் இருவரும் பேசிக் கொள்ள ஆரம்பித்தோம். உங்கள் வீட்டாருடன் நீங்கள் பழகுவதைக் கொண்டே நீங்கள் அன்பும், பாசமும் மிக்கவர் என்று தெரிந்தது. உங்கள் வண்டியில் அடிபட்ட பூனைக்குட்டியை குணமாகும்வரை உங்கள் வீட்டிலேயே வைத்து கவனித்துக் கொண்டதில் உங்கள் இரக்க குணம் தெரிந்தது. சி.ஏ படிக்கும் ஆர்வத்தில் உங்களது புத்திசாலித்தனம் தெரிந்தது. நான் உங்கள் அபிமானியானேன்; காதல் கொண்டேன்.

எனது மூன்றாமாண்டு தொடங்கிய நேரம். என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்று என்னால் அறிய முடியவில்லை. நானே துணிந்து உங்களுக்குப் போன் செய்தேன். என் பெயரைச் சொன்னவுடன் மிகவும் ஆச்சர்யப்பட்டு, 'ஏய், உனக்கு இவ்வளவு துணிச்சல் வந்து விட்டதா?' என்றீர்கள்.

"உங்களிடம் நான் ஒன்று கூற வேண்டும்" என்றேன்.

"நீ என்ன சொல்வேன்னு எனக்குத் தெரியும். இப்ப உன் கவனமெல்லாம் உன் படிப்பில்தான் இருக்கணும். கொஞ்சம் பொறுமையா இரு. எல்லாம் நல்ல படியா நடக்கும்" என்று கூறினீர்கள்.

எனக்கு உங்களது நிதானம், மெச்சூரிட்டி, எனக்கு அட்வைஸ் செய்த உங்களது பொறுமை எல்லாம் பிடித்திருந்தது. ஆனால் என் காதலை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்களா எனத் தெரியவில்லை. ஒருவித குழப்பத்தில் இருந்தேன். ஆயினும் நம் பார்வைப் பரிமாறல்கள் தொடர்ந்தன. ஒருமுறை நீங்கள் என்னிடம் சொல்லாமல் ஒரு பத்து நாள் கோவா சென்று விட்டீர்கள். அப்பப்பா! அந்தப் பத்து நாட்களும் நான் பட்ட வேதனை! உங்களை மீண்டும் சிரித்த முகத்துடன் கண்டபின்பே நார்மலானேன்.

உங்கள் மனத்தில் என்ன நினைத்திருந்தீர்களோ? நான் சதா சர்வகாலமும் உங்கள் நினைவாகவே இருந்தேன். எனது ஐந்தாவது செமஸ்டர் மதிப்பெண் குறைந்திருந்தது. படிப்பிலும் கவனம் செலுத்த முடிவு செய்தேன். எனது படிப்பு முடிய இன்னும் ஆறு மாதங்களே உள்ள வேளையில் உங்களைப் பிரிய நேர்ந்தது.

திடீரென்று ஒருநாள் காலை நான் கல்லூரி கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்த போது நீங்கள் ஏதோ சைகை செய்வது தெரிந்தது. சரி, வழக்கம்போல ஏதோ கூறுகிறீர்கள் என்று ஜன்னல் அருகே வந்து கவனித்தேன். 'நான் போகிறேன்' என்று நீங்கள் கூறுவது மட்டும் விளங்கியது. எங்கே, எப்போது, எப்பொழுது திரும்பி வருவீர்கள், இவை ஏதுவுமே உங்கை சைகையிலிருந்து விளங்கவில்லை. நானும் எங்காவது சென்றால் திரும்ப வரும்போது பேசிக் கொள்ளலாம் என்று கையசைத்து வழியனுப்பினேன்.

கிளம்பும்போது நீங்கள் வேறு ஏதோ சொல்லத் துடிப்பதும், உங்கள் முகம் இருண்டு காணப்படுவதும் நன்றாகத் தெரிந்தது. மாலையில் என் அறைக்குத் திரும்பியவுடன் உங்கள் வீட்டில் பெரிய பூட்டு தொங்குவதைப் பார்த்து அதிர்ந்தேன். நாளை, மறுநாள் என உங்களை எதிர்பார்த்து நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாகின. ஆயினும் உங்கள் வீடு பூட்டியே கிடந்தது. யாரிடம் சென்று நான் உங்களைப் பற்றிக் கேட்பது? ஊமையாய் உள்ளுக்குள் அழுதேன். இரண்டரை வருடங்களாக இருந்த நம் பழக்கம் இப்படி பூகம்பத்தால் விளையும் நாசம் போல் பாழாகும் என நான் கனவிலும் நினைக்கவில்லை.

நான் உங்கள் மேல் கொண்டிருந்தது

"நான்தான் முதல் பேஷண்ட்; முதல் ஆபரேஷன்'னு சொல்றீங்க.. எனக்கு பயமா இருக்கு டாக்டர்...!"



"யோவ்... நீயே இப்படி பயப்பட்டா... எனக்கு யார் தைரியம் சொல்லுறது?"

– சித்தோடு கே. சதீஷ்குமார்

இனக் கவர்ச்சியா, நட்பா, காதலா என எனக்கு இன்னமும் தெரியவில்லை. ஆனால் என் மனத்தில் உங்கள் முகம் நீங்காமல் இருக்கிறது. மறக்க நினைத்தாலும் அது முடியவில்லை. இத்தனைக்கும் நாம் அருகருகே நின்றுகூட ஒருவரை ஒருவர் பார்த்தது கிடையாது.

தொடர்ந்த அந்த நான்கு மாதங்கள் விரைவாக ஓடின. உங்களை எதிர்பார்த்து நான் காத்துக் கொண்டிருந்தாலும் எனது கடைசி செமஸ்டர் எக்ஸாம்களை நல்லபடியாகவே எழுதினேன். பரீட்சை முடிந்தவுடன் என் சொந்த ஊரான நெல்லைக்குச் சென்று விட்டேன்.

நல்லபிள்ளையாக என் பெற்றோர் பார்த்த மாப்பிள்ளை ஸ்ரீநிவாஸை மணந்து கொண்டேன். அவர் எனக்குக் கடவுள் அளித்த பரிசு. முதலில் அவர் எனக்கு நல்ல நண்பன். என் தாய், தந்தையைவிட என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார். என்னை அன்பு மழையில் குளிப்பாட்டுகிறார். நம் பழக்கத்தைப் பற்றிக் கூறியவுடன் அது வெறும் இனக்கவர்ச்சிதான் என்றார். ஆயினும் 'நவநீத்' என்ற பெயரை எங்கே கேட்டாலும் இன்றும் எனக்குள் ஏன் சிலிர்க்கிறது? உங்கள் முகம் என் நெஞ்சில் நிலையாக ஏன் நிற்கிறது? ஒருவேளை இது முதல் காதல் அனுபவம் தரும் பரிசுகளோ?

நேசித்தலும், நேசிக்கப்படுதலும் மிகவும் இனிக்கின்ற அந்த வயது, பசுமரத்தாணி போல உங்கள் நினைவை என்னுள் பதித்ததோ? நான் இன்னும் குழந்தை பெற்றுக் கொள்ளவில்லை. சூல் கொண்ட மகளிர் தம் மனத்தில் நினைக்கும் முகமே அவர்கள் குழந்தைக்கு இருக்கும் என்று அறிந்தேன். உன் முகம் என் நெஞ்சினின்று மறையும் வரை காத்திருப்பேன்! அந்நாள் நீங்கள் எங்கே சென்றீர்கள், ஏன் சென்றீர்கள் என்று தெரியும் நாளாக இருக்கலாம். அல்லது என் கணவனின் அன்பில் என்னை நானே தொலைக்கும் நாளாக இருக்கலாம்.

எவ்வாறாயினும் கல்லூரிக் கால பாதிப்பு என்னுள் உறங்கிக் கொண்டே இருக்கும். உலகம் உருண்டையானது. என்றாவது நாம் சந்திப்போம் என நிச்சயமாக நம்புகிறேன். அந்நாளை எதிர்பார்த்து, விரும்பவும் செய்கிறேன்; உன் மனத்தின் ஓரமாகக் கொஞ்சம் வெறுக்கவும் செய்கிறேன்...

இப்படிக்கு
ராதா.

பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி நூற்றாண்டு 1899-1999 100

கல்கி கலெக்ஷன்

பதினேழாம் அத்தியாயம்

மாண்டவர் மீள்வதுண்டோ?

இதுவரைக்கும் சுந்தர சோழர் வேறு யாரோ ஒரு மூன்றாம் மனிதனைப் பற்றிச் சொல்வது போலச் சொல்லிக் கொண்டு வந்தார். இப்போது தம்முடைய வாழ்க்கையில் நடந்த வரலாறாகவே சொல்லத் தொடங்கினார்:-

"என் அருமை மகளே! சாதாரணமாக ஒரு தகப்பன் தன் மகளிடம் சொல்லக் கூடாத விஷயத்தை இன்று நான் உனக்குச் சொல்கிறேன். இதுவரை யாரிடமும் என் மனத்தைத் திறந்து சொல்லாத செய்தியை உன்னிடம் சொல்கிறேன். இந்த உலகத்திலேயே என் நண்பன் அநிருத்தன் ஒருவனுக்குத்தான் இது தெரியும்; அவனுக்கும் முழுதும் தெரியாது. இப்போது என் மனத்தில் நடக்கும் போராட்டம் அவனுக்குத் தெரியாது. ஆனால் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். நம்முடைய குடும்பத்தில் யாராவது ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். உன் தாயாரிடம் சொல்ல எனக்கு நா எழாது. உன் தமையனிடமும் தம்பியிடமும் சொல்ல முடியாது. உன்னிடந்தான் சொல்ல வேண்டுமென்று சில காலமாகவே எண்ணியிருந்தேன். அதற்குச் சந்தர்ப்பம் இன்றைக்கு வாய்த்தது. அதற்கு வேண்டிய தைரியமும் இன்றைக்குத்தான் வந்தது. நீ என் நிலையைக் கண்டு சிரிக்க மாட்டாய்; என் மனத்திலுள்ள புண்ணை ஆற்றுவதற்கு முயல்வாய்; என்னுடைய விருப்பம் நிறைவேறவும் உதவி செய்வாய்! - இந்த நம்பிக்கையுடன் உன்னிடம் சொல்கிறேன்....

"அந்தத் தீவிலிருந்து மரக் கலத்தில் ஏறிப் புறப்பட்டேன். கோடிக்கரை சேர்ந்தேன். என் பாட்டனார் பராந்தக சக்கர

அமரர் கல்கி

வர்த்தி இந்தத் தஞ்சை அரண்மனையில் அப்போது தங்கி இருக்கிறார் என்று அறிந்து நேராக இங்கே வந்தேன்.

"நான் தஞ்சை வந்து சேர்ந்தபோது பராந்தக சக்கரவர்த்தி மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். அவர் உள் ளம் நொந்து போயிருந்தது. நாற்பது ஆண்டுக் காலத்தில் அவர் நிர்மாணித்த மகாராஜ்யம் சின்னாபின்னம் அடைந்து கொண்டிருந்தது. அவருக்குப் பிறகு பட் டத்தை அடைய வேண்டியவரான இராஜாதித்தர் தக்கோலப் போரில் மாண்டார். அதே போர்க்களத்தில் படு காயம் அடைந்த என் தந்தை அரிஞ்சயர் பிழைப்பாரோ, மாட்டாரோ என்ற நிலையில் இருந்தார். கன்னரதேவனு டைய படைகள் தொண்டை மண்டலத் தைக் கைப்பற்றி முன்னேறிக் கொண்டு வந்தன. தெற்கே பாண்டியர்கள் தலை யெடுத்து வந்தார்கள். இலங்கையில் சோழ சைன்யம் தோல்வியுற்றுத் திரும்பி விட்டது. பல போர்க்களங்களிலும் சோழ நாட்டு வீராதி வீரர்கள் பலர் உயிர் துறந்து விட்டார்கள். இந்தச் செய்திகள் எல்லாம் ஒருமிக்க வந்து முதிய பிராயத்துப் பராந்தக சக்கரவர்த்தி யின் உள்ளத்தைப் புண்படுத்தித் துயரக் கடலில் ஆழ்த்தியிருந்தன. இந்த நிலை யில் என்னைக் கண்டதும் அவருடைய முகம் மலர்ச்சி அடைந்தது. என் பாட்ட னாருக்கு நான் குழந்தையாயிருந்த நாளி லிருந்து என் பேரில் மிக்க பிரியம். என்னை எங்கேயும் அனுப்பாமல் அரண்மனையில் தம்முடனேயே வெகு காலம் வைத்திருந்தார். பிடிவாதம் பிடித்து அவரிடம் விடை பெற்றுக் கொண்டு நான் ஈழ நாட்டுக்குப் போனேன். அங்கிருந்து திரும்பி வந்தவர் களிலே நான் இல்லை என்று அறிந்ததும் என் பாட்டனாரின் மனம் உடைந்து போயிருந்தது. நான் இறந்து விட்ட தாகவும் தெரியவில்லையாதலால் என் னைத் தேடி வரக் கூட்டம் கூட்டமாக ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார்.

"கடைசியில் ஒரு கூட்டம் என்னைக் கண்டுபிடித்தது. நான் தஞ்சை வந்து சேர்ந்ததும், பண்பட்ட அவர் மனத் துக்குச் சிறிது சாந்தி ஏற்பட்டது. அவ ருடைய அந்திமக் காலத்தில் வீழ்ச்சி யடைந்து வந்த சோழ சாம்ராஜ்யம் மறு படியும் என்னால் மேன்மையடையும் என்பதாக எப்படியோ அவர் மனத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையைச் சோதிடர்கள் வளரச் செய்திருந்தார்கள். அதற்குத் தகுந்தாற் போல், அவருக்குப் புதல்வர்கள் நாலு பேர் இருந்தும், அவருடைய அந்திமக் காலத்தில் பேரன் நான் ஒருவனே இருந் தேன். சக்கரவர்த்தி இறக்கும் தறுவாயில் என்னை அருகே அழைத்து உச்சி முகந்து கண்ணீர் பெருக்கினார். 'அப்பனே! எனக்குப் பிறகு உன் பெரியப்பன் கண்ட ராதித்தன் சிம்மாசனம் ஏறுவான். அவ னுக்குப் பிறகு இந்தச் சோழ ராஜ்யம் உன்னை அடையும். உன்னுடைய காலத்திலேதான் மறுபடி இந்தச் சோழ குலம் மேன்மையடையப் போகிறது!' என்று பல முறை அவர் கூறினார். சோழ நாட்டின் மேன்மையை நிலைநாட்டு வதே என் வாழ்க்கையின் இலட்சிய மாயிருக்க வேண்டுமென்று சொல்லி, அவ்வாறு என்னிடம் வாக்குறுதியும் பெற்றுக் கொண்டார்...

"என் பாட்டனார் என்னிடம் எவ்வளவு பிரியம் வைத்திருந் தாரோ, அவ்வளவு நான் அவரி டம் பக்தி வைத்திருந்தேன். ஆதலின் அவருடைய கட்டளையைச் சிரமேற் கொண்டு நடப்பதென்று உறுதி கொண் டேன். ஆனாலும் என் உள்ளத்திலே அமைதி இல்லை. கடல் சூழ்ந்த தீவில் கரடிக்கு இரையாகாமல் என்னைக் காப்பாற்றிய கரையர் குலமகளின் கதி என்ன? சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் கீழ்க் குலத்தில் பிறந்த ஊமைப் பெண் ஒருத்தி ராணியாக வீற்றிருக்க முடியுமா? அரண்மனை வாழ்வு அவளுக்குத்தான் சரிப்பட்டு வருமா? நாட்டார் நகரத்தார் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்

களா?.... இந்த எண்ணங்கள் அடிக்கடி தோன்றி என் மனத்தைச் சஞ்சலப் படுத்தின. இது மட்டுமன்று. என் பெரிய தகப்பனார் கண்டராதித்தர் சில காலத்திற்கு முன்புதான் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டிருந்தார். அவரை மணந்த பாக்கியசாலி மழவரையர் குலமகள் என்பதை நீ அறிவாய். முதல் மனைவிக்குக் குழந்தை இல்லையென்றால், இரண்டாவது மனைவிக்கும் குழந்தை பிறவாது என்பது என்ன நிச்சயம்? பெரியப்பாவுக்கு ஆண் குழந்தை பிறந்தால், இராஜ்யம் எனக்கு எப்படி வரும்?- இதைப் பற்றி ராஜ்யத்தில் சிலர் அப்போதே பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. ஆனால் அத்தகைய சந்தேகம் யாருக்கும் உண்டாகக் கூடாது என்று மகாத்மாவாகிய என் பெரிய தகப்பனார் விரும்பினார் போலும். பராந்தக சக்கரவர்த்தி காலமான பிறகு கண்டராதித்தருக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அதே சமயத்தில் எனக்கும் யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று என் பெரியப்பா- புதிய சக்கரவர்த்தி-ஏற்பாடு செய்து விட்டார்...

"என் பிரிய மகளே! இன்றைக்கு உன் தம்பி அருள்மொழியின் பேரில் இந்த நாட்டு மக்கள் எப்படிப் பிரியமாயிருக்கிறார்களோ, அப்படி அந்த நாளில் என் பேரில் அபிமானமாயிருந்தார்கள். அரண்மனைக்குள்ளே பட்டாபிஷேகம் நடந்து கொண்டிருந்தபோது வெளியிலே ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். புதிதாக முடி சூடிய சக்கரவர்த்தியும் யுவராஜாவும் சேர்ந்தாற்போல் ஜனங்களுக்குக் காட்சி தரவேண்டும் என்று அனைவரும் விரும்பினார்கள். அவ்விதமே பெரியப்பாவும் நானும் இந்த அரண்மனை மேன்மாடத்தின் முன்றிலுக்கு வந்து நின்றோம். கீழே ஒரே ஜன சமுத்திரமாக இருந்தது. அவ்வளவு பேருடைய முகங்களும் மலர்ந்து விளங்கின. எங்களைக் கண்டதும் அவ்வளவு பேரும் குதூகலமடைந்து ஆரவாரித்தார்கள். நாம் இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டது பற்றி இவ்வளவு ஆயிரமாயிரம் மக்கள் குதூகலம் அடைந்திருக்கிறார்களே. அப்படியிருக்க, எங்கேயோ ஒரு கண்காணாத்தீவில் காட்டின் மத்தியில் வாழும் ஊமைப் பெண்ணைப் பற்றி நாம் கவலைப்படுவது என்ன நியாயம்? இவ்வளவு பேருடைய மகிழ்ச்சி முக்கியமானதா? ஒரே ஓர் ஊமைப் பெண்ணின் வாழ்க்கை முக்கியமானதா?....

"இவ்வாறு எண்ணிக் கொண்டே எங்களை அண்ணாந்து பார்த்தபடி நின்ற மலர்ந்த முகங்களை ஒவ்வொன்றாகக் கவனித்துக் கொண்டு வந்தேன். அந்த ஜனங்களிலே ஆண்களும் பெண்களும் முதியவர்களும் இளைஞர்களும் சிறுவர் சிறுமிகளும் நின்றார்கள். எல்லோரும் ஒரே களிப்புடன் காணப்பட்டார்கள். ஆனால் திடீரென்று ஒருமுகம், ஒரு பெண்ணின் முகம், சோகம் ததும்பிய முகம், கண்ணீர் நிறைந்த கண்களினால் என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த முகம், - தெரிந்தது. அத்தனை கூட்டத்துக்கு நடுவில் எப்படி அந்த ஒரு முகம் என் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்ததென்பதை நான் அறியேன். பிறகு, அங்கிருந்து என் கண்களும் நகரவில்லை; கவனமும் பெயரவில்லை. அந்த முகம் வரவரப் பெரிதாகி வந்தது; என் அருகே அருகே வருவது போலிருந்தது. கடைசியில் அந்தப் பெரிய ஜனத்திரள் முழுதும் மறைந்து, என் அருகில் நின்றவர்கள் எல்லாரும் மறைந்து, அரண்மனை மறைந்து, ஆசாரவாசல் மறைந்து, தஞ்சை நகரின் கோட்டை கொத்தளம் மறைந்து, வானும் மண்ணும் மறைந்து, அந்த ஒரு முகம் மட்டும் தேவி பரமேசுவரியின் விசுவரூபத்தைப் போல் என் கண் முன்னால் தோன்றியது. என் தலை சுழன்றது; கால்கள் பலமிழந்தன; நினைவு தவறியது.

"அப்படியே நான் மயங்கி விழுந்து விட்டதாகவும் பக்கத்திலிருந்தவர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டதாகவும்

பிற்பாடு அறிந்தேன். பட்டாபிஷேக வைபவச் சடங்குகளில் நான் அதிகம் களைத்துப் போய் விட்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள். ஜனங்களுக்குக் காட்சி அளித்தது போதும் என்று என்னை அரண்மனைக்குள்ளே அழைத்துச் சென்றார்கள். பிறகு எனக்கு நல்ல நினைவு வந்ததும் என் நண்பன் அநிருத்தனைத் தனியாக அழைத்து நான் கண்ட காட்சியைக் கூறினேன். அந்த ஊமைப் பெண்ணின் அடையாளம் கூறி எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து அழைத்துவர வேண்டும் என்று கட்டளையிட்டேன். தஞ்சை நகரின் மூலை முடுக்கெல்லாம் தேடியும் அத்தகைய ஊமைப் பெண் யாரும் இல்லையென்று அநிருத்தன் வந்து சொன்னான். என்னுடைய உள்ளத்தின் பிரமையாக இருக்குமென்றும் கூறினான். நான் அவனைக் கோபித்துக் கொண்டு 'இந்த உதவி கூடச் செய்யாவிட்டால் அப்புறம் நீ என்ன சிநேகிதன்?' என்றேன். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதைகளில் ஆள் அனுப்பித் தேடும்படி சொன்னேன். அப்படியே பல வழிகளிலும் ஆட்கள் சென்றார்கள். கடற்கரை வரையில் போய்த் தேடினார்கள். கோடிக்கரைக்குப் போனவர்கள் அங்கேயுள்ள கலங்கரை விளக்கக் காவலன் வீட்டில் ஓர் ஊமைப் பெண் இருப்பதாகக் கண்டு பிடித்தார்கள். அவள் பித்துப் பிடித்தவள் போலத் தோன்றினாளாம். எவ்வளவோ ஜாடைமாடைகளினால் அவளுக்கு விஷயத்தைத் தெரிவிக்க முயன்றது பயன்படவில்லையாம். அவர்களுடன் தஞ்சைக்கு வருவதற்கு அடியோடு மறுத்து விட்டாளாம். இந்தச் செய்தியை அவர்கள் கொண்டு வந்தவுடனே, இன்னது செய்வதென்று தெரியாமல் மனம் கலங்கினேன். இரண்டு நாட்கள் அந்தக் கலக்கத்திலேயே இருந்தேன். ஆனமட்டும் அவளை மறந்துவிடப் பார்த்தும் இயலவில்லை. இரவும் பகலும் அதே நினைவாயிருந்தது. இரவில் ஒரு கணங் கூடத் தூங்க முடியவில்லை. பிறகு அநிருத்தனையும் அழைத்துக் கொண்டு கோடிக்கரைக்குப் புறப்பட்டேன். குதிரைகளை எவ்வளவு வேகமாகச் செலுத்தலாமோ அவ்வளவு வேகமாகச் செலுத்திக் கொண்டு போனேன். போகும்போது என் மனக்கலக்கம் இன்னும் அதிகமாயிற்று. அந்த ஊமைப் பெண்ணை அங்கே கண்டு பிடித்தால், அப்புறம் அவளை என்ன செய்வது என்று எண்ணியபோது மனம் குழம்பியது. தஞ்சைக்கோ பழையாறைக்கோ அழைத்துப் போய் 'இவள் என் ராணி!' என்று சொல்லுவதா? அவ்வாறு நினைத்தபோது என் உள்ளமும் உடலும் குன்றிப் போய் விட்டன.

"என் செல்வக்குமாரி! அந்த நாளில் நான் மேனி அழகில் நிகரற்றவன் என்று வேண்டாத பிரபலம் ஒன்று எனக்கு ஏற்பட்டிருந்தது. அதை ஒரு புகழாகவே நான் நினைக்கவில்லை. ஆயினும் மற்றவர்கள் அதைப் பற்றி ஓயாது பேசினார்கள். என் பாட்டனாரின் பெயராகிய 'பராந்தகன்' என்னும் பெயரை எனக்கு வைத்திருந்தும், அது அடியோடு மறையும்படி செய்து 'சுந்தர சோழன்' என்ற பெயரைப் பிரபலப்படுத்திவிட்டார்கள். அப்படி அனைவராலும் புகழப்பட்ட நான், நாகரிகம் இன்னதென்று தெரியாத ஓர் ஊமைப் பெண்ணை எப்படி அரண்மனைக்கு அழைத்துப் போவேன்? இல்லையென்றால், அவளை என்ன செய்வது?- இப்படிப் பலவாறு எண்ணிக் குழம்பிய மனத்துடன் கோடிக்கரை சேர்ந்தேன். அந்த மகராஜி எனக்குக் கஷ்டம் எதுவும் இல்லாமல் செய்து விட்டாள். அங்கே நான் அறிந்த செய்தி என்னை அப்படியே ஸ்தம்பித்துப் போகும்படிச் செய்து விட்டது. நாங்கள் அனுப்பிய ஆட்கள் திரும்பிச் சென்ற மறுநாள் அந்தப் பெண் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறினாளாம். அன்று அமாவாசை. காற்று பலமாக அடித்தது. கடல் பொங்கிக் கொந்தளித்து வந்து கலங்கரை

விளக்கைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பெண் சிறிது நேரம் கொந்தளித்த அலை கடலைப் பார்த்துக் கொண்டே நின்றாளாம். அப்படி அவள் அடிக்கடி நிற்பது வழக்கமாதலால் யாரும் அதைப் பொருட்டுத்தவில்லையாம்! திடீரென்று 'வீல்' என் ஒரு சப்தம் அலைகடலின் முழக்கத்தையும் மீறிக் கொண்டு கேட்டதாம். பிறகு, அவளைக் காணோம்! பெண் உருவம் ஒன்று விளக்கின் உச்சியிலிருந்து கடலில் தலைகீழாக விழுந்ததை இரண்டொருவர் பார்த்தார்களாம். படகுகளைக் கொண்டு வந்து ஆனமட்டும் தேடிப் பார்த்தும் பயன்படவில்லை. கொந்தளித்துப் பொங்கிய கடல் அந்தப் பெண்ணை விழுங்கிவிட்டது என்றே தீர்மானிக்க வேண்டியிருந்ததாம்....

"இந்தச் செய்தியைக் கேட்டதும் என் நெஞ்சில் ஈட்டியினால் குத்துவது போன்ற வலியும் வேதனையும் உண்டாயின. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் ஒருவித அமைதியும் உண்டாயிற்று. அவளை என்ன செய்வது என்ற கேள்வி இனி இல்லை. அதைப் பற்றி யோசித்து மனத்தைக் குழப்பிக் கொள்ள வேண்டியதுமில்லை!....

"துன்பமும் அமைதியும் கலந்த இந்த விசித்திர வேதனையுடன் தஞ்சைக்குத் திரும்பினேன். இராஜ்ய காரியங்களில் மனத்தைச் செலுத்தினேன். போர்க்களங்களுக்குச் சென்றேன். உன் தாயை மணந்து கொண்டேன். வீரப் புதல்வர்களைப் பெற்றேன். உன்னை என் மகளாக அடையும் பாக்கியத்தையும் பெற்றேன்....



"ஆனாலும், மகளே! செத்துப் போன அந்தப் பாவியை என்னால் அடியோடு மறக்க முடியவில்லை. சிற்சில சமயம் என் கனவிலே அந்தப் பயங்கரக் காட்சி -நான் கண்ணால் பாராத அந்தக் காட்சி- தோன்றி என்னை வருத்திக் கொண்டிருந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து ஒரு பெண் உருவம் தலைகீழாகப் பாய்ந்து அலைகடலில் விழும் காட்சி என் கனவிலும் கற்பனையிலும் தோன்றிக் கொண்டிருந்தது. கனவில் அந்தப் பயங்கரக் காட்சியைக் காணும் போதெல்லாம் நான் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பேன். பக்கத்தில் படுத்திருப்பவர்கள், 'என்ன? என்ன?' என்று கேட்பார்கள். உன் தாயார் எத்தனையோ தடவை கேட்டதுண்டு. ஆனால்

நான் உண்மையைக் கூறியதில்லை. 'ஒன்றுமில்லை' என்று சில சமயம் சொல்வேன். அல்லது போர்க்கள பயங்கரங்களைக் கற்பனை செய்து கூறுவேன். நாளடைவில் காலதேவனின் கருணையினால் அந்தப் பயங்கரக் காட்சி என் மனத்தை விட்டு அகன்றது; அகன்று விட்டதாகத் தான் சமீபகாலம் வரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உயிரோடிருப்பவர்களைக் காட்டிலும் செத்துப் போனவர்கள் அதிகக் கொடுமைக்காரர்கள் என்று தோன்றுகிறது. மகளே! ஊமைச்சியின் ஆவி என்னை விட்டு விடவில்லை. சில காலமாக அது மீண்டும் தோன்றி என்னை வதைக்க ஆரம்பித்திருக்கிறது! என் மகளே! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்று நீ நம்புகிறாயா...?"

இவ்விதம் சொல்லி விட்டுச் சுந்தர சோழர் தம் பார்வையை எங்கேயோ தூரத்தில் செலுத்தி வெறித்துப் பார்த்தார். அவர் பார்த்த திக்கில் ஒன்றுமே இல்லைதான்! ஆயினும் அவருடைய உடம்பு நடுங்குவதைக் குந்தவை கண்டாள். எல்லையற்ற இரக்கம் அவர் பேரில் அவளுக்கு உண்டாயிற்று. கண்களில் நீர் ததும்பியது. தந்தையின் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள். அதனால் அவருடைய நடுக்கமும் குறைந்ததாகத் தோன்றியது. பிறகு தந்தையை நிமிர்ந்து நோக்கி, "அப்பா! இந்தப் பயங்கரமான வேதனையைப் பல வருஷ காலம் தங்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். அதனாலேதான் தங்கள் உடம்பும் சீர் குலைந்து விட்டது. இப்போது என்னிடம் சொல்லி விட்டீர்கள் அல்லவா? இனிமேல் தங்கள் உடம்பு சரியாகப் போய்விடும்" என்றாள்.

சுந்தரசோழர் அதைக் கேட்டுச் சிரித்த சிரிப்பின் ஒலியில் வேதனையுடன்கூட அவநம்பிக்கையும் கலந்திருந்தது. அவர் கூறினார்:-

"குந்தவை! நீ நம்பவில்லை. மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்று நீ நம்பவில்லை. ஆனாலும் அதோ அந்தத் தூணுக்குப் பக்கத்தில், குத்து விளக்கின் பின்னால், அந்தப் பாவியின் ஆவி நேற்று நள்ளிரவில் நின்றது. என் கண்ணாலேயே பார்த்தேன். அதை எப்படி நம்பாமலிருக்க முடியும்? நான்




கண்டது வெறும் பிரமை என்றால், உன் தோழியைப் பற்றி என்ன சொல்வாய்? அவள் எதையோ பார்த்துக் கேட்டதனால்தானே நினைவு தப்பி விழுந்தாள்! அவளை அழைத்து வா, குந்தவை! நானே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்!" என்று சுந்தர சோழர் பரபரப்புடன் கூறினார்.

"அப்பா! வானதி ஒரு பயங்கொள்ளிப் பெண்! கொடும்பாளூர் வீர வேளிர் குலத்தில் இவள் எப்படிப் பிறந்தாளோ, தெரியவில்லை. இருட்டில் தூணைப் பார்த்தாலும், அவள் அலறி

அடித்துக் கொண்டு மயக்கமாய் விழுவாள். அவளைக் கேட்பதில் யாதொரு பயனும் இல்லை. அவள் ஏதும் பார்த்திருக்கவும் மாட்டாள்; கேட்டிருக்கவும் மாட்டாள்."

"அப்படியா சொல்கிறாய்? அவள் போனால் போகட்டும். நான் சொல்ல வேண்டியது




மிச்சத்தையும் கேள்! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்பதில் எனக்கும் வெகு காலம் நம்பிக்கை இல்லாமல் தானிருந்தது. அப்படிப்பட்ட தோற்றம் என்னுடைய வீண் மனப்பிரமை என்றே நானும் எண்ணியிருந்தேன். காவேரி நதியில் நாம் எல்லாருமாக ஓடத்தில் போய்க் கொண்டிருந்தபோது குழந்தை அருள்மொழி வர்மன் திடீரென்று காணாமற் போனது உனக்கு நினைவிருக்கிறதல்லவா? நாம் எல்லோரும் திகைத்தும் தவித்தும் நிற்கையில் ஒரு பெண்ணரசி பொன்னி நதி வெள்ளத்திலிருந்து குழந்தையை எடுத்துத் தூக்கிக் கொடுத்தாள். குழந்தையை மற்றவர்கள் வாங்கிக் கொண்டதும் அவள் மறைந்து விட்டாள். இதைப் பற்றி நாம் எவ்வளவோ தடவை பேசியிருக்கிறோம். நீ மறந்திருக்க முடியாது. நீங்கள் எல்லோரும் காவேரியம்மன்தான் குழந்தையைக் காப்பாற்றியதாக முடிவு கட்டினீர்கள். ஆனால் என் கண்ணுக்கு என்ன தோன்றியது தெரியுமா? அந்த வலைஞர் குலமகள்-ஊமைச்சிதான்-குழந்தையை எடுத்துக் கொடுத்ததாகத் தோன்றியது. அன்றைய தினமும் நான் நினைவிழந்து விட்டேன் என்பது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? குழந்தைக்கு நேர்ந்த அபாயத்தை முன்னிட்டு நான் நினைவிழந்தேன் என்று எல்லாரும் எண்ணினார்கள். ஆனால் உண்மை அதுவன்று. இத்தனை நாட்கள் கழித்து உனக்குச் சொல்கிறேன். குழந்தையை எடுத்துக் கொடுத்த பெண்ணுருவம் அவளுடைய ஆவி உருவம் என்று எனக்குத் தோன்றியபடியால்தான் அப்படி மூர்ச்சையடைந்தேன்....

"மகளே! உன் தமையனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய தினம் நினைவிருக்கிறதா? அன்று பட்டாபிஷேகம் நடந்த பிறகு ஆதித்த கரிகாலன் அந்தப்புரத்துக்குத் தாய்மார்களிடம் ஆசி பெறுவதற்காக வந்தான் அல்லவா? அவனுக்குப் பின்னால் நான் வந்தேன். அதே ஊமைச்சியின் ஆவி அங்கே பெண்களின் மத்தியில் நின்று கரிகாலனைக் கொடூரமாக உற்றுப் பார்த்ததைக் கண்டேன். மீண்டும் ஒரு தடவை பிரக்ஞை இழந்தேன். பிறகு யோசித்த போது அந்தச் சம்பவத்தைக் குறித்து எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அப்படி அவன் கரிகாலனைக் கொடூரமாகப்பார்க்க வேண்டிய அவசியம் என்ன என்று ஐயுற்றேன். அதுவும் என் சித்தப் பிரமையின் தோற்றமாயிருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால், மகளே! இந்தத் தடவை தஞ்சைக்கு வந்த பிறகு அந்தச் சந்தேகமெல்லாம் தீர்ந்து

விட்டது. ஒரு காலத்தில் – அவள் உயிரோடிருந்த காலத்தில் – அவள் முகத்தைப் பார்த்து அவள் மனத்திலுள்ளதைத் தெரிந்து கொள்வேன்; அவள் உதடு அசைவதைப் பார்த்து அவள் சொல்ல விரும்புவது இன்னதென்று தெரிந்து கொள்வேன். அந்தச் சக்தியை மீண்டும் நான் பெற்றுவிட்டேன். குந்தவை! நாலைந்து முறை நள்ளிரவில் அவள் என் முன்னால் தோன்றி எனக்கு எச்சரிக்கை செய்துவிட்டாள். 'என்னைக் கொன்றாயே! அதை நான் மன்னிக்கிறேன். ஆனால் மீண்டும் பாவம் செய்யாதே! ஒருவனுக்குச் சேரவேண்டிய இராஜ்யத்தை இன்னொருவனுக்குக் கொடுக்காதே! என்று அவள் சொல்வதைப் புரிந்து கொண்டேன். அவளுக்குப் பேசும் சக்தி வந்து வாயினால் பேசினால் எப்படித் தெரிந்து கொள்வேனோ அவ்வளவு தெளிவாகத் தெரிந்து கொண்டேன். மகளே! அதை நிறைவேற்றி வைக்க எனக்கு நீ உதவி செய்ய வேண்டும். சாபமுள்ள இந்த இராஜ்யம் – இந்தச் சோழ சிம்மாசனம் – என் புதல்வர்களுக்கு வேண்டாம்! இதை மதுராந்தகனுக்குக் கொடுத்து விடலாம்...."

குந்தவை அப்போது குறுக்கிட்டு, "அப்பா! என்ன சொல்கிறீர்கள்? நாடு நகரமெல்லாம் ஒப்புக் கொண்டு முடிந்து போன காரியத்தை இப்போது மாற்ற வேண்டிய அவசியம் என்ன? தாங்கள் மாற்றினாலும் உலகம் ஒப்புக் கொள்ளுமா?" என்று கேட்டாள்.

"உலகம் ஒப்புக் கொண்டால் என்ன, ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன? தர்மம் இன்னதென்று தெரிந்து செய்ய வேண்டியது என் கடமை. நான் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு இளவரசனாகவும் பிறகு சக்கரவர்த்தியாகவும் முடி சூட்டிக் கொண்ட போதே என் மனம் நிம்மதியாயில்லை. என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. மூத்தவரின் மகன் உயிரோடிருக்கும் போது இளையவரின் மகனாகிய நான் பட்டத்துக்கு வந்ததே முறையன்று. அந்தப் பாவத்தின் பலனை இன்று நான் அனுபவிக்கிறேன். என் புதல்வர்களும் அத்தகைய பாவத்துக்கு ஏன் உள்ளாக





வேண்டும்? ஆதித்தனுக்கும் இந்த ராஜ்யம் வேண்டாம்; அருள் மொழிக்கும் வேண்டாம். இந்த ராஜ்யத்துடன் வரும் சாபமும் வேண்டாம். நான் உயிரோடிருக்கும்போதே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட வேண்டும். அதன் பிறகு ஆதித்தன் காஞ்சியில் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் சென்று நான் மன நிம்மதியோடு வசிப்பேன்..."

"அப்பா! பெரிய பிராட்டி இதற்குச் சம்மதிக்க வேண்டாமா?"

"மகளே! அதற்காகத்தான் உன் உதவியை நாடுகிறேன். எந்தக் காரணம் சொல்லியாவது என் பெரியம்மையை இங்கே வரும்படி செய். ஆகா! எவ்வளவோ தெரிந்த பரம ஞானியான அந்த மூதாட்டிக்கு இந்த தர்ம நியாயம் ஏன் தெரியவில்லை? என்னை ஏன் இந்தப் பாவம் செய்யும்படி ஏவினார்? அல்லது அவருடைய சொந்தப் பிள்ளையின் பேரிலேதான் அவருக்கு என்ன கோபம்? தாயின் இயற்கைக்கே மாறான இந்தக் காரியத்தில் அவருக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? மதுராந்தகன் ஏதோ சிவபக்தியில் ஈடுபட்டுச் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது அதற்கு நியாயம் உண்டு. இப்போது அவனுக்கே இராஜ்யம் ஆளும் ஆசை வந்திருக்கும்போது இன்னொருவனுக்கு எப்படிப் பட்டம் கட்டலாம்?"

"அப்பா! இராஜ்யம் ஆள ஆசை இருக்கலாம்; அதற்குத் தகுதி இருக்க வேண்டாமா?"

"ஏன் தகுதி இல்லை? மகானாகிய கண்டராதித்தருக்கும் மகாஞானியான மழவரையர் மகளுக்கும் பிறந்த மகனுக்கு எப்படித் தகுதி இல்லாமற் போகும்?"

"தகுதி இருக்கட்டும்; இராஜ்யத்தின் குடிகள் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டாமா?"

"குடிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதாயிருந்தால், அவர்கள் உன் தம்பிக்கு உடனே பட்டம் கட்டிவிட வேண்டும் என்பார்கள். அது நியாயமா? அருள்மொழிதான் அதை ஒப்புவானா?..... அதெல்லாம் வீண் யோசனை மகளே! எப்படியாவது உன் பெரிய பாட்டியை இங்கே சீக்கிரம் வரும்படி செய்! நான் யமனோடு போராடிக் கொண்டிருக்கிறேன் என்று எழுதி அனுப்பு; என்னை உயிரோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று சொல்லி அனுப்பு...."

"அது ஒன்றும் அவசியமில்லை, அப்பா! தஞ்சைத் தளிக்குளத்தார் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்ற விருப்பம் பெரிய பிராட்டிக்கு இருக்கிறது. அதைக் குறிப்பிட்டு இச்சமயம் வரும்படி எழுதி அனுப்புகிறேன். அதுவரை தாங்கள் அலட்டிக் கொள்ளாமல் பொறுமையாயிருங்கள், அப்பா!"

இவ்விதம் கூறித் தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு குந்தவை தன் இருப்பிடத்துக்குச் சென்றாள். வழியில் அன்னை வானமாதேவியைச் சந்தித்தாள். "அம்மா! இனிமேல் என் தந்தையை ஒருகண நேரம் கூட விட்டுப் பிரியாதீர்கள்! மற்றவர்கள் போய்ச் செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்யட்டும்!" என்றாள்.

குந்தவையின் உள்ளத்தில் சில காலமாக ஏற்பட்டிருந்த ஐயங்கள் இப்போது கொஞ்சம் தெளிவு பெறத் தொடங்கியிருந்தன. கன இருட்டாயிருந்த இடங்களில் கொஞ்சம் வெளிச்சம் தெரிய ஆரம்பித்திருந்தது. தன் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விரோதமாக ஏதோ ஒரு பயங்கரமான மந்திர தந்திர சூழ்ச்சி நடைபெற்று வருகிறது என்பதை அவள் அறிவு நன்கு உணர்த்தியது. ஆனால் அது எத்தகைய சூழ்ச்சி, எப்படி எப்படியெல்லாம் இயங்குகிறது என்பதை முழுதும் அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. சோழ மகாராஜ்யத்துக்கும் அந்த ராஜ்யத்துக்குத் தன் சகோதரர்கள் பெற்றுள்ள உரிமைக்கும் பேரபாயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவள் உணர்ந்தாள். அந்த அபாயத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்பாலாகிய தன் மீது சுமந்திருப்பதாகவும் நம்பினாள்.

(தொடரும்)

தமிழ்ப் பாட்டி

அமரர் கல்கி

தமிழ்ப் பாட்டி என்றதும் நேயர்கள் ஔவையாரை நினைத்துக் கொள்வார்கள். ஆனால் இந்தக் கட்டுரைக்கும் ஔவை யாருக்கும் எவ்வளவு சம்பந்தமென்றால், தேர்தல் பிரசாரத்துக்கும், நிஜம் பேசு வதற்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ, அவ் வளவுதான்.

பூர்வ ஜன்மத்தில் என்ன பாவஞ் செய் தேனோ தெரியவில்லை; கொஞ்ச நாளாய் அடிக்கடி சென்னைப் பட்டணம் போக வேண்டி வருகிறது. இந்தத் தடவை சென் னைக்குச் சென்றபோது, நகரமெல்லாம் ஒரே அல்லோல கல்லோலமாயிருந்தது. இதற்கு இடைவிடாத மழை, சாக்கடைத் தேக்கம், கும்பி நாற்றம், மோட்டார் சேறு, தீபாவளிப் பண்டிகை, காலணா பத்திரிகை முதலி யவைகளோடல்லாமல், புதிது புதிதாக "தமிழ் டாக்கி" வந்திருப்பதும் ஒரு முக்கியக் காரணமென்று அறிந்தேன்.

ஃ ஃ ஃ

என்னுடைய தமிழபிமானத்தை நீங்கள் நன்கறி வீர்கள். ஆகவே ''தமிழ் டாக்கி!'' என்றதும் என் உடம்பு சிலிர்த்தது. இதுவரை ''டாக்கி'' களில் ஏதேதோ அநா கரிக பாஷைகளெல் லாம் கேட்டுக் கேட்டுக் காது சலித்துப் போயி ருந்த நான், "ஆகா! டாக்கி யிலும் தமிழா?'' என்று பூரித்துப் போனேன்.

ஃ ஃ ஃ

"ஸ்ரீமதி பி.டி. ராஜ லக்ஷ்மி அம்மாளை இது வரையில் நாடக மேடையில் பார்த்திருக்கிறீர்கள். இப்போது டாக்கியில் வந்து பாருங்கள்" என்று எங்கே பார்த்தாலும் விளம்பரங்கள் காணப்பட்டன. உண்மையென்னவென் றால், நாடக மேடையிலாகட்டும், நடன சாலையிலாகட்டும் அந்த அம்மாளை அதற்கு முன் நான் பார்த்தது கிடையாது. (சொல்ல வெட்கமாயிருக்கிறது; அவர் பெயரைக் கேள்விப்பட்டதுகூட இல்லை. இதனால் அந்த அம்மாளுக்கு ஒருவிதக் குறைவுமில்லையென்பதை அறிவேன். மகாத்மா காந்தி, சார்லி சாப்ளின் என் பவரைப் பற்றித் தாம் கேள்விப்பட்டதே கிடையாது என்றார். இதனால் காந்திக்குக் குறைவே தவிர, சாப்ளினுக்குக் குறை வுண்டா? ஆகையால் வெட்கப்பட வேண் டியது நான்தான்)

ஃ ஃ ஃ

"இது வரையில்தான் பார்க்கவில்லை; இப்பொழுதாவது பார்த்து விடலாம்" என்று தீர்மானித்தேன். அப்படியே ஒரு நண் பரையும் கூட அழைத்துக் கொண்டு போனேன். பார்த்தேன்; கண்ணில் ஜலம் வரும் வரையில் பார்த்தேன்; திரையில் விழுந்த சலன ஒளி, வைர நகைகளின் ஜொலிப்பு, தூய வெள் ளைப் பற்களின் பள பளப்பு ஆகியவற்றி னால் கண் கூசும் வரையில் பார்த்து பிர மித்து நின்றேன்.

ஃ ஃ ஃ

ஓகோகோ! மறந்து போனேனோ? "டாக்கி" என்றாலே வெளியூர் நேயர்கள் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். "டாக்கி"



என்பது ஆங்கில வார்த்தை. "டாக்" என்பதிலிருந்து பிறந்தது. "டாக்" என்றால் பேச்சு. பேசும் சினிமா படக் காட்சிகளுக்கு "டாக்கி" என்று சொல்கிறார்கள். "தமிழ் டாக்கி" என்று கலப்புமொழி பேசுவதற்கு என்னுடைய தமிழபிமானம் இடங்கொடுக்கவில்லை. "தமிழ்ப் பேச்சி" என்று பெயர் கொடுக்கலாமென்று முதலில் தீர்மானித்தேன். ஆனால் நான் பார்த்த "பேச்சி" உண்மையில் "பாட்டி"யாயிருந்தது. அதாவது தமிழ்ப் பேச்சு அதில் கிடையாது. ஏதோ கொஞ்சம் பேச்சு நடந்தது. ஆனால் அது எனக்குப் பேத்தலாகத் தோன்றிற்று. விசாரித்ததில் அது தெலுங்கு பாஷை என்று அறிந்தேன். ஆனால் முதலிலும், நடுவிலும், கடைசியிலும் சில தமிழ்ப் பாட்டுக்கள் பாடப் பெற்றன. ஆகையால் நான் பார்த்து, கேட்டு, அநுபவித்த காலட்சேபத்திற்கு, "தமிழ்ப் பாட்டி" என்று பெயர் கொடுப்பதே பொருத்தமென்று தீர்மானித்தேன். உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் "தெலுங்குப் பேத்தி" என்று வைத்துக் கொள்ளுங்கள்.

"முன்னுறை" என்று பெரிய கொட்டை எழுத்தில் "தமிழ்ப் பாட்டி" ஆரம்பமாயிற்று. தமிழ்க் காதல் கொண்ட என் நண்பரின் நெஞ்சில் அந்த 'ற' கரம் ஈட்டியால் குத்துவது போலிருந்தது. "ஐயையோ! எத்தனையோ அவசரச் சட்டங்கள் போடுகிறார்களே? தமிழ்க் கொலையைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் போட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றார். அத்தகைய சட்டம் பிறந்தால் தமிழ்நாட்டிலுள்ள எத்தனை பத்திரிகாசிரியர்கள், பாடகர்கள் முதலியோருக்குப் பிழைப்புப் போய் விடுமென்று எண்ணியபோது, பெரிய 'காபரா' அடைந்தேன். "அது போகட்டும். இது என்ன முன்னுரை? எதற்கு முன்னுரை? பார்ப்போம்" என்றேன். அந்த விஷயம் இந்த நிமிஷம் வரையில் எங்களுக்கு விளங்கவேயில்லை.

பிறகு, ஸ்ரீமதி ராணி லக்ஷ்மி அம்மாள் மேடைக்கு வந்து, அதாவது திரையில் வந்து, பாடத் தொடங்கினார்கள். அம்மாளின் பற்களைப் பற்றி முன்னம் புகழ்ந்து சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்களுடைய தொண்டையைப் பற்றி அப்படிச் சொல்வதற்கில்லை. கூடிய சீக்கிரம் அவர்கள் நல்ல டாக்டராய்ப் பார்த்துத் தொண்டையை ஆபரேஷன் செய்து குரலை சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. ஆனால் பக்கத்திலிருந்த நண்பர் "இல்லை, இல்லை அவர் குரல் வெகு நன்றாயிருக்கும். டாக்கி இயந்திரத்தின் தப்பு" என்றார். இயந்திரத்தின் மீது எப்போது பழி விழுந்ததோ, அதற்கு மேல் ஒன்றும் பேசுவதற்கில்லை. இயந்திரத்துக்கு ஆபரேஷன் செய்ய முடியாதல்லவா?

ஃ ஃ ஃ

ஸ்ரீமதி ஐந்தாறு தடவை மறைந்து மறைந்து புதிய புதிய உடைகளுடன் வந்து பாடினார். அதில் தேசியப் பாட்டு ஒன்று. "கை ராட்டினமே காந்தி கை பாணம்"



என்று ஆரம்பிப்பது. இந்தப் பாட்டைப் பாடியபோது சபையோர் ஆனந்தப் பரவசமாகிவிட்டார்களென்று சொல்லலாம். அதிலும், அம்மாள் பாடிக் கொண்டே.... இராட்டை சுற்றுவது போல் வெறுங் கையைச் சுற்றிக் காட்டியபோது, சபையோரின் சந்தோஷ ஆரவாரத்தைச் சொல்ல முடியாது. "இராட்டை சுற்றுவது இவ்வளவு சுலபமா?" என்று எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

கதராடையின் பெருமையை அம்மாள் உதாரண ரூபமாகவும் விளக்கியது வியக்கத் தக்கதாயிருந்தது. சுமார் இருபது முறை அம்மாள் வெவ்வேறு விதவிதமான வர்ணமுள்ள பட்டு, சரிகை உடைகளை அணிந்து வந்தார். தேசியப் பாட்டு பாடும்போது மட்டும் வெள்ளைச் சேலை தரித்திருந்தார். "பார்த்தீர்களா? இது கதர்" என்றார் என் நண்பர். ''கதர் என்பதாக பாவனை'' என்றார் பக்கத்திலிருந்தவர். சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் டாக்கியில் நடிக்கப் போகலாம் என்று எனக்குத் தோன்றிற்று. பிரசங்கத்துக்கு வரும்போது மட்டும் கதர் அணிந்து வருவோருக்கு இப்போது தேசிய மேடையில் இடமில்லாமல் போய் விட்டதல்லவா? அவர்கள் ''டாக்கி'' திரைக்கு ஏன் போகக் கூடாது?

ஃ ஃ ஃ

ஆமாம்! டாக்கியில் அதுதான் விசேஷம். அங்கே நடிகர்தான் சர்வாதிகாரி. சபையோர் பல்லை இளித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். பொது மேடையில் ஏறிப் பிரசங்கம் செய்வது சபையோருக்குப் பிடிக்காவிட்டால் அவர்கள் ''உட்காரு உட்காரு'' என்று கத்தலாம். ''வெட்கம் வெட்கம்'' என்று கூச்சலிடலாம். கேள்விகள் கேட்டு மடக்கலாம். அதே விதமாக, நாடக மேடையில் வரும் நடிகரின் பாட்டோ கூத்தோ சபையோருக்குப் பிடியா விட்டால் "உள்ளே போ! உள்ளே போ!'' என்று மரியாதையாக எடுத்துச் சொல்லலாம். டாக்கியில் இந்த ஜம்பமெல்லாம் பலியாது. ஒரு பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டால், அதை நடுவில் நிறுத்த உங்கள் முப்பாட்டன் வந்தாலும் முடியாது. நீங்கள் வேண்டுமானால் காதைப் பொத்திக் கொள்ளலாம்.



''ஒன்ஸ்மோர்'' விஷயமும் இப்படித்தான். நீங்கள் என்னதான் கரடியாய்க் கத்தினாலும் உபயோகமில்லை. உதாரணமாக, ஸ்ரீமதி ராணி லக்ஷ்மி அம்மாள் அன்ன நடை போட்டு அற்புத நடனம் செய்தபோது ''ஒன்ஸ்மோர்'' சத்தம் என்னையறியாமல் அடி வயிற்றிலிருந்து தொண்டை வரையில் வந்து விட்டது. நல்லவேளையாக அவ்விடத்திலேயே அதை இறுக்கிப் பிடித்து அமுக்கி விட்டேன். எனக்குப் பின்னால் யாரோ ஓர் அசல் பட்டிக்காட்டுப் பெயர்வழி உட்கார்ந்திருந்தார். அவர் "ஆஹா! எங்கள் ஊரில் பெண்கள் வரட்டி தட்டுவதற்காகச் சாணம் மிதிப்பார்கள். எவ்வளவோ நன்றாயிருக்கும். அதை விடவல்லவா இது



அழகாயிருக்கிறது?" என்றார். அவருடைய ரஸிகத் தன்மை பட்டணங்களில் வசிக்கும் படித்த மனிதர்கள் பலருக்கு இல்லையே யென்று எண்ணிப் பரிதபித்தேன்.

ஃ ஃ ஃ

"பாட்டு," "தேசியப் பாட்டு," "அன்பிற்கினிய பாட்டு" (இதற்கென்ன அர்த்தமென்று சொல்வோருக்குக் காலணா பத்திரிகை ஒன்று இனாம்.) "நடனம்" முதலியவை முடிந்த பிறகு நாடகம் ஆரம்பமாயிற்று. கல்வியில் நமக்கு மிஞ்சியவர் இல்லை என்று சர்வங் கொண்டிருந்த ஒரு ராஜ கன்னிகைக்கு, நுனி மரத்திலிருந்து அடி மரத்தை வெட்டும் ஓர் இடைப் பையனைக் கலியாணம் செய்து வைக்கிறார்கள். மகா பண்டிதன் என்றெண்ணிக் கலியாணம் செய்து கொண்ட கணவன், உண்மையில் மகா மூட சிகாமணியென்பதைப் படுக்கையறையில் மணமகள் காண்கிறாள். பிறகு, காளி மாதாவைத் தோத்திரஞ் செய்கிறாள். மாதாவின் அருளால் உண்மையிலேயே அம் மடையன் மகா வித்வானாகிறான். சோக ரசமும், ஹாஸ்ய ரஸமும் பொங்கித் ததும்பும்படி நடிக்கக் கூடிய நாடகம். நடிகர்கள் நன்றாக மட்டும் நடித்தால், நாடகம் எவ்வளவோ நன்றாகயிருக்குமென்றெண்ணிச் சந்தோஷமடைந்தேன்.

ஃ ஃ ஃ

இடைப் பையன் நுனிக் கிளையில்



உட்கார்ந்து அடிக்கிளையை வெட்டும் காட்சி நன்றாயிருந்தது. ஆனால் வெட்டிய கிளை கீழே விழும் காட்சியைக் காட்டாமல் ஏமாற்றி விட்டார்கள். வெள்ளைக்காரனுடைய சினிமாவாயிருந்தால் இப்படிச் செய்வார்களா? ஐந்து மைல் உயரத்திலிருந்து ஆகாய விமானம் எரிந்து விழும் காட்சியைக் கூடவல்லவா காட்டுகிறார்கள்? – இதுதான் போகட்டுமென்றால், இடைப் பையன் வெட்டிய கிளை ஒரு பெரிய மண்டபத்

சரியான தகுதி!



தூண் அளவு பெரிதாயிருந்தது. பையன் தரையிலும் கிளை அவன் மேலும் கிடக்கும் அடுத்தக் காட்சியில், அந்தக் கிளை சுண்டு விரல் பருமனாய் மாறி விட்டது. அசல் பாம்புக்கும் பார்த்ததாகச் சொல்லும் பாம்புக்கும் எவ்வளவு வித்தியாசமோ அதைவிட அதிக வேற்றுமை.

ஃ ஃ ஃ

மொத்தத்தில், ஸ்ரீமான் கங்காளராவ் எம்.ஏ அவர்கள் இடைப் பையன் வேஷத்திற்குத் தகுதியுள்ளவராகவே தோன்றினார். அவருடைய முகமானது சாக்ஷாத் மூட சிகாமணித் தோற்றமளித்தது. ஆனால் இதற்கு அவருடைய நடிகத் திறமை எவ்வளவு தூரம் காரணம், இயற்கை சுபாவம் எவ்வளவு தூரம் காரணம் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த சந்தேகம் ஏன் தோன்றியதென்றால், காளி மாதா பிரசன்னமாகி இடைப் பையன் நாவில் பிரணவ

மந்திரத்தை எழுதிய பிறகு, அவன் மகா பண்டிதனாகி விடுகிறானல்லவா? பண்டிதனானதும் முகத் தோற்றம் மாறுதலடைய வேண்டுமே? அதுதானில்லை. அதே அசட்டுச் சிரிப்பு! அதே...!

ஃ ஃ ஃ

ஆனால் கங்காளராவைப் பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. ஸ்ரீமதி ராணி லக்ஷ்மி அம்மாளைப் பார்ப்பதற்காகத்தான் என்னைப் பத்திரிகை மூலம் அழைத்திருந்தார்கள். அதற்காகத்தான் நானும் போனேன். ஆகையால் அம்மாளுக்குத்தான் சில யோசனைகள் கூற வேண்டுமென்பது என் விருப்பம். முதலில் அம்மாள் அடுத்த முறை சினிமாவிலோ, நாடகத்திலோ நடிக்கும்போது தாம் ராணி லக்ஷ்மி அம்மாள் என்பதை அடியோடு மறந்துவிட வேண்டும். யாராக வேஷம் போடுகிறாரோ அவராகவே மாறி விட வேண்டும். உதாரணமாக, படுக்கையறையில் தன்



புருஷன் மகா பண்டிதன் அல்லவென்றும், மகா மூடன் என்றும் ராஜ கன்னிகை காண்கிறாளல்லவா? அப்போது உண்மை ராஜகன்னிகையாயிருந்தால் என்ன செய்திருப்பாள்? "தான் உங்கள் பெண்டாட்டியல்லவா? இப்படிச் செய்யலாமா?" என்று சொல்லி விட்டு அழத் தொடங்கியிருப்பாளா? ஒரு நாளுமில்லை. இது சாதாரணமாய்த் தினம் சண்டை போடும் தம்பதிகளுக்குள் நடக்கும் விஷயம். இராஜ கன்னிகைக்கு முதலில் அளவிலாத வியப்பும், பிரமிப்பும், சந்தேகமும், பயங்கரமும், திகிலும் மாறி மாறித் தோன்றியிருக்கும்.



பேசுவதற்கே நா எழுந்திராது. துக்கம்! எத்தகைய துக்கம்? கண்ணைக் கசக்கிக் கண்ணீர் விடும் துக்கமா? அவகாசமாய் உட்கார்ந்து அழுது ஆறுதலடையும் துக்கமா? நெஞ்சத்தையே இடித்து விடும்படி பொங்கி வரும் துக்கமல்லவா? அம்மணி! தாங்கள் வாழ்க்கையில் துக்கமே அறியாதவர்கள் போலிருக்கிறது. தாங்கள் காட்டிய துக்கம், புருஷன் பூ வாங்கி வர மறந்து போனதற்காக மனைவி காட்டும் துக்கத்தைப் போலிருந்தது.

ஃ ஃ ஃ

மற்றொரு யோசனை. நாடகத்தின் இடையிடையே பாட்டுப் பாடுகிறீர்கள். போகட்டும். ஆனால் ஒவ்வொரு முறையும் பக்க வாத்தியம் வாசிக்க ஆரம்பித்துச் சற்று நேரங் கழித்துத் தாங்கள் பாடத் தொடங்குகிறீர்கள். "இது நிஜக் கதையல்ல; வெறும் நாடகம்" என்பதைக் குழந்தைகளுக்கும் விளங்கும்படி இவ்வளவு வியக்தமாகத் தாங்கள் அடிக்கடி எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. வேறு பல சாதனங்களால் இது சபையோருக்கு ஏற்கனவே தெரிந்தே இருக்கிறது. பக்க வாத்தியமும், தங்கள் பாட்டும் சேர்ந்தாற் போல் ஆரம்பித்தால் ஒரு மாதிரியாயிருக்குமென்று நினைக்கிறேன். அல்லது தாங்கள் முதலில் ஆரம்பித்துப் பக்க வாத்தியம் பின்னால் சேர்ந்து கொண்டாலும் சரிதான்.

ஃ ஃ ஃ

இவையெல்லாம் ஒரு புறமிருக்க,



இரண்டு விஷயங்களுக்காக நான் ஸ்ரீமதி ராணிலக்ஷ்மி அம்மாளைப் போற்றுகிறேன். முதலாவதாக அவர் ஒரு புதிய துறையில் தைரியமாய் இறங்கித் தமிழ் மாதருலகுக்குச் சிறப்பையளித்திருக்கிறார். தமிழ்ப் பெண்மணிகள் மற்றத் துறைகளில் தங்கள் வட நாட்டு சகோதரிகளுக்குப் பின் வாங்காதிருந்து வருகிறார்கள். சுதந்தரப் போரில் சிறை சென்று தமிழகத்தின் மானத்தைக் காப்பாற்றினார்கள் சிலர். சட்டசபையில் அங்கத்தினராகி, உதவித் தலைமைப் பதவியும் வகித்து, கௌரவமாய் நடத்தி, நல்ல சமயத்தில் ராஜினாமா செய்து புகழ் பெற்றார் ஒரு பெண்மணி. தினசரிப் பத்திரிகையொன்றுக்கு ஆசிரியராகச் சில நாள் இருந்து ஆடவர்களின் தலையீட்டைப் பொறாமல் ராஜினாமா செய்து சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டார் வேறொரு பெண்மணி. கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும், தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர்களாகவும் விளங்கி கோர்ட்டுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் அழகு கொடுத்து வருவோரும் இருக்கிறார்கள். நாடக மேடையிலும், கிராமபோன் பெட்டியிலும், நாவல் உலகத்திலும் பிரசித்தி பெற்ற தமிழ்ப் பெண்கள் அனேகர். இவர்களெல்லாம் ஒவ்வொரு துறையில் தீரத்துடன் இறங்கி வழி காட்டியிருப்பதுபோல் ஸ்ரீமதி ராணிலக்ஷ்மி அவர்களும் "டாக்கி" ஒன்று பாக்கியிருக்கக் கூடாதென்று அதில் இறங்கத் துணிந்தது போற்றத் தகுந்ததல்லவா?

ஃ ஃ ஃ

இன்னும் ஒன்று. இதுவரையில் தமிழ் நாட்டில், தமிழில் மற்ற பாஷைகளைக் கலப்பதுதான் தொன்று தொட்ட சம்பிரதாயமாயிருந்து வருகிறது. தமிழில் கதை செய்யும் பாகவதர்கள் தெலுங்கு பாட்டுகளும், ஹிந்துஸ்தானி பாட்டுகளும், மலையாளம், கன்னடம், குஜராத்தி, வங்காளி பாட்டுக்களும், சில சமயம் இங்கிலீஷ் பாட்டுக்களும்கூடப் பாடுவார்கள். தமிழ் நாடக மேடையிலும் மேற்படி பாஷைகளிலெல்லாம் பாட்டுக் கேட்கலாம். ஆனால் அந்த அநாகரிக பாஷைகளைப் பேசும் ஜனங்கள் தமிழைத் திரும்பியும் பார்ப்பதில்லை. பெஜவாடாவிலோ, கல்கத்தாவிலோ, அலகாபாத்திலோ நடக்கும் நாடகத்தில் நீங்கள் தமிழ்ப் பாட்டை எதிர்பார்க்க முடியுமா? – ஆனால் நமது ஸ்ரீமதி அவர்கள் இந்த ஏற்பாட்டைத் தலைகீழாக மாற்றி விட்டார்கள். நாடகத்தில் பேச்செல்லாம் தெலுங்கில் நடந்தது என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இடையிடையே அம்மாள் பாடிய பாட்டுகளெல்லாம் தமிழ்! முதல்தரமல்லவா? மற்ற பாஷைக்காரர்களை இப்படித்தான் தண்டிக்க வேண்டும்! அதாவது, தமிழர்களே மற்ற எல்லா பாஷைகளையும் கற்றுக் கொண்டு, அந்தந்த பாஷைகளில் நாடகம், "டாக்கி" காலட்சேபம், காலணாப் பத்திரிகை முதலியவைகள் நடத்தி, இடையிடையே தமிழைக் கலந்து, அவர்களைத் தமிழ் கேட்கும்படியும், கற்கும்படியும் கட்டாயப்படுத்த வேண்டும். வெகு நாளாக எனக்கு இந்த யோசனை உண்டு. அதை நிறைவேற்றுவதற்கு, முதன்முதலாக வழி காட்டியுள்ள ஸ்ரீமதி ராணி லக்ஷ்மி அவர்களை வாயார வாழ்த்துகிறேன். அடுத்தமுறை அவர் ஹிந்துஸ்தானியிலோ கன்னடத்திலோ 'டாக்கி' நடத்தும்போது, அதை இதேமாதிரி தமிழ்ப் 'பாட்டி' ஆக்கி எனக்கும் ஓர் அழைப்பு அனுப்புவாரென்று எதிர்பார்க்கிறேன்.

(ஆனந்த விகடன் – 16.11.1931)

ஸ்ரீ பைரவ சாய் நூதன திருக்கோயில், மடிப்பாக்கம், சென்னை – 91.



சீரடியில் வாழ்ந்த மஹான் பாபா! இன்று கலியுக தெய்வமாக நல்லோர் உள்ளங்களில் எல்லாம் வாழ்கின்றார்.

மும்மூர்த்திகளின் மறு அவதாரம்தான். சீரடி சாய்பாபா. அவர் மேல் அன்பும் பற்றும் கொண்ட தன்னலம் கருதாது பிறர் நல னையே தம் கருத்தில் கொண்டு வாழும் ஓர் மாமனிதர்தான். மடிப் பாக்கத்தில் வாழும் சீரடி சாய்தாசன், திரு மீனாட்சி சுந்தரம் அவர்கள்.

அவர் தம் பணிகளுக்கு இடையே சாய்பாபாவின் மேல் வைத்த பேரன்பில் அடிக்கடி சீரடி சென்று பாபாவை தரிசித்து வருவது அவர் வாழ்நாளில் ஓர் கடமையாக கொண்டுள்ளார். ஓர்முறை சீரடி சென்ற அவர் பாபாவிடம் தனக்கும் நாங்கள் வளர்த்து வந்த நாய் (பைரவர்) போல் ஒன்று வேண்டும் என உள்ளன்போடு வேண்ட பாபாவின் அருளால் மறு வருடம் சீரடி செல்வதற்குள் ஓர் முஸ்லிம் பையன் மூலம் திபெத் தில் இருந்து அழகான ஓர் நாய் குட்டியை கொடுத்துச் சென்றான். அதைக் கண்டு பரமானந்தம் அடைந்த சாய்தாசன் அதை அன்புடன் பேணி வளர்த்து வந்தார். பதினான்கு வருடம் அன்புடன் பழகிய அந்த அன்பு ஜீவன் (பைரவர்) ஓர் குரு வாரத்தில் (வியாழன்) சித்தியடைந்தது. அதைப் பிரிந்த சாய்தாசன் மிகவும் மனவேதனையுற்று பாபாவை நினைத்து முறையிட்டார். சீரடி பாபா ஓர் நாள் அவர் கனவில் தோன்றி, அந்த நாயை அடக்கம் செய்த இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் எழுப்பும்படியும் அந்த பைரவர் (நாய்) பெயராலேயே அத் திருக்கோவிலில் ஸ்ரீ பைரவ சாய் என்ற திருநாமத்தில்

அங்கு நான் அரூபியாக தோன்றி என் பக்தர்களுக்கு அருள்புரிவேன் என்று கூறி மறைந்தார்.

ஸ்ரீ பைரவரை அடக்கம் செய்திருந்த தன் இரகத்தையே **ஸ்ரீ பைரவ சாய் திருக்கோவிலாக** மாற்றிய ஓர் மாமனிதர்தான் **ஸ்ரீ சீரடி சாய்தாசன்** அவர்கள்.

இத் திருத்தலம் ஓர் தனி சிறப்புற்ற தலமாகும். மூலவர் விமானத்தின் மேல் நவக்கிரஹங்களுக்காக ஒன்பது தனி விமானங்கள் அமையப் பெற்றுள்ளது. நவக்கிரஹங்களின் அருளும், பாபாவின் அருளும் ஒன்றுசேர பக்தர்களின் இன்னல்கள் யாவும் களையப் பெற்று பாபாவின் அருளால் வாழ்நாளில் மகிழ்வும் அன்பும் அடைவார்கள் என்பது உண்மை என்பதை பல பக்தர்கள் அறிவார்கள்.

மேற்படி அறக்கட்டளை தனது திட்டங்களின் படி செயலாற்ற நிதி பற்றாக்குறையினால் கீழ்க்கண்ட திட்டங்கள் பூர்த்தியாகமலே இருக்கிறது. ஆகையால் பக்த கோடிகள் அனைவருக்கும் சீரடி சாய்தாசன் சிரம் தாழ்த்தி விண்ணப்பிக்கும் வேண்டுகோள் அவர் அவர் சக்திக்கேற்ப குறைந்தபட்சம் ரூ. 51- ஆவது எம்.ஓ. செய்யும்படி கேட்டுக் கொண்டு, ஸ்ரீ பாபாவின் அருட்பிரசாதம் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கின்றேன்.

நன்கொடை ரூ. 1000-க்கு மேல் காசோலை மூலம் அனுப்புபவர்க்கு வருமான வரி விலக்கு உண்டு என்பதை தெரிவிக்கின்றோம். **(80 G ACT)**

திட்டங்கள் :

ஏழைகளுக்கு தினம் அன்னதானம் வழங்குதல், தியான மண்டபம், இலவச சிறு கால்நடை மருத்துவம், முதியோர்கள் தங்கும் இல்லம், குழந்தைகள் காப்பகம், அனாதை குழந்தைகள் வளர்ப்புத் திட்டம், இலவச ஆரம்பப் பள்ளி (ஏழைகளுக்காக), திருமண மண்டபம், நிதி உதவி (கர்மாக்கள்), திருமண நிதி உதவி (ஏழைகளுக்காக).

மேற்படி திட்டங்கள் நன்கு நிறைவேற பக்தர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இங்ஙனம்

1. ஆர். சுந்தர்ராஜன், Ret. சீஃப் ஜெனரல் மேனேஜர், Telecom.
2. A. V. ஜெயராமன், Ret. எஸ்டேட் மேனேஜர் K.C.P. (Ltd)
3. சீரடி சாய்தாசன் (மீனாட்சி சுந்தரம்) சேர்மென் அண்ட் பவுண்டர்.
4. M. சுரேந்திரன், மேனேஜர், P.G. கோவிந்தசாமி பிள்ளை எண்டர்பிரைசஸ்,

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :


ஸ்ரீ பைரவ சாய் திருக்கோவில் அறக்கட்டளை, Regd.
96/4, Plot No. 6. பாரத் நகர் மெயின், கீழ்கட்டளை ரோடு, மடிப்பாக்கம், சென்னை - 91.
போன் : 2326833
காசோலை அனுப்புவோர் : A/C No - 11412 இந்தியன் வங்கி, மடிப்பாக்கம் கிளை.

(இது ஒரு சமரச சன்மார்க்க கோவில்)

ஜூலியோ பிரான்சிஸ் ரிபெய்ரோ. மும்பை மாநகர காவல் துறை கமிஷனர், பஞ்சாப் மாநில டி.ஜி.பி எனப் பல உயர்ந்த பதவிகளை வகித்த காக்கிச் சட்டைக்காரர். ருமேனியா நாட்டில், இந்தியத் தூதராகப் பணியாற்றியவர். தற்போது, திருட்டு ஆடியோவை ஒழிப்பதற்காக, இந்திய ஆடியோ துறையினர் அமைத்திருக்கும் அமைப்பின் தலைவர். அண்மையில் சென்னை வந்திருந்த அவரை கன்னிமாரா ஓட்டலில் சந்தித்தோம். 'காபியா? டீயா?' என்றவரிடம், 'காபி' என்றதும் தாமே பிளாஸ்கிலிருந்து பால் எடுத்து ஊற்றி காப்பிப் பொடி, சர்க்கரை கலந்து, 'டேஸ்ட் எப்படி இருந்தாலும், பொறுத்துக் கொள்ளுவீர்களல்லவா?' என்று சிரித்தபடியே நீட்டினார். சுமார் முக்கால் மணி நேரம் அவருடன் பேசினோம். விறுவிறுப்பான அந்தப் பேட்டியிலிருந்து:

''இந்தியாவில் திருட்டு ஆடியோ, வீடியோ பிரச்னை அத்தனை பெரிய பிரச்னையா என்ன?''

''ஆம்! 1996ல் எடுக்கப்பட்ட ஒரு சர்வேயின் அடிப்படையில், திருட்டு ஆடியோ, வீடியோக்கள் மொத்தத்தில் முப்பது சதவீதம். சமீபத்தில் தேசிய உற்பத்தி கவுன்சில், விஞ்ஞான பூர்வமான கணக்கெடுப்பை நடத்தி, இந்தியாவில் விற்பனையாகும் ஆடியோவில், 24 சதவிதம் திருட்டு ஆடியோ என்று கண்டு பிடித்துள்ளது. மக்களுக்கு, நிஜம் எது போலி எது என்பது தெரியாத அளவுக்குப் போலி ஆடியோ கேஸட்கள் தயாரிக்கப்படுகின்றன. போலிகளை வாங்குவதால் இசைத் தொழில் துறைக்கு - அவர்களுடைய சொந்த ஆடியோ சிஸ்டத்துக்கு எவ்வளவு பாதிப்பு என்பதும் மக்களுக்குத் தெரியாது. சிறு தொழிலாகவும், நவீன கருவிகளைக் கொண்டும், போலி ஆடியோ உற்பத்தி சுறுசுறுப்பாக நடக்கிறது. சில பிரபல கம்பெனிகள்கூட, மற்ற கம்பெனிகளின் பாபுலர் ஆடியோ ஆல்பங்களை போலியாகத் தயாரிக்கின்றன. அதன் மூலம், ஒரிஜினல் ஆடியோ கம்பெனிகளை விடப் பலமடங்கு லாபம்



சம்பாதிக்கின்றன.

"பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் போலி ஆடியோ பிரச்னையால் இசை உலகமே அழிந்து விட்டது. அந்த நிலைமை இங்கே வந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்."

"தமிழ்நாட்டில் இந்தப் பிரச்னை உங்களுக்கு எத்தனை தூரம் சவாலாக உள்ளது?"

"மும்பையிலும், கேரளம், கர்நாடகம் போன்ற இடங்களிலும் வெற்றி பெற்ற அளவுக்கு, தமிழ்நாட்டில் எங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றுதான் சொல்லுவேன். அதற்கு முதல் காரணம், இங்கே போலீசுக்கு சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கவே நேரம் சரியாக இருக்கிறது.

ஹுசைனியின் அதிரடி சரியல்ல!

இரண்டாவது காரணம், திருட்டு ஆடியோ தயாரிப்பாளர்களுக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கு! ஒட்டு மொத்தமாய்ச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது, எங்கள் அமைப்பு, ஏறத்தாழ அனைத்து மாநிலங்களிலும் செயல்படுகிறது. போலி கேஸட் உற்பத்தியை அதிகரிக்காமல் தடுத்து நிறுத்தி, அதைப் படிப்படியாய்க் குறைத்து வருகிறோம்."

"அண்மையில், தமிழ்நாட்டில் ஜீன்ஸ் படத்தின் திருட்டு ஆடியோ, வீடியோவைத் தடுக்க ஹுசைனி என்ற கராத்தே வீரரின் உதவி நாடப்பட்டது. அவரது அதிரடி நடவடிக்கைகள் நல்ல பலனளித்தது என்றும் கூறப்பட்டது. இந்த அணுகு முறை சரியானதா?"

"அதை சரியான அணுகுமுறை என்று நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதிரடி நடவடிக்கைகளைவிட, சட்ட ரீதியான அணுகுமுறையே, நீண்ட காலத்துக்குப் பலனளிக்கும். அண்மையில், சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் காளிமுத்துவிடம், இந்தப் பிரச்னை குறித்து விவாதித்தபோதுகூட, ஹுசைனியின் அதிரடி நடவடிக்கைகள் குறித்த தமது அதிருப்தியைத் தெரிவித்தார். சட்டப்படி நடவடிக்கை எடுப்பதால் பல பயன்கள் உண்டு. போலி ஆடியோ தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் ரெக்கார்டிங் கருவிகளை, சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்பித் தருவதை சமீப காலமாய், எங்கள் அமைப்பின் வழக்கறிஞர்கள் கோர்ட்டில் எதிர்க்கிறார்கள். இதனால், பெரும் முதலீடு செய்யப்பட்ட ரெக்கார்டிங் கருவிகள் அரசால் கையகப்படுத்தப்படுகின்றன. இதனால் போலி ஆடியோ உற்பத்தி கணிசமான பாதிப்புக்குள்ளாகிறது. அடுத்து, வேறு பிஸினஸும் செய்து வரும் போலி ஆடியோ உற்பத்தியாளரை, அரஸ்ட் செய்து, ஜெயிலில் வைப்பதால் அவரது நற்பெயரும், தொழிலும் பாதிப்புக்குள்ளாகிறது. இதுவும் நல்ல பலனளிக்கிறது" என்று சொல்லும் ரிபெய்ரோ, தமது காவல்துறை அனுபவங்களை, ஒரு புத்தகமாக எழுதி, பெங்குவின் நிறுவனத்திடம் அளித்திருக்கிறார்.

"அதை வெளியிட்டால் சட்டரீதியாக ஏதாவது பிரச்னை வருமா என்று சந்தேகம் இருக்கிறது. அதனால், சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன். எப்படியும் விரைவில் புத்தகம் வந்து விடும் என்று நினைக்கிறேன்!" என்று ஒரு பரபரப்புக்குக் கட்டியம் கூறி முடித்துக் கொண்டார் ரிபெய்ரோ!

சந்திப்பு: **மௌலி**
படம்: **ஸ்ரீஹரி**

2

சவுண்ட் சர்வீஸ் அடைக்கலராஜ், முனி அடித்தவன் போல உட்கார்ந்து இருந்தான்.

''இது நாடகம்தான்; சினிமா இல்லைன்னு சொல்லிட்டே இல்லை?'' என்றான் மூர்த்தி.

கருப்பண்ணசாமி ஒரு மோகனப் புன்னகையை மலரவிட, "தெரியும்" என்று திருவாய் மலர்ந்தாள் ஊர்மிளா.

உடனே மூர்த்தி இதுகாறும் தான் செய்திருக்கக் கூடிய புண்ணியங்கள் என்னென்ன என்று யோசிக்க ஆரம்பித்தான். குறிப்பிட்டு எதையும் நினைவுகூர முடியவில்லை. இறைவன் விசித்திரமானவன். அழுக்கு மனிதர்கள் வாழ்விலும் அழகுப் புயல் வீசச் செய்கிறான். தன் இன்டலக்சுவல் வெளித் தோற்றத்தில் பிரதிபலித்து விடாதபடி கவனமாக மனதுக்குள் ஒருதரம் அவளுடன் கைகோத்து உலா போய் வந்தான்.

கூடியிருந்த நடிகர்கள் கொட்டாவி விட்டபோது, கருப்பண்ணசாமி பேச ஆரம்பித்தான்.

''வங்காளிகள் ரசகுல்லா மொழியில் நடுரோடில் நாடகம் போட ஆரம்பித்தவுடன் அந்த ஜுரம் மகாராஷ்டிரா வழியாகத் தமிழ்நாட்டுக்குப் பரவியது. இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் சபாக்களில் இடம் கிடைக்காத நவீனர்கள், தங்கள் வன்மத்தை வசவுச் சொற்களில் இறக்கி, கொசுக்கள் நிறைந்த சந்து முனைகளில் நாடகமென்ற பெயரில் நவீன அரசியல் நடத்திக் கொண்டிருந்தபோது, இதோ இந்த மூர்த்தி ஒரு நிஜமான நவீன நாடகத்தை நடத்திவிட முடிவு செய்து என்னுடன் இணைந்தான். நமது நாடகம் ஏழுமுறை மேடை ஏறி இருக்கிறது. 'கருணை நமன' முக்காலாண்டுச் சிற்றிதழ் இந்த நாடகம் பற்றி நிறைய எழுத்துப் பிழைகளோடு ஒரு சிறப்பிதழ் வெளியிட்டது. நிஜமான நவீனங்கள் நிறைய உள்ள இது, பரவலாகாதது தமிழின் துரதிர்ஷ்டம். நல்லவேளை, நமது தோழர், இறவாப் புகழ் பெற்ற அஸ்லாமிய இலக்கியச் செம்மல் பருவா அவர்கள்..''

அப்போதுதான் கருப்பண்ணசாமி அடைக்கலராஜை கவனித்தான். அவன் ஊர்மிளாவுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, ஆட்டோகிராஃப்



வாங்குபவன் போல வெகு அணுக்கமாக என்னவோ சம்பாஷணையில் மும்முரமாக இருந்தான்.

"அன்பர்கள் கவனிக்க வேண்டும்..."

சற்றுக் குரல் உயர்த்திப் பார்த்தான். ம்ஹூம். அடைக்கலராஜ், சாமானியர்கள் எட்ட இயலாத பரவச நிலைக்குப் போயிருந் தான்.

"... இது, கவர்ச்சி கோலோச்சும் காலம். மகாராஷ்டிர நாடக மேடைகளில் முத்தக் காட்சிகள் இடம் பெறுகின்றனவாம். மலினப் பட்டுக் போகிற மேடைகளில் புதுத் தென்றலாய், புதுப் புயலாய்..."

கடுப்பாகிப் போன கருப்பண்ணசாமி அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல், "இப்போது நமது கதாநாயகி மிஸ் ஊர் மிளாவை இங்கே அழைக்கிறேன்..."

திடுக்கிட்டுப் பார்த்தவள், அநாவசிய மாக நாணம் ஏதும் காட்டிக் கொள்ளாமல் ஸ்டைலாக ஜீன்ஸைத் தட்டிக் கொண்டு எழுந்து வந்தாள்.


"ஹாய் ஃப்ரெண்ட்ஸ்" என்று பொது வாக அவள் விளித்தபோது அத்தனை பேரும் கை கட்டிக் கொண்டார்கள்.

''ஐ'ம் நாட் அன் ஆர்டிஸ்ட். பட் கேபிஎஸ் கூப்பிட்டதும் ஏனோ மறுக்கத் தோணலை. ட்ராமா... ரிகர்ஸல்... மேக் அப்... ஸ்டேஜ்... ஆடியன்ஸ்... இட் மஸ்ட் பீ எக்ஸைடிங்...''

"நம்ம நாடகத்துல மேக் அப்பெல்லாம் கிடையாதேடா'' என்று அவசரமாகக் கவலைப்பட்டான் மூர்த்தி.

"சும்மாரு. கதையை மாத் திரலாம்" என்றான் அடைக் கலராஜ்.

கருப்பண்ணசாமிக்குக் கவலையாக இருந்தது.



தற்செயலாக உயிர் பெற்றிருக்கிற அவனது கலை ஜீவித்திருக்க வேண்டும். நண்பர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. வாழ்வில் இதுகாறும் வறட்சியைத் தவிர, வேறெதையும் பார்க்காதவர்கள். அவனும் கூட விதிவிலக்கல்ல. மண்ணில் உதித்து முப்பது வருடங்களுக்கு மேல் வீணடித்துவிட்ட தருணத்தில் ஒளிமயமான எதிர்காலம், கலையழகோடு இல்லறம், கிடைத்தால் கொஞ்சம் காதல் என்று ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் கலை முக்கியம். வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் தந்திருக்கிறது. தன்னை நிரூபிப்பதற்கான சந்தர்ப்பம்.

"ஆகவே நண்பர்களே..."

"மாஸ்டர், பத்து டீ. ஒண்ணு மட்டும் சில்வர் தம்ளரில் அனுப்புங்க..."

மொட்டை மாடி விளிம்பிலிருந்து அடைக்கலராஜ் எதிர் டீக்கடையை நோக்கிக் குரல் கொடுத்தான்.

ரௌத்திரம் தலைக்கேறிய மூர்த்தி, நாலு தாவில் அவனை அடைந்து, "நீ இன்னும் ஒரு அறிவு ஜீவியாகவே இருப்பாய் என்று நினைத்தேன்..."

"வெறுமனே ஜீவிச்சிட்டிருக்கறதே பெரிய விஷயம். ஆளை விடு" என்றான் அடைக்கலராஜ்.

இது பொறுப்பதில்லை தம்பி என்று அவன் சட்டையைப் பற்றியபோது தடதடவென்று ஊர்மிளாவின் செக்யூரிடிகள் படி

"நம்ம கட்சியோட நிலைமையை நினைச்சா எனக்கே சிரிப்பா இருக்கு தலைவரே..."

"என்னய்யா... கிண்டலா பண்றே?"

"பின்ன என்னங்க... செயற்குழு கூட்டத்துக்கு கூட 'உறுப்பினர்களை' காசு கொடுத்து கூட்டிட்டு வர வேண்டியதா இருக்கு!"

– எஸ்.எஸ். பூங்கதிர்



யேறி வந்தார்கள்.

"மிகவும் அவசரம் மேடம். பெரியவருக்கு ஹார்ட் அட்டாக். கிளம்புங்கள்."

"நான் கூட வரேனே?" என்று தாவி எழுந்து மூக்குக் கண்ணாடியைத் தேடி மாட்டிக் கொண்டான் மூர்த்தி.

"வேண்டாம்..." அவசரமாக மறுத்துவிட்டு, "கேபிளஸ், நீங்கள்..."

"அவசியம் வரேன்" என்று புன்னகையுடன் சொன்னான் கருப்பண்ணசாமி. மறக்காமல் கண்ணில் கொஞ்சம் கவலை சேர்த்துக் கொண்டான்.

அவனை வரச் சொன்னதுகூடப் பெரிய விஷயமாகப் படவில்லை. அதென்ன செல்லமாக கேபிளஸ்?

"மடக்கிட்டியேடா பாவி!" என்றான் அடைக்கலராஜ்.

நவீன நாடகத்தை அவன் வீட்டு மொட்டை மாடியில் அம்போவென்று விட்டு விட்டு அத்தனை பேரும் அவசரமாகக் கீழே இறங்குவதற்குள் ஊர்மிளாவின் ஸியரா, தெருவை ரகளையாக்கிவிட்டுப் போயே விட்டது.

"யாருடா இவன்?" என்றான் அடைக்கலராஜ், சாலையையே பார்த்துக் கொண்டு. விட்டால் பிடி மண்ணை அள்ளித் தலையில் அட்சதையாகப் போட்டுக் கொண்டு விடுவான் போலிருந்தது.

"ஹூம். யாருன்னு தெரியாமலே அப்படி தேன் குடிச்ச நரி போலத் தவிச்சே இல்லை? சொன்னால் கொஞ்சம் பித்தம் தெளியும்னு நினைக்கிறேன். கிட்டவா" என்றான் மூர்த்தி. சொன்னான்.

"கடவுளே! நிஜமா?"

"கருப்பண்ணசாமி என்கிட்ட முதலிலேயே சொல்லிட்டான்."

"நல்லவேளை. இப்பவாச்சும் தெரிஞ்சுதே. அன்புச் சகோதரி ஊர்மிளா நிஜமாவே நம் நாடகத்துல நடிக்க சம்மதிச்சுட்டாங்களா?"

"அவளேதான் அறிவிச்சுட்டாளே! ரிகர்ஸல், மேக் அப், ஆடியன்ஸ்... இட் மஸ்ட் பீ எக்ஸைடிங்."

"ஒரு எழவும் நம்ப முடியலை. எப்படிப் பிடிச்சானாம் இவளை?"

"சுற்றிலும் நிறையப் புகை. பல வயிறுகள் தந்தூரி அடுப்பு ஆனதன் விளைவு" என்றான் கருப்பண்ணசாமி. போகிற போக்கில் நண்பர்களைத் திரும்பி ஒரு பார்வை. திரும்பி வந்ததும் நிச்சயம் ஒரு நேர்முகத்

ஐஸ், ஐஸ் பேபி!

இவன் பெயர் வில்லியம் லூகாஸ். வயது 12. இவன் போட்டிருக்கிற வெள்ளை பனியனில், உள்ளே பாக்கெட்டுகள் பூரா ஐஸ். மேலே ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டுதான் வெயில் அடிக்கிறபோது வெளியே போவான். காரணம் இவனுக்கு வந்திருக்கும் 'EPP' நோய். ஐஸ் பனியன் இல்லாமல் வெயிலில் வெளியே போனால், தோல் வீங்கிப் போய், சிவந்து, வெடிப்புகள் வந்து விடும்!

— விச்சு

நன்றி : டைம்ஸ் ஆஃப் இந்தியா



தேர்வு இருக்கும். ஊர்மிளாவின் அண்மையில் ஒரு கார்ப்பயணம் என்பது அவர்கள் அளவில் இமயத்தின் உச்சியில் புலிக்கொடி நாட்டிய சம்பவம்.

ஊர்மிளா கிலீரென்று சிரித்தாள், அப்பாவுக்கு வந்திருக்கும் ஹார்ட் அட்டாக்கை மறந்து. ஞாபகப்படுத்தினான் கருப்பண்ணசாமி.

"ஸாரி. நான் என்னென்னவோ பேசிக் கொண்டு வருகிறேன், உங்கள் கஷ்டம் கருதாமல்."

"கஷ்டம்? ஓ, நீங்கள் ஹார்ட் அட்டாக்கைச் சொல்கிறீர்களா?"

அட்டகாசமாகச் சிரித்து விட்டு, காதருகே குனிந்து, படு ரகசியமாக "அதெல்லாம் சில அரசியல் ட்ரிக்ஸ். அப்புறம் சொல்றேன்."

சற்று நேரம் சாலையைப் பார்த்துக் கொண்டே வந்தவள் சட்டென்று, "நீங்கள் கூப்பிட்டதும் நான் ஏன் உடனடியாக ஒப்புக் கொண்டேன் தெரியுமா?"

"சொன்னால் தன்யனாவேன்."

அவள் ஒரு கணம் யோசித்தாள். பின் கண் மூடி மெல்லச் சொன்னாள்: "என் அம்மா ஒரு நாடக நடிகை. ஆனால் பாவம். அவள் கலையை யாரும் பொருட்படுத்தியதில்லை."

"அடடா, உங்கள் அப்பா ஒரு கலா ரசிகராயிற்றே."

"அதனால்தான் என் அம்மாவை நாலாவதாக மணந்து கொண்டு அவளுக்கு சாப விமோசனம் அளித்தார். அம்மா பெயர் கலா."

"எந்த ட்ரூப் உன் அம்மா? டி.கே.எஸ்? நவாப் ராஜ..."

"வெயிட். இங்கே இல்லை. மாண்டியா."

"தாய் மண்ணே வணக்கம். இப்போது, நீங்கள் நடிக்க அப்பா சம்மதித்து விட்டாரா?"

"ஓயெஸ். பெண் சுதந்தரம் அவரது தாரக மந்திரமல்லவா? நான் ஒரு வாரம் அஸ்ஸாம் போய் வருவதில் அவருக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. அவரும் கொஞ்சம் நல்லுறவு வளர்ப்பதன் பொருட்டு மொரீஷியஸ் போகிறார், வரும் வாரம்."

"வாழ்க. ஒரு சலூன்காரன் ட்ரூப்பில் என்று தெரிந்த பிறகும் சம்மதித்தாரா? மிக ஆச்சர்யம்."

"நான், பாதல் சர்க்கார் ட்ரூப் என்றல்லவா சொல்லி இருக்கிறேன்?"

ஐயோ! என்று போலியாக மயங்கிச் சரிந்தான் கருப்பண்ணசாமி.

குடுகுடுப்பைக்காரன் மூட்டை போல் ஒன்றை சைக்கிள் கேரியரில் வைத்துக் கொண்டு வந்து இறக்கினான் தட்சிணாமூர்த்தி.

"என்னது?" என்று எட்டிப் பார்த்தான் அடைக்கலராஜ்.

"செட் பிராபர்டீஸ். நாம் கடேசியா நாடகம் போட்டுக் கிழிச்சதில் மிஞ்சியது. கிளைமாக்ஸிலே, ஹீரோயின் ரேடியோ கேட்டுட்டே ஆத்துல இறங்கி மறைந்து போவாள் இல்லை? அந்தப் புது டிரான்ஸிஸ்டரோட கேரண்டி கார்டுகூட இருக்கு..."

"ட்ரான்ஸிஸ்டரைத்தான் பழைய ஹீரோயின் ஆட்டோ காசுக்கு பதில் எடுத்துட்டுப் போயிட்டாள். ப்ச்" என்றான் அடைக்கலராஜ்.

பழைய உருப்படாத குப்பைகள் எதுவும் வேண்டாம் என்று கருப்பண்ணசாமி சொல்லி விட்டான். கலை தாகம் கழுத்துக்கு

"மூட நம்பிக்கை மனித அமைப்பில் ஓர் அம்சம். அதை ஓட்டி விட்டோம் என்று நாம் மனக் கோட்டை கட்டும்போது, அது நம் மனதின் ஒரு மூலையில் பதுங்கி இருக்கும். தனக்கு அபாயம் வராது என்ற ஒரு நிலை ஏற்பட்டால் திடீரென்று வெளியாகும்."

– கதே; தகவல் : சி. பெரியசாமி

மேல் நிற்கிற செல்வச் சீமாட்டி ஊர்மிளா. குழுவின் புரவலராக இருந்து சகல தேவைகளையும் கவனித்துக் கொள்வாள். ரிகர்ஸலுக்கு வருகிற நாட்களில் காப்பி, டிபன் செலவு உட்பட.

"தெய்வம்டா நீ!" என்றான் மூர்த்தி.

நீண்ட நாட்களுக்குப் பின் அவன் உணர்ச்சிவசப்பட்டு, கண்ணீர் மல்க நிற்பதைப் பார்த்த கருப்பண்ணசாமி, தோளில் தட்டி, 'ரிலாக்ஸ்' என்றான்.

"பெரிய இடம்ங்கற. சட்டுனு கழட்டி விட்டுட்டுப் போயிட மாட்டாளே! எதுக்கும் ஸ்டெப்னியா வேற ஒரு ஹீரோயின்..."

"அவசியமில்லை. நான் பார்த்துக்கறேன். ரிகர்ஸல் ஆரம்பிக்கலாமா?"

"ஊர்மிளா வரலையே இன்னும்?"

"வந்துடுவா. ஏழாவது சீன்லதானே அவளுக்கு என்ட்ரி? நாம் ஆரம்பிக்கலாம்."

தெருவைக் கிழித்துக் கொண்டு ஊர்மிளாவின் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் குடியரசு தின அணிவகுப்பு போல மொட்டை மாடியில் அனைவரும் விரைந்து எழுந்து நின்றார்கள். அவசரமாக மேலே வந்த ஊர்மிளா, 'ஸாரி' என்று பொதுவாகச் சொல்லி விட்டு, கருப்பண்ணசாமியைத் தனியே அழைத்துப் போனாள்.

"கேபிஎஸ். ஒரு சின்ன சிக்கல்."

"ஐயோ, அப்பா நடிக்க வேணாம்னுட்டாரா? பாதல் சர்க்கார் ட்ரூப் நம்மூர் சமாசாரமில்லைன்னு தெரிஞ்சு போச்சா? பரீக்ஷா ஞாநி ட்ரூப்னு சொல்லியிருக்கலாமில்லை? ஞாநி கூடத் தெரிஞ்சவர்தான். பரீக்ஷா வழங்கும் கேபிஎஸ் ப்ரொடக்ஷன்ஸ்னு குஞ்சுமோன் பாணியில் பெயரை மட்டும் இரவல் வாங்கிக்கலாம்."

"சூ! அது ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை. இது வேற சிக்கல். ஒரு நாலு நாள் நான் வெளியில் எங்காவது தங்கணும்."

"ஏன்?"

"சொன்னேனில்லை? ஒரு சிக்கல். நான் வீட்டுல – மெட்ராஸ்ல இல்லைங்கற மாதிரி."

கருப்பண்ணசாமிக்குக் குழப்பமாக இருந்தது. நிஜமாகவே அவள் பேசியது அவனுக்குப் புரியவில்லை. புரியும்படிச் சொல்லேன், ஊர்மிளா என்கிற ஒயில் வடிவே!

அவள் ஒருகணம் சுற்றுமுற்றும் பார்த்தாள். குழு முழுக்கத் தன்னையே விழுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். தேவையற்ற பரபரப்பு.

சட்டென்று கருப்பண்ணசாமியின் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏழெட்டுப் படிகள் இறங்கி, மூச்சு வாங்க நின்றாள்.

"சொல்லுங்க" என்றான் கருப்பண்ணசாமி.

சொன்னாள். படு ரகசியமாக. காற்றுக்கும் கேட்காத குரலில்.

"சரி" என்றான் அவன்.

"முடியுமில்லையா?"

"கொஞ்சம் கஷ்டம்தான். பார்க்கறேன்."

"ப்ளீஸ். எப்படியாவது! எப்படியாவது!"

"ஏற்பாடு செய்யறேன். இப்ப ரிகர்ஸலுக்குப் போகலாமில்லையா?"

"உம்!"

இரண்டு மணி நேரம். யாருக்குமே சிரத்தை இல்லை. அப்படி என்ன பரம ரகசியம்? கருப்பண்ணசாமி. எந்த வகையில் அவன் இவளுக்கு முக்கியமாகிப் போனான்?

ஊர்மிளா கிளம்பிப் போனதும் அடைக்கலராஜ், கருப்பண்ணசாமியை வழி மறித்து நிறுத்தினான்.

"சொல்லுடா! என்ன ரகசியம்?"

"ஒண்ணுமில்லை ராஜு. ஒரு சின்ன ஹெல்ப் கேட்டாள்."

"அத்தனை ஒஸ்தி மகளுக்கு நீ என்ன உதவ முடியும்? சொல்லிடு. இது வேற ரூட்தானே?"

"சேச்சே!" என்றான் கருப்பண்ணசாமி.

"எங்ககிட்ட கேட்டா, நீ செய்யக் கூடிய உதவியை நாங்க செய்ய மாட்டோமா?" என்றான் மூர்த்தி.

"அதானே?" என்றான் அடைக்கலராஜ்.

"நீங்க? செஞ்சிடுவீங்களா?"

"ஏன், செய்ய மாட்டமா? உலக அழகி ஊர்மிளாவுக்காக ஒரு உதவி! கேவலம் ஒரே ஒரு உதவி."

"சரி, நீயே செய்."

"சொல்லு! என்ன செய்யணும்?"

"ஒரு கொலை" என்றான் கருப்பண்ணசாமி.

(தொடரும்)

நுகர்வோரே கவனியுங்கள்!

பத்துக் கட்டளைகள்

● சீக்கிரம் நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதுதான் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கம். அதனால் நுகர்வோர் நீதிமன்றத்தில், மனுவை அளித்த தொண்ணூறு நாட்களுக்குள் தீர்ப்பு அளிக்கப் பட்டுவிடும்.

● வழக்குத் தொடுக்க எந்த ஸ்டாம்ப் கட்டணமும் தேவையில்லை. வக்கீலும் வேண்டாம். புகாரை ஐந்து பிரதிகள் எடுத்துக் கொடுத்தால் போதும். தீர்ப்பின் நகல்கூட இலவசமாகவே கிடைக்கும்.

● தொலைபேசி, ரயில்வே, ஆவின் போன்ற அரசுத் துறை நிறுவனங்களின் மீது கூட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.

● குறிப்பிட்ட தரம், மாடல், ரகம் ஆகிய விஷயங்களில், விற்பனையாளர் கூறியதற்கும், அதை நம்பி வாங்கிய பொருளுக்கும் வேறுபாடு இருந்தால் இப்படி வழக்குத் தொடுக்கலாம். ஸெகண்ட் ஹான்ட் பொருளை புதுப் பொருள் போல் ஏமாற்றி விற்றாலோ, உண்மையில் இல்லாத பயனை ஒரு பொருளுக்கு இருப்பதாகச் சொல்லி விற்றாலோ வழக்குத் தொடுக்கலாம்.

● புடைவைக் கடை பில்லின் பின் பகுதியில், பொடி எழுத்துக்களில் "ஒருமுறை வாங்கினால் வாங்கியதுதான். தரத்துக்கு உத்தரவாதமில்லை" என்றிருக்கலாம். ட்ரைக்ளீனிங் கடை பில்லில் "ஏதாவது துணி தொலைந்து போனால் அதிக பட்சம் நூறு ரூபாய் தருவோம்" என்றிருக்கலாம். இது போன்ற அநியாய நிபந்தனைகளுக்கு நாம் கட்டுப்படத் தேவையில்லை. இவற்றையும் மீறி நுகர்வோருக்கு ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.



● பொருள்கள்தான் என்றில்லை. சில குறிப்பிட்ட வேலைகளுக்காக நாம் அமர்த்துபவர்கள் ஒப்புக் கொண்ட வேலையைச் சரியாக முடிக்கவில்லை என்றாலும் கூட வழக்குத் தொடுக்கலாம். இந்தப் பிரிவில் வழக்கறிஞர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், ஆடிட்டர்கள் ஆகியோரும் அடங்குவார்கள்.

● வீட்டு வேலைக்காரர்கள் நுகர்வோர் வழக்குகளில் அடங்க மாட்டார்கள்.

● ரியல் எஸ்டேட்காரர்கள் மீது கட்டட சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தில் வழக்குப் போட முடியாது. ஆனால் அவர்கள் சில சலுகைகளையும், ஆதாயங்களையும் தருவதாகக் கூறிவிட்டு ஏமாற்றினால், வழக்குத் தொடுக்கலாம்.

● பாதிக்கப்பட்டவர் மட்டுமல்ல; அவரது சார்பில் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் குழுவும் வழக்குத் தொடுக்கலாம்.

● இந்தச் சட்டத்தின் நோக்கம் நிவாரணமளிப்பதுதான். பொருளாதாரக் கோணத்தில் மட்டும். எனவே சிறை போன்ற எந்த தண்டனையையும் இந்த நீதிமன்றங்கள் வழங்குவதில்லை. ○

— ஜி.எஸ்.எஸ்.

நடக்குமென்பார் குரு!


மேஷம் :



(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)


எதுவுமே நெனச்சபடி நடக்கலையே, அலைச்சலும் அதிகமா இருக்கே, பெத்த புள்ளைங்களாலயே பிரச்னைங்க வருதேன்னு கவலைப்படாதீங்க. வாரக் கடைசியில எல்லாமே சரியாயிடும். முக்கியமான திட்டங்கள் கூட நிறைவேறிட சான்ஸ் இருக்கு. பொருளாதாரமும் ஒரு மாதிரி சிராயிடும். கூடவே செலவும் செய்வீங்க. ஆனாலும் பாருங்க, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரம் 'மாமூல்' வாழ்க்கைல பாதிப்பே இருக்காது.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசிரிஷம் 2-ம் பாதம் வரை)*




பிரச்னையில்லாத வாரம் உங்களுக்குத் தாங்க. அப்படியே பிரச்னைகள் வந்தாலும் வந்ததே தெரியாம சால்வாயிடும்! உங்களை ஏதும் சங்கடத்தில சிக்கவைக்கற மாதிரியான சூழ்நிலைகள் உருவானாலும் பக்குவமா நீங்க அதை சமாளிச்சிடுவீங்க. அதிக அலைச்சல் இருக்கும்னாலும் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்தற அலைச்சலாத்தான் அது இருக்கும். நிர்வாகத்துல ஓகோன்னு செயல்படுவீங்க. இருந்தாலும் பயணத்துல மாத்திரம் எச்சரிக்கையா இருக்க வேண்டியது அவசியம்.

மிதுனம் : *(மிருகசிரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*



உங்க தோற்றமே பிறரை வசீகரிக்கிற மாதிரி இருக்கிறப்போ உங்களுக்கு என்னங்க குறை! அதுவே பல விஷயங்களை உங்களுக்குச் சாதகமா பண்ணிடுமே! அரசாங்க விஷயம் ஏதும் இருந்தா இந்த வாரம் அதில ஒரு திருப்பம் ஏற்படும். பரம்பரைச் சொத்து லாட்டரி மாதிரியான திடீர் அதிர்ஷ்டத்துக்கும் சான்ஸ் இருக்கு. பணப் புழக்கம் ஓகோன்னு இல்லாவிட்டாலும் பிரச்னை தராம இருக்கும்.

கடகம் :



(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

இந்த வாரம் உங்க பேச்சு சாமர்த்தியமே பல காரியங்களை சாதிச்சுக் கொடுத்திடும். உல்லாசப் பயணம், விருந்து கேளிக்கைன்னு கலந்துக்குவீங்க. அப்புறம் சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்! வீட்டுக்காக உபயோகமான செலவுகள் செய்வீங்க. அதனால அம்மணிகளும் சந்தோஷப்படு வாங்க. பண நடமாட்டமும் அமோகமா இருக்கும். இருந்தாலும் குருவோட நிலை உங்களுக்கு அனுகூலம்னு சொல்ல முடியாததால, எதிலும் எச்சரிக்கையா இருக்கறதே நல்லது.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*




குருவோட வக்கிரம் போய், சுக்கிரன் பலமடையறதால, நல்ல வாய்ப்புகளும், வரவேற்பும் பாராட்டும் உங்களைத் தேடி வரும். பொருளாதாரமும் திருப்தியா இருக்கும்; சிலருக்கு அமோகமாவே இருக்கும். வீடு, மனை, ரியல் எஸ்டேட் விஷயங்கள்ல எச்சரிக்கை அவசியம். பிள்ளைங்களால கூட பிரச்னைகள் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. கணவன் மனைவிக்கிடைல சலசலப்பு வர்றதுக்கும் வாய்ப்பு இருக்கறதால விட்டுக் குடுத்துப் போறது நல்லது.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*



நீங்க நெனச்சபடி எதுவும் நடக்காது. தடங்கல்கள் வந்துக்கிட்டே இருக்கும். இதால மனக்குழப்பம் வரத்தானே செய்யும். நேரடி



ரிஷப ராசிக்காரரான தமிழன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் சுதாங்கனுக்கு அதிக அலைச்சல் இருந்தாலும் அவரது ஆற்றலும் வெளிப்படும்.

அக்னி சர்மா பக்கம்

செப்டெம்பர் 16 முதல் 22 வரை

எதிரிங்க மட்டுமல்ல, உங்க கூடவே இருந்து உங்களை மாட்டிவிடுகிற கண்ணுக்குத் தெரியாத எதிரிகளும் இருக்காங்கன்றதை மறந்திடாதீங்க. நீங்க கொஞ்சம் உஷாரா இருந்தாத்தான் இவங்களை சமாளிக்க முடியும். ரொம்பவே உஷாரா இருந்தா எதிரிங்களை அடக்கவும் செய்யலாம்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

வெற்றி தேவதை உங்க பக்கம் இருக்கற வாரம். இந்த வெற்றி வெளிச்சத்துல எதிரிங்க காணாம போயிடுவாங்க. கோர்ட், பந்தய விஷயங்கள்ல நல்ல திருப்பம் ஏற்பட்டு உற்சாகமாவீங்க. சிலருக்குப் புதிய வாகன ப்ராப்தியும் உண்டு. மத்தவங்களுக்கும் ஏதாவதொரு பொருள் வாங்கற சான்ஸ் இருக்கு. இதுவரைக்கும் உங்களைக் கண்டுக்காம இருந்த நண்பர்களும் பந்துக்களும் இப்ப உங்களைத் தேடி வந்து விசாரிப்பாங்க. பழைய பாக்கியெல்லாம் வசூலாகறதோட திடீர் அதிர்ஷ்டமும் அடிக்கலாம்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

ராசிநாதன் பலவீனமா இருந்தாலும் உங்களோட முன்னேற்றத்துக்குத் தடையேதும் வந்திடாது. அரசாங்க சம்பந்தப்பட்ட காரியங்கள் கூட மாமூல் இல்லாம முடியக் கூடிய சாத்தியம் கூட இருக்கு! அரசியல்வாதிகளுக்கு எப்பவுமே யோக பலன் தான் னாலும் இந்த வாரம் டபுள் ஓகோ! மாசச் சம்பளக்காரங்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்த இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்கும்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

நீங்க நெனச்சபடி எதுவும் நடக்காது. உங்கள் சிந்தனையும் செயலும் நேர்மையான வழியிலிருந்து பிசகினா, உங்களை அதல பாதாளத்துல தள்ளி விட்டுடும். அதனால கெட்ட சகவாசம் வேண்டவே வேண்டாம். கொடுக்கல் - வாங்கலும் வேண்டாம். மாசச் சம்பளக்காரங்க கவனமா வேலை செய்யலீன்னா அதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாக வேண்டியிருக்கும். பக்கத்து வீட்டுக்காரரா இருந்தாலும் சரி, பக்கத்து சீட்டுக்காரரா இருந்தாலும் சரி, அநாவசிய பேச்சு, வாக்குவாதம் வெச்சுக்காதீங்க.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

காரியங்களைச் சாதிச்சுக் கொள்கிற திறமை உங்க பக்கம் இருக்கறப்போ என்ன கவலை? வருவாய் கூடறதால பண நடமாட்டம் அதிகம் இருக்கும். குடும்பத்தோட பல பிரச்னைகளுக்குப் பணமே மருந்தா இருக்கறதால, இந்த வாரம் குடும்பத்தில் குதூகலம் தான். அதே சமயம் குடும்பத்தில் செலவுகளும் அதிகரிக்கும். வீடு, மனை, வாகனம் வாங்கற உத்தேசமிருந்தா இந்த வாரம் வேண்டாம். பயணத்துல கவனம் தேவை. இரவுப் பயணத்தைத் தவிர்க்கறதே நல்லது.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

குடும்பத்துல சில சந்தோஷமான சமாசாரங்கள் நடக்கறதால உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. புகழுக்கும் பாராட்டுக்கும் இந்த வாரம் பஞ்சமே இருக்காது. இதுவரைக்கும் யாரோடவாவது மனஸ்தாபம் இருந்து வந்திருந்தாலும் இந்த வாரம் சரியாயிடும். வழக்கு கிழக்குன்னு அல்லாடற விஷயங்கள்ல கூட வெற்றிக்கான பாதை பளிச்சினு தெரியும். ஆனாலும் வெளி நாட்டுச் சேதி அனுகூலமா இருக்காது. பயணத்துல எச்சரிக்கை வேணும்.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க திறமை பளிச்சினு தெரிஞ்சா பாராட்டுக்குப் பஞ்சம் இருக்குமா? வெளிநாட்டு உதவியும் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஆனாலும் காரியத் தடங்கலையும் அலைச்சலையும் தவிர்க்க முடியாது. செலவும் அதிகமாத்தான் இருக்கும். கொடுக்கல் - வாங்கலில் மாத்திரமல்ல; நாக்கு விஷயத்திலும் உஷாராயில்லேன்னா பணாலாயிடுவீங்க. பயணத்தைத் தவிர்த்திடறதுதான் நல்லது. வேறு வழியே இல்லேன்னா, தகுந்த முன்னெச்சரிக்கையோட போய்ட்டு வாங்க. ○



மனமகிழ்ச்சியான விஷயம்

நான் சிறு தொழில் முறையாக நங்கநல்லூரில் PCO பூத் வைத்துள்ளேன். என்னுடைய PCO பூத் சிறிது நவீனமயமாக்கச் செய்வதற்கு எனக்கு பணப்பற்றாக் குறையிருந்தது. நான் ராம் காஷ்யப் நிறுவனத்தில் சிறு சேமிப்பு முறையாக சீட்டு கட்டியிருந்தேன். அந்த மாத குலுக்கலில் எனக்கு சீட்டு விழுந்தது. எனக்கு சீட்டு பணம் கிடைத்ததும் என்னுடைய PCO பூத் நவீனமயமாக்க பேருதவியாக இருந்தது. எனது பணத்தட்டுப்பாடு சமயத்தில் சமய சஞ்சீவியாக ராம் காஷ்யப் நிறுவனம் எனது கஷ்டங்கள் எல்லாம் அகல காரணமாக இருந்தது, மன மகிழ்ச்சியை தந்தது.

திரு க. கோவிந்தசாமி
சென்னை-600 061.





நீங்கள் கேட்டவை — தராசு



● செ. மலர்விழி, மதுரை - 10.

? கூட்டுச் சேரா நாடுகள் மாநாட்டில் 'காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும்' என நெல்சன் மண்டேலா கூறியதற்கு வாஜ்பேயி எதிர்ப்புத் தெரிவித்தது ஏன்...?

! இரு நாடுகளுக்கிடையேயான பிரச்னையில் இன்னொரு நாடு தலையிடுவது தவறு என்பதால் ஆட்சேபித்தார். ஆனால், போக்ரன் பரிசோதனைகள்தான் இதர நாடுகளும் கவலையுடன் பேசும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்தின என்பதை மறுக்க முடியாது. மாறி மாறி அணு ஆயுதப் பரிசோதனை, அடிப்படை வாதம் என்று செயல்படும்போது எச்சரிக்கத்தான் செய்வார்கள். உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற சில விஷயங்களில் விட்டுக் கொடுப்பதுதான் விவேகம். நாட்டுக்கும் நல்லது.



● ச. ராதாகிருஷ்ணன், சென்னை - 15.


? பத்திரிகைக்காரர்களைக் கண்டாலே ஜெயலலிதாவுக்குப் பிடிப்பதில்லையே... ஏன்?

! தவறு! எதிர்த்துக் கேள்வி கேட்கும் பத்திரிகைக்காரர்களை மட்டும்தான் அவருக்குப் பிடிக்காது.

● ஜெ. கண்ணன், சென்னை - 101.

? 'சுதேசி'யைப் பற்றி வாய் கிழியப் பேசும் பா.ஜ.க அரசு, உள்நாட்டு விமானப் போக்குவரத்தைத் துவங்க அனுமதி கேட்ட டாட்டா நிறுவனத்தைப் புறக்கணித்திருக்கிறதே...?

! டாடா நிறுவனம் பல மாதங்கள் காத்திருந்து சோர்ந்து போய் திட்டத்தையே கைவிட்டு விட்டது! ஆட்சியின் சுறுசுறுப்புக்கு இது ஓர் உதாரணம்!



● ஆர். செல்லம்மாள், திருச்சி - 6 ❑

? வீதி தோறும் விஸ்கியும் பிராந்தியும் விற்க அனுமதி கொடுத்துள்ள அரசு, மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்கிறதே... வயிறு முட்டத் தின்று விட்டு உண்ணாவிரத நாடகம் நடத்துவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்...?

! படிப்பறிவற்ற பாமர மக்கள் ஏழைகளாகவும் இருக்கும்போது, குடித்து விட்டு வாழ்க்கையை, குடும்பத்தை வீணாக்கிக் கொள்ளாமல் அவர்களைக் காக்கும் பொறுப்பு நாட்டுக்கு இருக்கிறது. மதுக்கடை மது வகைகள் விலை அதிகம். அதனால் இந்த எளிய

காதல் படங்களின் வெற்றி எதுவரை...?



வர்கள் அதை நாட மாட்டார்கள் என்பது நம்பிக்கை.

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்

? சமீப காலமாக கலைஞரின் மாவட்ட விஜயங்களில் 'ஜெ' பாணியில் வரவேற்புகள் அளிக்கப்படுகின்றனவே... கவனித்தீர்களா?

! தி.மு.க.வின் அடிமட்ட நிலையில் இருக்கும் கட்சிக்காரர்களின் கைகளை, நேர்மை என்னும் இரும்பு விலங்கால் கட்டிப் போட கலைஞர் முன்வராத வரையில் விஷயம் விபரீதமாகத்தான் போகும். இதற்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடக்கும் முறைகளும், உள்ளாட்சிகளில் வசூலாகும் மாமூல்களுமே உதாரணம்.

● பா. வடிவேல், தேவனாங்குறிச்சி

? நீங்கள் வானொலி கேட்டு ரசிப்பதுண்டா?

! நிறையவே உண்டு! கர்நாடக இசைக்கு வானொலி முக்கியத்துவம் தரும்வரை எனது வோட்டு வானொலிக்குத்தான். சமீப காலமாக ரசித்து வருவது புதன் இரவு 8-8.30 ஒலிபரப்பாகும் தியாக பூமியின் வானொலி வடிவத்தை...

● எம். கருணாகரன், சென்னை – 33

? நம் நாட்டில் எல்லாத் துறைகளிலும் திறமையானவர்கள் இருந்தும் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் இல்லையே... ஏன்?

! நம் நாட்டில் 51 சதவிகிதத்தினர் இன்னும் எழுத்தறிவு பெறாதவர்கள் என்பதுதான் முக்கியக் காரணம்.

● 'செந்தாழை' நாதன், செந்தாரப்பட்டி

? வைகோ அறிக்கை ஏதும் விடாமல் அமைதியாகச் செயல்படுகிறாரே...?

! பிரதமர் வருகிறார் என்பதால், அமைதியாக ஈழ ஆதரவு கோஷங்களைத் தாற்காலிகமாகவாவது வாபஸ் வாங்கி விட்டாரே! சாமர்த்தியம்தான். இங்கேயும் பகைத்துக் கொள்ளாமல் அங்கேயும் நல்ல பெயர் வாங்கிக் கொண்டு...

● பிரபா விங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்.

? ஜெயலலிதாவின் தொடர் அறிக்கைகள் எதைக் காட்டுகின்றன...?

! லேட்டஸ்ட் அறிக்கை, அவர் பி.ஜே.பி ஆதரவு என்னும் பாதுகாப்பை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை என்றே காட்டுகிறது.

● ஏ. காதர், நாகூர் – 2

? காதல் படங்களின் வெற்றி எதுவரை...?

! அதே ரக அடுத்தப் படத்தின் தோல்வி வரை.

● கே. சபாபதி, கோவை – 42.

? எல்லோருமே ஜெயலலிதாவைக் கைவிட்டு விட்டதைப் போல் தோன்றுகிறதே..?

! அவரது அகம்பாவம் இன்னமும் அவரைக் கைவிடவில்லையே!

● ஜி. ஜெயராமன், எரவாஞ்சேரி.

? ஆனந்தம், பரமானந்தம், பேரானந்தம் வேறுபாடு சொல்லவும்...?

! வெறும் பா.ஜ. தலைவராயிருந்தபோது வாஜ்பேயி அடைந்தது ஆனந்தம். அதிர்ஷ்டத்தால் பிரதமரானது பரமானந்தம். ஒருவேளை ஜெ. ஆதரவு இன்றியே பிரதமர் பதவியில் நீடிக்க முடியுமானால் அவர் அடையக் கூடியது பேரானந்தம்.

● தி.மா. தமிழழகன், திருச்சி – 8.

? நடராஜனின் நடைபயணம் குறித்து உமது கருத்து என்ன?

! வாக்கிங் போகிற உரிமை அவருக்கு இல்லையா என்ன..!

● சாத்தூர் சபாபதி, திருச்சி – 18.

? அரசியலில் தவிர்க்க முடியாத வார்த்தை எது...?

! ஊழல்!

● ரஞ்சனிப்ரியன், பள்ளிப்பாளையம்

? கண்ணதாசனை கவியரசு என்பது மிகப் பெரிய மோசடி என்றும் எம்.எஸ்.வி ஒரு முட்டாள் என்றும் எம்.ஜி.ஆர் ஓர் அரசியல்வாதியே கிடையாது. குழப்பவாதி என்றும் பழம்பெரும் கவிஞர் நா. காமராசன் பேசியிருக்கிறாரே...?

! சாதனைகள் மூலம் செய்திகளில் இடம் பெற முடியாத சிலர், வம்புக்கிழுத்தாவது செய்தியில் இடம் பெற நினைப்பதுண்டு...

> ❑ ரூ 50 பரிசு பெறுபவர்:
> **ஆர். செல்லம்மாள்,**
> **115, கிழக்குச் சித்திரை வீதி,**
> **ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006.**



• டாக்-ஷோ நிகழ்ச்சியில்

நிம்மதி உங்கள் சாய்ஸ், சிரிகமபதநீ, நில், கவனி, கிரேஸி, சக்தி, ஆச்சி இன்டர் நேஷனல் என்று ஏகப்பட்ட டீ.வி சீரியல்களில் இன்று பிருந்தாதான்!

விஜய் டீ.வி.யில் வியாழன்தோறும் ஒளிபரப்பாகும் சின்னஞ்சிறு உலகம் நிகழ்ச்சியினை நடத்துபவர் இவர்தான்.

ஆனால், "நான் சின்னத்திரைக்கு வந்தது, சற்றும் எதிர்பாராதது" என்கிறார்.

"என் அப்பாவுக்கு நண்பரான எஸ்.வி. சேகர், தமது டீ.வி தொடரில் நடிக்க, புதிய முகம் ஒன்று தேடிக் கொண்டிருந்தபோது, என்னை நடிக்க வைக்கலாமே என்று அப்பாவிடம் கூறினார். அப்பா என்னைக் கேட்டபோது, 'எனக்கு நடிக்கத் தெரியாதே' என்றேன். 'அதனால் என்ன பரவாயில்லை' என்று கூறி விட்டார் சேகர்."

அப்போது, பிளஸ் 2 முடித்து விட்டு, லீவில் இருந்த பிருந்தாவுக்கு, ஷூட்டிங் என்பது ஜாலியான விஷயம்.

"ரொம்ப என்ஜாய் பண்ணினேன். ஆனால், ஒருநாள் ரொம்ப எரிச்சல் அடைந்தும் விட்டேன். எனக்குப் பால் என்றாலே துளியும் பிடிக்காது. ஆனால், நான் பால் குடிக்கிறாற்போல ஒரு சீன். வேண்டா வெறுப்பாகப் பாலைக் குடித்து முடித்தேன். என் துரதிருஷ்டம், ஒவ்வொரு தடவையும் ஒருவர் தவறு செய்ய, அந்த சீன் நாலு டேக் போனது! ஒரு தடவை சகித்துக் கொண்டது போதாமல் நாலுதடவை பால் குடிக்க நேரிட்டபோது ரொம்ப நொந்து போனேன்.

"அந்த சீரியலில் நடித்து முடித்து விட்டு, எஸ்.ஐ.ஈ.டி.யில் பி.காம் சேர்ந்து விட்டேன். மூணாவது வருடத்தில் மறுபடி நடிக்க வாய்ப்பு. ரொம்பத் தெரிந்தவர்கள் கேட்டதின் பேரில் நடிக்க ஆரம்பித்து, இப்போது வேறு வழியில்லாமல் பிஸியாகிவிட்டேன்" என்கிறார்.

பள்ளிக்கூட, கல்லூரி நாட்களில் சைகையில் வார்த்தை விளையாட்டு, ஒரு நிமிட பேச்சுப் போட்டி இவற்றில் கலந்து கொண்டு பரிசுகள் நிறைய பெற்றிருக்கிறார் பிருந்தா.

"என் ஃபேவரிட் சப்ஜெக்ட் பெண் உரிமை! என் சிநேகிதிகள், ஒரு நிமிடப் பேச்சுப் போட்டியில் பெண் உரிமை பற்றி மட்டும் பேசச் சொல்லக் கூடாது. சொன்னால், ஒரு நிமிடத்தில், பேச்சை இவளால் நிறுத்த முடியாது. நான்-ஸ்டாப்பாகப் பேசிக் கொண்டே இருப்பாள் என்பார்கள்" என்று சொல்லிச் சிரிக்கிறார்.

என் பெண்ணுரிமை

குழந்தை வளர்ப்பு சம்பந்தமாக விஜய் டீ.வி.யில் ஒரு நிகழ்ச்சி ஆரம்பிக்கத் திட்டமிட்டபோது, ரபி பெர்னார்ட், அந்த நிகழ்ச்சியை நடத்தும் பொறுப்பை பிருந்தாவுக்கு அளித்தார். இருபத்தாறு வார காலம் மருத்துவ ரீதியில் குழந்தை வளர்ப்பு பற்றிப் பேசிய இந்த நிகழ்ச்சி, இப்போது சமுதாய ரீதியில் அதை அலசுகிறது! ஒவ்வொரு வாரமும் நிபுணர்கள் கலந்து கொண்டு

சொல்லும் கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவையாய் இருக்கின்றன.

"சீரியலில் யாரோ எழுதிய வசனங்களை, ஒரு கற்பனைப் பாத்திரமாக நின்று பேசுவதை விட, சின்னஞ்சிறு உலகம் நிகழ்ச்சியில் என் கருத்துக்களை, நானே சொல்வது எனக்குப் பிடித்திருக்கிறது" என்கிறார் பிருந்தா.

பிருந்தாவின் கணவர், தனியார்த் துறையில் பணி புரிகிறார். ஒரு வயதில், குழந்தை கிஷன். "ஷூட்டிங் போய் விட்டால், குழந்தை அழ மாட்டானா?" என்றால்,

"தேங்ஸ் டு சின்னஞ் சிறு உலகம். அதில், தாய்மார்களுக்குத் தரப்பட்ட டிப்ஸ்களை நான் கடைப்பிடிக் கிறேன். குழந்தையுடன் எவ்வளவு நேரம் செலவழிக்கிறோம் என்பது முக்கியமில்லை; எப்படி செலவழிக்கிறோம் என்பதுதான் முக்கியம். அம்மாவுக்காக ஏங்கும்படி நான் அவனை விட்டதே இல்லை! ஒரு தமாஷ் சொல்லட்டுமா? நான் வீட்டில் இல்லாத சமயம் டீ.வி.யை ஆன் பண்ணிவிட்டு "அம்மா... வா... வா... வாம்மா... பீஷ் (ப்ளீஸ்) என்பான்! நான் வீட்டுக்கு வந்தவுடன், "நான் கூப்பிட்டேன். நீ ஏன் டீ.வி.யிலேயிருந்து வரவில்லை?" என்று கேட்பான். நான் ஷூட்டிங்கிற்குப் போகிறபோது அம்மா வீட்டில்தான் அவனை விட்டு விட்டுப் போகிறேன்! அதனால் நோ பிராப்ளம்!"

பிருந்தாவின் தந்தை தமிழக முன்னாள் டி.ஜி.பி.யான மோகன்தாஸ்.

— மானஸா



"ஃபேவரிட் சப்ஜெக்ட்"

பிருந்தா பேட்டி

அட்டை வண்ணப்படம் : ஸ்ரீஹரி

எம்.ஜி.ஆர் என்ற பண்பாளர்!

"எம்.ஜி.ஆரின் அமெரிக்க விஜயத்திற்கு ஏற்பாடு செய்ய முடியுமா? அவரை அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் அழைக்குமானால் நல்லது" என்று மணியன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். முன்னதாக நான் சில அமெரிக்கப் பேராசிரியர்களுடன் தமிழ்நாடு வந்தபோது ஒரே ஒருமுறை எம்.ஜி.ஆரைச் சந்தித்திருக்கிறேன். எம்.ஜி.ஆர் எங்களுக்காகப் போட்டுக் காட்டிய சினிமாக் காட்சியின்போது (நினைத்ததை முடிப்பவன்) அவரை சந்தித்ததற்குப் பின் இப்போது தான் நானும் மணியனும் எம்.ஜி.ஆரைப் பற்றிப் பேசுகிறோம்.

நான் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எனக்கு இதில் விருப்பமில்லை. எனவே நான் மணியனுக்கு உடனே பதிலளிக்கவில்லை.

எனது அக்கறையின்மைக்குக் காரணம் அவரது ரசிகர் மன்றங்கள்.

இப்படி ரசிகர் மன்றங்களை உருவாக்குவது தமிழ்நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் முன்னோடியாக இருக்காது என்பது என் அபிப்பிராயம். இதனால் நாடு திசை திரும்பி எங்கோ போய்க் கொண்டிருப்பதாக எண்ணினேன். இது தமிழ்நாட்டில் வழிபாட்டு மனோபாவத்தை அல்லவா உருவாக்கும் என்ற அதிருப்தி என்னுள் இருந்தது.

ஆனால் எனது அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரிய நண்பர்களுடன் எம்.ஜி.ஆர் பற்றிப் பேசியபோது, அவர்கள் காட்டிய ஆர்வம் – அவர்கள் இது விஷயமாக மற்றவர்களுடன் தொடர்பு கொண்டது – என்னை மறுபடியும் இதைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டின.

யோசித்தேன். எனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, மனிதர் நிச்சயமாய்ப் பதவிக்கு வரப் போகிறார். பதவிக்கு வந்த பிறகு 'நான் உங்களை அங்கீகரிக்கப் போவதில்லை' என்று சொன்னால், எனக்காக உலகமா தலை கீழாகப் போய் விடும்? போகப் போவதில்லை! ... 'உலக யதார்த்தத்தை ஏற்றுக் கொள். ஏற்று அதற்குள் புகுந்து, ஏதாவது நன்மை செய்ய முடியுமா பார்!" என்று என் உள்ளுணர்வு அறிவுரை கூறிற்று.

'ஒரு தத்துவஞானி உலகை ஆள வேண்டு'மென்று சொன்னார் சாக்ரடீஸ். நம் நாட்டில் தத்துவமேதை டாக்டர் ராதா கிருஷ்ணனை ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்கள் நேருவின் காலத்தில். உலகமே பாராட்டியது. இன்று நம் நாடு எங்கே போகிறது?

நம் நாட்டின் வழிபாட்டு மனோபாவம், மிக மோசமாகப் போய்க் கொண்டிருந்தது. டாக்டர் பட்டம், அடைமொழிகள், லாரியில் வரும் கூலிக் கூட்டம் என்று நாம் வெகுவாக முன்னேறி விட்டோம். இவை எல்லாம் ஊரை ஏமாற்றுகிற வேலை என்பது என் அபிப்பிராயம்.

ஒரு புதிய தலைமுறையை இப்படித் துவக்கிய மனிதர் எம்.ஜி.ஆர். அவரை நான் சென்னையில் நேரில் சந்திக்கச் சென்ற போது, சற்றுக் காலதாமதமாகி விட்டது.

"எம்.ஜி.ஆர் இருப்பாரா? நாழியாகி விட்டது! போய் விடுவாரா?" என்ற மணியனது தவிப்பு எனக்கு எம்.ஜி.ஆரின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. எம்.ஜி.ஆர் எங்களுக்காகக் காத்திருந்தார். உள்ளே பெரிய கூட்டம்! அவரது மனைவி ஜானகி, அமைச்சர் ராஜாராம் என்று பல

வி.ஐ.பிக்கள், தியேட்டரில்.

படம் ஓடிக் கொண்டிருந்தது. நான் அவர் அருகில் அமர்ந்து சினிமாவையும் அவரையும் பார்த்துக் கொண்டிருந்தேன். "இவர்தானா திரையிலே நடிப்பவர்?" என்று என்னால் நம்பவே முடியவில்லை. சினிமா விமரிசனத் துறையில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த அமெரிக்கப் பேராசிரியர் சொன்னார்: "எம்.ஜி.ஆர். சினிமா மீடியத்தை உணர்ந்து நடிக்கிறார். உங்கள் ஊர்ப் படங்களில் நிறைய நாடகத்தன்மையைப் பார்க்கிறேன்"



இடைவேளை வந்தது. எல்லோருக்கும் காபி, டிபன் கொண்டு வரப்பட்டது. எம்.ஜி.ஆர் எங்கோ கையைக் காட்டிக் கொண்டிருந்தார். கவனித்தேன். நான்காவது வரிசையில் உட்கார்ந்திருந்த யாரோ ஒரு மனிதரைச் சுட்டிக் காட்டி "ராமசாமிக்குக் காப்பி பிடிக்காதே. அவருக்குப் பால் கொடுத்தீர்களா?" என்று கேட்டார். அவரது கரிசனம், மனிதாபிமானம் இன்றும் என்னுள் நிற்கிறது.

அடுத்த முறை வந்த போது அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். என் மூத்த மகன் சித்தார்த்தன், வீட்டில் 'நீங்களும் அவரும் உள்ள ஒரு போட்டோ கூட இல்லை; இந்த தடவை எடுத்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினான். எனவே காமிராவுடன் போயிருந்தேன்.

"உங்களைத் தனியாக ஒன்று எடுத்துக் கொள்கிறேன் முதலில்" என்று சொல்லி விட்டு, காமிராவை இயக்கினேன். அந்த காமிரா இயங்க மறுத்தது. அதை, இதை என்று எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்து அழுத்தினேன். ஒன்றும் நடக்கவில்லை! எனக்கே வெட்கமாய்ப் போய் விட்டது. ஆகவே சற்றுப் பின் வாங்கி நின்று கொண்டு 'கிளிக்' செய்வதைப் போல் பாவனை செய்து விட்டு அவரிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளத் துவங்கினேன்.

"இங்கே அந்த காமிராவைக் கொடுங்கள்!" என்றார். அதன் பின் சுமார் அரை மணி நேரம் என்னென்னவோ செய்தார். பின் என்னிடம் கொடுத்து "எடுங்கள்" என்றார். நான் எடுத்த மறக்க முடியாத படம் அது!

ஒருமுறை அவரை சத்யா ஸ்டுடியோவில் மேக் அப் அறையில் சந்தித்தேன். 'மேக் அப்' நடந்து கொண்டிருந்தது. என்னுடன் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய காரியதரிசி அவரிடம் அனுமதி கேட்ட பின், ஒரு பெண்ணும் நடுத்தர வயதுடைய மனிதரும் உள்ளே நுழைந்தார்கள். ஏதோ பேசிக் கொண்டார்கள். அந்தப் பெண்ணை மேக்கப் ரூமிலேயே நாட்டியமாடச் சொன்னார் எம்.ஜி.ஆர். அந்தப் பெண்ணினுடைய நாட்டியம் பற்றி விமர்சித்துக் கொண்டிருந்தார். நான் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தன் இமேஜைப் பற்றி மிகவும் அக்கறையாக இருந்தார். மிக முக்கியமாக, மக்களுக்கு எது பிடிக்கும் என்னும் விஷயத்தில் மக்களின் நாடியை நன்கு கணித்து வைத்திருந்தார். எனவே அனேகமாக அவரது எல்லாப் படங்களும் வெற்றிப் படங்களாகவே அமைந்தன. பொது மக்களின் ருசி பற்றிய அவரது துல்லியமான கணிப்புதான், அவரது சினிமா வெற்றிகளுக்கும், அரசியல் வெற்றிகளுக்கும் காரணம். படத்தில் தலைப்புகளைக் கொடுப்பதில்கூட அவரது வெற்றி மனோ பாவத்தைக் காட்டும்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

மனவியல் தத்துவம் பலிச்சிட்டது. நினைத்ததை முடிப்பவன், நாடோடி மன்னன், உலகம் சுற்றும் வாலிபன், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் என்ற ரீதியில் உள் அர்த்தமுள்ள தலைப்புகள். படத்தில் வரும் கதாநாயகனும் யோக்கியமானவனாக, உழைப்பவனாக, நியாயத்திற்குப் போராடுபவனாக, சண்டைகளில் ஜெயிப்பவனாக, நிராதரவான தங்கைக்கோ, பெண்ணுக்காகவோ போராடி வெற்றி பெறுபவனாக சித்திரிப்பார்.

அதேபோல நல்ல 'கேரக்டர்'ராகத் தன் வாழ்விலும் வாழ்ந்தார். பீடி, சுருட்டு, சிகரெட் குடிக்க மாட்டார். மது அருந்த மாட்டார். நிறைய தான தருமங்கள் செய்வார். ஏழைகளுக்கு உதவுவார். இவை சேர்ந்து அவரை ஓர் உயர்ந்த மனிதனாக மக்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்கியிருந்தது.

அவருடன் நெருங்கிப் பழகிய பல நண்பர்கள் கூறி இருக்கிறார்கள். "அவர் மனிதரை நேசித்தார். யாராவது அவர் வீட்டுக்குள் நுழைந்து விட்டால் அவரது அன்பு மழையில், உபசரிப்பில் நனைந்து அவரது பரம பக்தராகத்தான் வெளி வருவார்'' என்பார்கள்.

ஒரு சமயம் காரில் போகும்போது மணியன் ''வள்ளல் குணம், பிள்ளை மனம்'' என்று வரும் பாடலை மெல்லிய குரலில் பாடிக் கொண்டு வந்தார். மணியன் விட்ட இடத்திலிருந்து எடுத்துக் கொண்டு "வள்ளல் குணம், கள்ள மனம் யாரோ'' என்று பாடினார், எம்.ஜி.ஆர். எல்லோரும் சிரித்தோம்.

நான் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை; எதையும் வாங்கிக் கொள்ளத் தயாராயில்லை. "அப்படியிருந்த மனிதர் இவர் ஒருவர்தான்'' என்று வித்வான் லட்சுமணன் என்னைப் பற்றி அறிமுகம் செய்வார்.

எம்.ஜி.ஆர். பதவி ஏற்ற புதிதில், ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவி காலியாகியது. நான் அமெரிக்காவிலிருந்து இவருடைய பதவி ஏற்பு வைபவத்திற்காக சொந்தச் செலவில் வந்திருந்தேன். இவரிடமிருந்து ஒரு நண்பர் வந்தார், நான் தங்கி இருந்த இடத்திற்கு.

"அந்தப் பதவியை எடுத்துக் கொள்ள உங்களுக்கு இஷ்டமா? தலைவர் விரும்புகிறார்'' என்று கேட்டு.

"எனக்கு அமெரிக்காவில் கல்லூரியில் பேராசிரியர் வேலை இருக்கிறது. தவிர இந்த வேலை கொடுக்கும் மூவாயிரம் ரூபாய் சம்பளத்தில் இங்கிருந்து கொண்டு என் குழந்தைகளைக் கல்லூரியில் படிக்க வைக்க முடியாது. நன்றி'' என்றேன். "உங்களை கௌரவிப்பது எப்படி என்று எங்களுக்குத் தெரியும்!'' என்று சொல்லி விட்டுப் போனார் அவர்.

அதேபோல இரண்டாவது முறை தேர்தல் நடந்தபோது தேர்தலைப் பார்ப்பதற்காக வந்திருந்தேன். "அமைச்சராக்கி விடுவோம். விரும்பினால் நிற்கச் சொல்லுங்கள்'' என்று சொல்லி அனுப்பியதாகச் சொன்னார்கள். அப்போதும் நான் "வேண்டாம். நன்றி'' என்றுதான் சொன்னேன்.

காரணம்: அவரிடம் பதவி ஏற்றால் அங்கே நட்பு முறை போய் விடும். அதைவிட என் சுதந்தரம் போய் விடும். இது என் குணத்திற்கு ஒத்து வராது.

ஔவையார் பாடுவார், "கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும்

தீபாவளி வருகுது!



"நான் அப்பவே சொன்னேன், 'தீப் பொறி பறக்கப் பேசறவன், பட்டாசுக் கடைல போய் இன்ன விலை விக்குதே நியாயமான்னு கோபப் படாதே'ன்னு... கேட்டியா...?''

— கடலூர் கன்னியப்பன்

கொடிது இளமையில் வறுமை'' என்று. இளமையில் வறுமையோடு, நாடக நடிகராக, நிச்சயமில்லாத ஒரு துறையைத் தம் வாழ்க்கைத் துறையாக எடுத்துக் கொண்டவர் அவர். வேலை நிச்சயமில்லை. வேலை இருந்தாலும் வருமானம் நிச்சயமில்லை. கதாநாயகன் ரோலும் முக்கியத்துவமும் நிச்சயம் இல்லை. இப்படிப்பட்ட நிச்சயமற்ற நிலையில் வாழ்பவர்களது குணங்கள் பிற்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை எல்லாம் மனவியலில் சொல்கிறார்கள். அதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டுமானால் அவர் கையில் எப்போதும் ஒரு தோலினால் ஆன பெட்டி இருக்கும். ஒரு சமயம் நான் அருகில் இருந்தபோது திறந்தார். பெட்டி நிறைய உயர்ந்த தொகை நோட்டுக் கட்டுக்கள்! இது அவருக்குப் பாதுகாப்பையும் மனநிறைவையும் தந்ததென்று சொன்னார்கள். அவர் அதை அள்ளிக் கொடுத்த போதும் பார்த்துக் கொண்டிருந்தேன். நோட்டுக் கட்டுக்களாகத்தான் கொடுத்தார்; பிரித்து தனி நோட்டுக்களாக அல்ல!

மணியனின் வேண்டுகோளின்படி எம்.ஜி.ஆர் அமெரிக்கா வரவும் பல்கலைக் கழகங்களின் சிறப்பு விருந்தாளியாகப் பேசவும் என்னால் ஆனதைச் செய்தேன்.

எம்.ஜி.ஆரும் வந்தார். பல கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பாகப் பேசினார்.

அமெரிக்கப் பயணம் முடிந்து அவர் இந்தியா திரும்புமுன் கடைசி நகரமாக நியூயார்க்கில் தங்கி இருந்தோம். அவரது அமெரிக்க விஜயத்தை நான் எழுத வேண்டுமென்று மணியன் சொன்னார். நானோ எழுதத் தயாராயில்லை. மணியன் சொன்னார்:

''படித்தவர்கள் அவரை நடிகர் என்றுதான் பார்க்கிறார்கள். எனவே நீங்கள் எழுதினால்தான் நல்லது. ஏன் ஒரு நடிகர் நாட்டை ஆளக் கூடாதா? அவர் நல்லவர் இல்லையா? --- நீங்கள் எழுதினால்தான் அது படித்தவர்களை எட்டும். அவர்கள் அவரை ஏற்பார்கள். நீங்கள் அண்ணாவைப் பற்றி, கலைஞரைப் பற்றி எழுதி இருக்கிறீர்கள். எனவே நீங்கள்தான் இதையும் எழுத வேண்டும்'' என்றார்.



தீபாவளி வருது!

''வெடி சத்தத்துக்கு பயந்துகிட்டு காதை கைவிரலால் அடைச்சிக்க வேண்டியதுதான்! அதுக்காக இப்படி ரெண்டு விரல்களையும் வெளியே எடுக்க முடியாதபடி அத்தனை அழுத்தமா சொருகிக்கணுமா!''

– கடலூர் கன்னியப்பன்

மணியனுக்காக, எழுதினேன். மணியன் அதை பத்திரப்படுத்திக் கொண்டார். என்னுடைய கட்டுரையின் துவக்கமே ''நான் ஒரு சிவாஜி ரசிகன்'' என்றுதான் துவங்கும். அதுதான் உண்மை. ஆனால் அந்தக் கட்டுரைத் தொடரின் தலைப்பு: ''பல்கலைக் கழகங்கள் அழைத்த பண்பாளர்'' அந்தத் தலைப்பு இருக்கிறதே, அதில் அந்த 'பண்பாளர்' என்ற வார்த்தை இருக்கிறதே, அதன் முழு உருவம்தான் எம்.ஜி.ஆர். இதுதான் என் நினைவில் இன்றும் தேங்கி நிற்கிறது.

நண்பர் மணியன் சில சமயம் அவரை விளக்க முடியாமல் அவர் ஒரு ''பினாமினன்'' என்பார். அதாவது ''இந்தக் கால கட்டத்தில் தோன்றிய ஒரு அற்புதம்'' என்ற அர்த்தத்தில்.

மனிதர்கள் போய் விடுகிறார்கள். அவர்கள் நம்மோடு இருந்த அனுபவங்கள் மட்டும், நம் நெஞ்சத்தை நனைக்கின்றன.

(தொடரும்)

இந்திய பாப் இசை உலகில் இன்று சூப்பர் ஸ்டார் அந்தஸ்தில் இருப்பவர் தலர் மெஹந்தி. மேக்னா சவுண்டு நிறுவனம் அண்மையில், இவரை இரண்டே முக்கால் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது! பெரும் செல்வந்தர்கள், வீட்டுத் திருமணங்களில், தலர் மெஹந்தியின் நிகழ்ச்சிக்கு ரேட் பத்து லட்சம் ரூபாய்! இந்த அளவு புகழ்பெற்ற தலர் மெஹந்தி, அண்மையில் சென்னையில் ஒரு நிகழ்ச்சியை வழங்க வந்திருந்தவர், கல்கிக்கு அளித்த அவசர பேட்டியிலிருந்து...

தமிழுக்கு



வருகிறேன்!

நீங்கள் எந்த வயதில் பாட ஆரம்பித்தீர்கள்?"

"ஐந்து வயதாக இருக்கிறபோது, எனக்குப் பாட்டு, டான்ஸ், தபலா என எல்லாவற்றையும் என் பெற்றோர் பரிச்சயப்படுத்தினார்கள். என் இயற்பெயர் தலர்சிங். நான் பிறப்பதற்கு முன்னரே எனக்கு இந்தப் பெயரைத்தான் வைப்பது என்று என் பெற்றோர் முடிவு செய்து விட்டார்கள். அதே போல, நான் பிறந்தவுடன் என்னைப் பாடகனாக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள்."

"உங்கள் முதல் மேடை நிகழ்ச்சி எப்போது நடந்தது?"

"என் பதினோராவது வயதில். உத்திரப் பிரதேசத்தில் ஜானுபுர் என்ற இடத்தில்."

"உங்களால் மறக்க முடியாத மேடை நிகழ்ச்சி?"

"கொச்சியில் நடந்த புரோகிராம்தான். பத்தாயிரம் பேர் திரண்டிருந்தனர்! மூணரை மணி நேரம் நான்-ஸ்டாப் ஆகப் பாடினேன். ரசிகர்களும், துளியும் சோர்வடையாமல், மூணரை மணி நேரமும் டான்ஸ் ஆடியதை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது!"

"பாடகர் என்றால் மேடையில் பாடுபவர் என்பது போய், மேக்அப், காஸ்டியூம், செட், நடன மகளிர் என்று சினிமாப் பாட்டுகள் ஸ்டைலில் மியூசிக் வீடியோக்கள் வருகின்றனவே..."

"என்னைப் பொருத்தவரை இதிலே இரியேடிவிடி இருக்கிறது. என்னுடைய ஸ்டைலில் நான் மியூஸிக் வீடியோக்கள், ஆல்பங்கள் வெளியிடுகிறேன். பாடகன் என்பதற்கு மேலே புதுப் பரிமாணமும், அந்தஸ்தும் எனக்கு இதனால் ஏற்பட்டிருக்கிறது."

"ஒருசில தமிழ் வார்த்தைகளாவது தெரியுமா?"

"எனக்குத் தமிழ் தெரியாது. ஆனால் என்னுடைய அடுத்த இசை ஆல்பத்தை தமிழில் மொழிபெயர்த்து நானே, பாடி, வெளியிட விரும்புகிறேன், அடுத்த வருடத்துக்குள். என்னுடைய தமிழ் ஆல்பம் நிச்சயம் வெளிவரும்."

"உங்களுக்குப் பிடித்த பாடகர்?"

"உஸ்தாத் ராக் அலிகான்."

"பிடித்த நடிகர்கள்?"

"வினோத்கன்னா, ஷாருக்கான், அமிதாப் மற்றும் தலர் மெஹந்தி! (சிரிப்பு) ●

சந்திப்பு : **மௌலி**

கயவன், மர்மம், கணவன், தவிப்பு
ஓர் இளம் பெண்ணை
சூழ்ந்து வரும் விறுவிறுப்பான தொடர்.

உங்கள் விஜய் டி.வி.யில்
செவ்வாய்தோறும் இரவு 8.30 மணிக்கு
விறுவிறுப்பான ஒரு மர்மத்தொடர்



ஸ்டாப்ஏக் க்ரீம் பாம்-ன்

'புதிய பா(ர்)வை'

ஒரு சமூக விரோதியின் ஆசை வார்த்தைகளுக்கு
பலியான இளம் பெண் தன்னை மீட்டுக்கொள்ள
பெரும் புயலாய் மாறி
அந்தக் கயவனையே வேரோடு சாய்க்கும் உக்கிரம்.
காணத்தவறாதீர்
அச்சமூட்டும் அழகினை.

VIJAY TV

வழங்குபவர்கள்
Stopache CREAM BALM

எனக்கும் சச்சினுக்கும் தகராறா?

சகாரா மற்றும் காமன்வெல்த் போட்டிகளுக்காக இந்திய வீரர்களுக்குச் சென்னையில் கேம்ப் நடந்தபோது, எந்தப் பத்திரிகையாளருக்கும் கிரிக்கெட் வீரர்கள் பேட்டி தரக் கூடாது என்கிற கட்டுப்பாட்டிலும் கல்கிக்காகப் பேட்டியளித்தார் ராகுல்...

"இந்திய அணியில் நீங்கள் நுழையும்போதே வெற்றிகரமானதோர் ஆட்டக்காரராகத்தான் நுழைந்தீர்கள். அப்படியிருந்தும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக ஆடுவதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கவில்லையே, என்ன காரணம்?"


"சரியான கேள்விதான். நான் நன்றாகத்தான் ஆடுகிறேன். ஆனாலும் என்னைவிடத் திறமையாக ஆடும் ஆட்டக்காரர்கள் இருப்பதாக போர்டு கருதலாம் இல்லையா! என்னை விடவும் நல்ல வீரர்கள்தானே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்! எனவே, எனக்கு அதில் வருத்தம் ஏதும் இல்லை. மாறாக, இன்னும் எனது பேட்டிங் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்; கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பிலும் எனது பேட்தான் பேச வேண்டும் என்று நினைத்துப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன். நிச்சயம் இது நடக்கும் பாருங்கள்!"

"இதற்காக ஏதேனும் தனிப் பயிற்சி மேற்கொண்டிருக்கிறீர்களா?"

"எனது பேட்டிங்கில் சில மாறுதல்களைச் செய்துள்ளேன். வி.பி. சந்திரசேகர் அவர்களிடம் சில ஆலோசனைகளையும் பெற்றுள்ளேன். அவர் கூறியுள்ள ஆலோசனைகளின்படி, பந்தை நான் நினைக்கிற திசைக்கு அடிக்க முடியும். இதனால் அதிக ரன்களையும் குவிக்க முடியும்."

"பெங்களூர்க்காரரான நீங்கள், சென்னையில் வேலை தேடிக் கொண்டு, சென்னைவாசியாக இருப்பதற்கு என்ன காரணம்?"

"பெங்களூரைவிட சென்னையில்தான்





தொடர்ச்சியாக மேட்சுகள் நடந்து கொண்டிருக்கும். திறமையான பந்து வீச்சாளர்கள் பலரும் இங்கே வந்து ஆடுவதால் – அவர்களின் பந்துகளை நான் எதிர்கொள்வதால் எனது பேட்டிங் திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியும். இன்னும் சொல்லப் போனால், நான் இங்கேயிருந்து பல மேட்சுகள் ஆடி நிறைய ரன்களை எடுத்ததால்தானே இந்திய அணியிலேயே என்னால் இடம் பெற முடிந்தது!''

''நீங்கள் நிறைய விளம்பரப் படங்களில் நடிக்கிறீர்கள் இல்லையா?''

''ஆமாம். கிரிக்கெட்டில் பிரபலமாக உள்ள அனைவரையும் விளம்பரக்காரர்கள் சூழ்ந்து கொள்வது சகஜம். அப்படித்தான் எனக்கும் வாய்ப்புகள் வருகின்றன.''

''இல்லை, விளம்பரப் படங்களில் நீங்கள் நடிப்பதுதான், இந்திய அணியிலிருந்து நீங்கள் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறதே?''

''இது என்ன புதுக்கதை?''

''கோக் – பெப்சி விவகாரம்... இதனால் சச்சினுக்கும் உங்களுக்கும் தகராறு... அதனால்தான் நீங்கள் நீக்கப்பட்டீர்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே?''

''இது அபாண்டம். இதெல்லாம் பத்திரிகைக்காரர்கள் கட்டி விட்ட கட்டு கதை. இப்படியெல்லாம் புரளிகளைக் கிளப்பி விட்டு நல்ல நண்பர்களாக இருக்கும் எங்களுக்குள் எதற்காக தகராறை வளர்த்து விடுகிறார்கள் என்றே தெரியவில்லை. இதனால் பத்திரிகையாளர்களுக்கு என்ன லாபம் என்றும் எனக்குத் தெரியவில்லை.''

''காதல் கீதல் என்று ஏதாவது உண்டா ராகுல்?''

''இல்லை. அதற்கெல்லாம் எனக்கு எங்கே நேரம் இருக்கிறது!''

''சரி, உங்களின் திருமணம் எப்போது?''

''இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து!'' ○

பேட்டி: **நந்தினி**
படம்: **உமா மணி**

கலைமகள் தீபாவளி மலர் அன்பளிப்பு

நிரந்தர வருமானம் வரக்கூடிய பண்ணை நிலம் வாங்கிப் பலனடையும் திட்டம்.

ரூ. 10,000 மதிப்புள்ள பண்ணை நிலத்திற்குச் சொந்தக்காரராகுங்கள்

67 ஆண்டுகளாக சிறந்த முறையில் வெளிவரும் பாரம்பரியம் மிக்க **கலைமகள்** மற்றும் **இலக்கியப்பீடம்** காலாண்டிதழ்ப் பிரதிகள்
5 ஆண்டுகளுக்கு இலவசமாகப் பெறுவீர்.

☆ **கலைமகள் தீபாவளி மலர்**
5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

☆ **கலைமகள் மாத இதழ்**
தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.

☆ **இலக்கியப் பீடம்** காலாண்டிதழ் 5 ஆண்டுகளுக்கு அனுப்பப்படும்.

அன்னை ஆர்ச்சர்ட்ஸ் நிறுவனத்தார் பழப் பண்ணைத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

பண்ணை நிலம் உங்கள் பெயரிலோ அல்லது நீங்கள் குறிப்பிடும் நபர் பெயரில் உடனடியாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படும்.

பண்ணை நிலத்தில் ஏற்றுமதித் தரம் வாய்ந்த உயர்தர மாமரக் கன்றுகள் நடப்பட்டு இலவசமாகப் பராமரிக்கப்படும்.

சிறந்த தோட்டக்கலை மற்றும் விவசாய, பொருளாதார நிபுணர்கள் ஆலோசனைப்படி இத் திட்டம் இயங்கும்.

பயிர்கள் ஆயுள் காப்பீடு செய்யப்படும்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் மூலம் கணிசமான தொகை பலனாகப் பெற வழியுண்டு.

விவசாய வருமானத்திற்கு வருமான வரி கிடையாது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் தேவை இல்லை எனில் அன்றைய தேதி விலையில் மறு விற்பனை செய்ய அன்னை ஆர்ச்சர்ட்ஸ் உதவி செய்யும்.

பண்ணை நிலம் இலவசமாகப் பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நபரின் பெயர், தந்தை/கணவர் பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண் மற்றும்

தொடர்ந்து கலைமகள், இலக்கியப்பீடம் பிரதிகள் இலவசமாக அனுப்ப வேண்டிய பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 30.9.1998க்குள் ரூ. 10,000க்கான செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி

Annai Orchards Pvt. Ltd.,
C1, Bhagyam Palace, 12A, Puliyur First Lane,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024.
Phone: 481 84 35.

இந்த ஆண்டு கலைமகள் தீபாவளி மலரைப் பெற 30.9.98க்குள் ரூ. 10,000 அனுப்பவும்.

குறையொன்றுமில்லை

ரிபுவை அடையாளம் தெரியாமல் நிதாகர் பதில் சொன்னார்: ''சுவாமி! ராஜாவின் ஊர்வலம் நடக்கிறது. அந்தக் கூட்டத்தில் இதை (தலைச் சுமையை) எடுத்துக் கொண்டே போவானேன் என்றுதான் ஒரு ஓரமாக நிற்கிறேன்.''

''ராஜாவுடைய ஊர்வலமா? ராஜா என்றால் என்ன...?'' என்றார் ரிபு!

இவர் பார்த்தார்... ''ராஜா என்றால் தெரியாதா? அதோ ஒரு பெரிய யானை போகிறதே... அதன் மேல் உட்கார்ந்திருப்பவன்தான் ராஜா!''

''யானையா?.... யானை என்றால் என்ன...?'' என்றார்!

''யானை கூடப் பார்த்ததில்லையா நீர்...? அதோ பெரிதாக, கறுப்பாகத் தெரிகிறதே... அதுதான் யானை. காதை ஆட்டுகிறதே! துதிக்கையைத் தூக்குகிறதே; நீண்ட தந்தங்கள் இருக்கிறதே, அதற்குத் தங்கப் பூண் போட்டிருக்கிறதே... அதுதான் யானை! அதற்கு மேல் ஒரு சுவர்ண மயமான பல்லக்கு வைத்துக் கட்டப்பட்டிருக்கிறதே... அதற்குள்ளே ரத்ன கிரீடங்களெல்லாம் அணிந்து ஒருத்தன் உட்கார்ந்திருக்கிறானே அவன்தான் ராஜா!... மேலே உட்கார்ந்திருக்கிறானே அவன்தான் ராஜா! கீழே இருக்கிறதே- அதுதான் யானை...'' என்றான்.

''மேலே இருக்கிறவன் ராஜா. கீழே இருப்பது யானையா...? மேலே என்றால் என்ன? கீழே என்றால் என்ன...?''

இவருக்குக் கோபம் வந்து விட்டது...!

இத்தனை நாழி பொறுமையாக பதில் சொன்னவர், ''உனக்கு மேலே கீழே கூடத் தெரியாதா! அத்தனை அஞ்ஞானியா நீ...!'' என்று தலையிலேயிருந்த மூட்டையைத் தூக்கிக் கீழே போட்டார்... ஒரு எகிறு எகிறி அவர் தோள் மேலே உட்கார்ந்து கொண்டு விட்டார்! உட்கார்ந்தபடி இரண்டு கால்களையும் அவர் தோள்மேல் தொங்கப் போட்டுக் கொண்டு, ''நீர் கீழே... நான் மேலே... நான் மேலே நீர் கீழே... யானை கீழே, ராஜா மேலே, ராஜாவைப் போல நான் இங்கே மேலே, என்னைப் போல ராஜா அங்கே மேலே... யானையைப் போல் நீர் இங்கே கீழே, உம்மைப் போல யானை அங்கே கீழே. யானையால் தூக்கப்படுபவன் ராஜா.. யானைக்கும் ராஜாவுக்கும் தூக்குதல் தூக்கப்படுதல் என்கிற சம்பந்தம்... நீர் தூக்குகின்றீர் என்னை... நீர் கீழே; நான் மேலே; யானை கீழே ராஜா மேலே... நீர் கீழே நான் மேலே....'' என்று திரும்பத் திரும்பத் திரும்ப கனம் சொல்கிற மாதிரி சொல்லிக் கொண்ட வந்தார்.

இப்படிப் பலகாலம் அவர் சொல்லி முடிக்கிற வரையில் பொறுமையாய் இருந்தவர் 'ஜடபரதர் கதை தெரியுமா...' என்று ஞாபகப்படுத்தினார்!

வந்திருப்பவர் ஆசார்யர் என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டார் நிதாகர். ''என்னை மன்னித்தருள வேண்டும். தெரியாத்தனமாகப் பண்ணிவிட்டேன்'' என்று ரிபுவுடைய காலிலே விழுந்து விழுந்து சேவிக்கிறார்.

''இப்போதுதான் புரிகிறது நீர் யார் என்பது. நான் யார் என்பது!'' என்றார்.

ரிபு சொன்னார்: ''நான் என்றால் ஆத்மா. நீ என்றால் உனக்குள்ளே இருக்கிற ஆத்மா! ஏதோ ஒரு புண்ணிய விசேஷத்தினாலே அந்த ஆத்மாவுக்கு ராஜ சரீரம் கிடைத்தது. சக்ரவர்த்தியாகப் பிறந்து யானை மேலே வீற்றிருக்கிறான். ஏதோ வொரு பாபவிசேஷத்தினாலே இந்த ஆத்மாவுக்கு யானை சரீரம் கிடைத்தது. யானை அந்த ராஜ சரீரத்தைத் தாங்குகிறதேயொழிய யானைக்குள்ளே இருக்கிற ஆத்மாவுக்கும் ராஜாவுக்குள்ளே இருக்கிற ஆத்மாவுக்கும் தூக்குதல்-தூக்கப்படுதல் என்கிற சம்பந்தம் இல்லை. அதை நீர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்- இதை உணர்த்தத் தான் வந்தேன்...'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

இவருக்கு அந்த விஷயம் புரிந்து போயிற்று... அப்படியே அந்த ஊரில் இருந்து வந்தார். மறுபடியும் ஆயிரம் வருஷம் உருண்டோடியது... மறுபடியும் அந்த ரிபு வந்தார்.

நிதாகர், வாசலில் யாராவது அதிதிகள் வருகிறார்களா என்று பார்த்துக் கொண் டிருந்தார்...

நம் ஆன்மிகம் இருக்கிறதே!... அது நித்யம் நாம் செய்ய வேண்டிய கடமை களை உணர்த்துகிற அழகான பொக்கிஷம். பெரிய விஷயங்களை மட்டுமின்றி, ஒரு நாளில் நாம் பண்ணக்கூடிய தர்மங்களை யும் தெரியப்படுத்துகிறது ஆன்மீகம். நித்ய கர்மா அதிலே சொல்லப்பட் டிருக்கிறது.

அந்த நித்ய கர்மாப்படி கிரஹஸ் தாச்ரமத்திலே இருப்போர், பகவத் ஆராதனம் பண்ணிவிட்டு வாசலில் வந்து நிற்க வேண்டும். ஏனென்றால், எப்படி ஒரு குழந்தை தாயை அண்டி ஜீவிக்கிறதோ அந்த மாதிரி கிரஹஸ் தாச்ரமத்தை நம்பித்தான் முன்னே இருக்கிற பிரம்மசர்யம் அதற்கடுத்து வரக் கூடிய வானப்ரஸ்தாச்ரமம், சன்னியாசம்... ஆகிய மற்ற ஆசிர மங்கள் எல்லாம் நடக்கின்றன. மற்றவையெல்லாம் நினைக்க வேண்டுமானால், இப்படியும் நடக்க வேண்டும். இல்லறம் இல் லையேல் நல்லறம் இல்லை. கிரஹஸ்தாசிரமம் தாய் போன்றது என்கிறார் மனு ஸ்ம்ருதியிலே. கிரஹஸ்தாசிரமமே இல்லை யென்றால் மீதி ஆச்ரமங்களெல்லாம் கிடையாது!

ஆகையினாலே, எல்லா ஆசிர மங்களையும் வாழவைக்கும்படியான ஆசிரமம் கிரஹஸ்தாசிரமம். மிக உயர்ந்த ஆசிரமம்.


அந்த ஆசிரமத்திலே இருப்பவர்கள் வைச்வதேவம் என்கிற கர்மாவை நித்யம் பண்ண வேண்டும். எதற்கு? நித்யம் செய்கிற

76





அருள்வாக்கு



இஷ்டத்தைத் தருவது ஒன்றாகவும், நல்லதைச் செய்வது வேறொன்றாகவும் இருக்கின்றன. (முறையே) ப்ரேயஸ், ச்ரேயஸ் என்று இவற்றை உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. இஷ்டமாக இருப்பது எதுவோ அதுவே நமக்கு ப்ரியமாக இருக்கிறது. அதைத்தான் 'ப்ரேயஸ்' என்பது. இந்த வார்த்தை நடைமுறையில் அதிகம் இல்லை. 'ச்ரேயஸ்' என்ற வார்த்தை அடிக்கடி கேள்விப்படுகிறோம். ''உசந்த நன்மைகள் உண்டாகவேண்டும்'' என்று ஆசீர்வாதம் செய்யும்போது ''எல்லா ச்ரேயஸும் உண்டாகட்டும்'' என்கிறோம். எது உண்மையில் ஒரு உயிருக்கு நல்லதைத் தருவதோ அதுவே ச்ரேயஸ். 'ப்ரியம்' என்பதிலிருந்து 'ப்ரேயஸ்'. 'ச்ரியம்' என்பதிலிருந்து 'ச்ரேயஸ்.' ச்ரேயஸை விட்டு

வேறு காரியங்களினாலே நம்மையறியாமல் ஏற்படக் கூடிய தோஷ நிவ்ருதிக்கு...

சாத்விக ஆசாரியர்கள்கூட நித்யம் தப்புதான் பண்ணுகிறார்கள். அவர்களுக்கும் பாபம் உண்டு! – வாழைக்காயைக் குலையிலேயிருந்து வெட்டி வருகிறோம். வாழை இலையை அறுக்கிறோம். அதையெல்லாம் அரிவாள் மனையிலே போட்டு நறுக்குகிறோம். எதையும் கத்தியால் வெட்டினாலே தோஷம் என்கிறது சாஸ்திரம்! அதனால் தான் கோயில்கூட தேங்காயைக் கீழே தட்டி உடைக்கலாமேயொழிய பகவானெதிரில் தேங்காயைக் கத்தியால் தட்டக் கூடாது. சரியாக உடைய வேண்டுமென்று அப்படி உடைக்கக் கூடாது.

ஆகவே, கத்தியால் அறுப்பது, வெட்டுவது, இப்படி நாம் தாவர வர்க்கங்களை ஹிம்சை பண்ணுகிறோம்.

நித்யம் நாம் தூங்குகிறபோது உடம்பைப் புரட்டிக் கொடுத்தால் எத்தனையோ சின்னச் சின்ன ஜந்துக்கள் மாண்டு போகின்றன!

நம்மால் விட முடியாத, தவிர்க்க முடியாத பாவங்கள் நித்யம் பண்ணிக் கொண்டே இருக்கிறோம். இந்தப் பாவங்களெல்லாம் நம்மை விட்டுப் போவதற்காகத் தான் வைச்வதேவம் என்கிற கர்மா–ஒவ்வொரு கிரஹஸ்தனும் பண்ணியே ஆக வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் (வைச்வதேவம்) தீர்த்தத்திலேயும் பண்ணலாம்– சந்தியாவந்தனமாக. அக்னியைப் பிரதிஷ்டை பண்ணி, அக்னியிலேயும் பண்ணலாம். ஆசார்யரிடத்திலே வைச்வதேவம் உபதேசம் பெற்றுக் கொண்டு பண்ண வேண்டும் என்பது நியமம்.

அப்படி ஒரு அப்பா வைச்வதேவம் பண்ணிக் கொண்டிருந்தார்... மாவை அடையாகத் தட்டி, அதிலே நெய்யைத் தடவி எடுத்து வைப்பார்.... வைத்தால் 'கம்'மென்று வாசனை வரும்! இவர் கண்ணை மூடி மந்திரத்தைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறபோது ஒரு பூனை வரும்! வந்து அடைய எடுத்துக் கொண்டு போய்விடும்! இந்த மாதிரி இரண்டு–மூன்று நாட்கள் ஏமாந்து போனார் அவர்... அதனாலே என்ன பண்ணினார்... சரியாக மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு, அந்த வைச்வதேவம் பண்ணுகிற நேரத்துக்கு; ஒரு தடியைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு, அந்தப் பூனையை வாசல்வரை துரத்திப் போய் ஓட்டிவிட்டு வந்து ஹோமம் பண்ணினார்! இப்படியே நித்தியம் பண்ணலானார்.

இந்த அப்பாவின் காலம் முடிந்தது... அவருடைய பிள்ளையின் காலம் ஆரம்பித்தது... பிள்ளை காலத்திலும் சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் பூனை வர ஆரம்பித்தது. தடியைக் கொண்டுபோய் அதை ஓட்டிவிட்டு வருவார் அந்தப் பிள்ளை!

இப்படி இருக்கையிலே, ஒரு நாள் அந்த கிரஹத்துக்கு ஓர் அதிதி வந்தார். இவர் பூனையை ஓட்டுவதைப் பார்த்துவிட்டுக் கேட்டார்: ''சுவாமி! ஏன் உமக்கு அந்தப் பூனை பேரிலே வெறுப்பு...? அது சாதுவான பிராணிதானே? வாசல்வரைக்கும் துரத்திக் கொண்டு வந்து விரட்டுகிறீரே...?''

அதற்கு அவர் பதில் சொல்கிறார்: ''எங்கள் அப்பா ரொம்ப சாது... இந்தப் பூனைக்குட்டி எவ்வளவு சாதுவோ,

ப்ரேயஸைப் பிடித்துக் கொள்கிறோம். இஷ்டம் என்று ஒன்றில் போய் விழுகிறோம். அப்புறம் அதனால் கஷ்டம் என்று தெரிகிறது. அந்த நிலையில் இஷ்டப்பட முடியாத ஒன்றுதான்-கசப்பு மருந்து, லங்கணம் (பட்டினி) போன்ற ஒன்றுதான்- கஷ்டத்தைப் போக்கி நல்லதைச் செய்ய முடியும் என்று தெரிகிறது. இஷ்டப்பட முடியாத அந்த ஒன்றை ஏற்பது இப்போது கஷ்டமாயிருக்கலாம். ஆனாலும் இது சாச்வதக் கஷ்டமாக நின்றுவிடாது.

மருந்தும், லங்கணமும் சாச்வதமாய் நிலைத்து விடுகிறவை அல்லவே! அதனால் மருந்து சாப்பிடுகிறோம், பட்டினி கிடக்கிறோம், பத்யமாகச் சாப்பிடுகிறோம். உடம்பு ஸரியாகப் போகிறது. அப்புறம், முன் மாதிரியே மறுபடி இஷ்டப்படித் தின்றால் உடம்புக்கு வரத்தான் வரும் என்று ஜாக்ரதையாய் இருக்கிறோம். கண்டபடி தின்னாமல் கட்டுப்படுத்திக் கொள்கிறோம். நாம் இப்படிச் செய்கிறோமோ இல்லையோ, புத்திசாலிகளாக இருந்தால் இப்படித்தான் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அவ்வளவு சாது எங்கள் அப்பா... ஆனால் நித்தியம் பன்னிரண்டு மணிக்குக் கொம்பை வைத்துக் கொண்டு இப்படி பூனைக் குட்டியை விரட்டுவார்... அதனாலே எங்கள் அப்பா செய்த காரியத்தை நானும் செய்கிறேன்!" என்றார்!

அப்பா எதற்காகப் பண்ணினார்...?

வைச்வதேவத்துக்குப் பூனை தடையாக இருக்கிறது என்று ஓட்டினார். பிள்ளையோ, அப்பா பண்ணின வைச்வதேவத்தை விட்டு விட்டார்! பூனைக்குட்டியை ஓட்டுவதை மட்டும் தவறாமல் பண்ணலானார்!

– இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகியசிங்கர் சொன்ன கதை இது. நித்யகர்மாவினுடைய விசேஷார்த்தங்களை விளக்குகிறபோது அவர் இதைச் சொல்லுவதுண்டு.

சரி, நாம் நிதாகருக்கு வருவோம்.... இப்படிப்பட்ட நித்ய கர்மாவைப் பண்ணி முடித்து விட்டு அவர் வந்து வாசலிலே நிற்கிறார். வெளியிலே யாராவது வருகிறார்களா...? அதிதிகள் வருகிறார்களா என்று பார்க்கிறார். அப்படிக் காத்திருந்து பார்த்துவிட்டுத்தான் சாப்பிட வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

எத்தனை நேரம் காத்திருந்து பார்ப்பது என்பதுதான் கேள்வி.

சாஸ்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், 'ஒரு பசுவைப் பால் கறப்பதற்கு எத்தனை நேரம் ஆகுமோ, அவ்வளவு நேரம் வெளியிலே நின்று பார்...' என்று சொல்லியிருக்கிறது.

'அரை மணி நேம் நில்' என்றோ, 'இரண்டு நாழி நில்' என்றோ சாஸ்திரம் சொல்லவில்லை. நிற்க வேண்டிய காலத்துக்கு ரொம்ப அழகாக இன்னொரு அளவைச் சொல்கிறது.

அப்படிச் சொல்லும்போதே இன்னொரு தர்மத்தையும் சொல்கிறது!

(தொடரும்)

''மாமியாரோட சண்டை போடறதுல பக்கத்து வீட்டு ராதாவை ஜெயிக்க யாராலும் முடியாது!''

''அப்படி என்ன செஞ்சுட்டா?''

''செத்துப் போன அவ மாமியார் ஆவியை மீடியம் மூலமா வரவழைக்க சண்டை போட்டிருக்கா!''

— பொன்மலை ஆர். பிரகாஷ்



இழப்பு



தெருவே ஏற்றுக் கொள்ளாத சோக நிகழ்ச்சிதான். ஆனால் நடந்து விட்டது. இனி ஒன்றும் செய்ய முடியாது. தெருவிலுள்ளவர்கள் மாரிக்கு ஏற்பட்ட துர்மரணத்தைப் பற்றிப் பேசாமலில்லை. ஆறுமுகம் குடும்பத்தில் பழகுவதற்கு மாரி வித்தியாசமானவன். யார் வம்புக்கும் போகாதவன். அவனைத் தெருவில் அடிக்கடி பார்ப்பதே அபூர்வம். எதாவது கலாட்டா என்றால் அங்கு தென்படமாட்டான். அக் குடும்பத்திலுள்ள அனைவரும் தச்சு வேலை செய்பவர்கள். கடுமையான உழைப்பாளிகள். ஆறுமுகத்திற்கு ஆறு பிள்ளைகள். மாரி மூன்றாவது பையன். அவனைத் தவிர அக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் குடும்பத் தொழிலில் ஈடுபடுபவர்கள். அவனுக்கும் தச்சு வேலை தெரியும். தெரிந்தாலும் வளசரவாக்கத்திலுள்ள ரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரிந்து வந்தான்.

வழக்கம் போல் அன்று தொழிற்சாலைக்குச் சென்றான். மதியம் வரை கடுமையான வேலை. மதியம் ஒரு மணி சுமாருக்கு அவன் பகுதி அதிகாரி அங்கு பணிபுரியும் தொழிலாளிகளைப் பார்த்து, யாருக்காவது கிணறு இறங்கத் தெரியுமா என்று கேட்டார். கிணறை சுத்தப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். மாரிக்குத் தெரியும். அவன் முன் வந்தான்.

கிணற்றில் இறங்கினால் கூடுதலாகப் பணம். பல ஆண்டுகளாக பயன்படுத்தாத ஒரு பாழ் கிணற்றில் மாரி இறங்கினான்.


கீழே செல்லச் செல்ல கிணற்றிலிருந்து வெளிப்பட்ட துர்நாற்றமான வெப்பக் காற்று அவன் மூச்சைத் திணற அடித்தது. நீரில் நீந்துவதற்குப் பதில் நீரில் மூழ்க ஆரம்பித்தான். கிணற்றின் மேல் பகுதியிலிருந்து பலர் அவனைக் கூப்பிட்டுக் குரல் கொடுத்தனர். அவர்களைக் கேட்டு மேலே எழ முயற்சி செய்தான். அவனால் முடியவில்லை. கைகள் துவண்டன. கிணற்றின் விஷக் காற்றின் வெப்பம் அவன் மூச்சைப் பிடித்து மயக்கம் அடையும்படி அழுத்தியது. அவன் கண் முன் தெரிந்த அனைத்தும் தட்டாமாலை சுற்றுவது போல் சுற்றின. மரணம் ஒரு பெரிய ஒளிப்பந்துபோல் அவனை நோக்கி நகர்வது தெரிந்தது. அவன் மெதுவாக நழுவி நழுவி தன் நினைப்பு இல்லாமல் மூழ்க ஆரம்பித்தான். வாழ்க்கையின் கடைசி மணித் துளியை விழுங்குவதாக அவனுக்குத் தோன்றியது. அதேபோல் அவன் பார்வையில் கிணற்றைச் சுற்றிப் பல முகங்கள் அவனைப் பார்த்து அழைப்பது போல் தோன்றியது. மாரி போய் விட்டான் இந்த உலகத்தை விட்டு.

எப்போதும் போல் போன பையன் வரவில்லை என்ற கவலையில் ஆதங்கத்துடன் காத்திருந்த மாரியின் அம்மாவிற்கு அவனுடைய மரணம் பற்றிய செய்தி பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கேட்டவுடன் மயங்கி விழுந்தாள்.

வீட்டிலுள்ள எல்லோருக்கும் செய்தி தெரிந்தது. கூட்டம் கூடியது. செய்தி தெருவிலுள்ள எல்லோரிடமும் பரவியது. கிட்டத்தட்ட 25 அல்லது 30 குடும்பங்கள் கொண்ட தெருவில் உள்ள அனைவரும் ஆறுமுகம் வீட்டிற்கு வந்து துக்கம் விசாரிக்கத் தவறவில்லை.

ஆறுமுகத்தின் மற்றப் பிள்ளைகளில் இவன் ஒருத்தன்தான் உருப்படி ஆனவன். செல்வம் ஆறுமுகத்தின் இரண்டாவது பையன். தினமும் குடித்துவிட்டு மனைவியை

அடிப்பான். தெருவிலுள்ள எல்லோரிடமும் வலியச் சண்டைக்குச் செல்வான். ஒரு முறை அவன் குடித்துவிட்டு சத்தம் போட்டபடியே வீடு திரும்பும்போது, அவன் வீட்டிற்கு எதிர்வீட்டிலுள்ள நாயொன்று அவனைக் கடித்து விட்டது. ரத்தம் சொட்டச் சொட்ட அந்த வீட்டிலுள்ளவரைப் பார்த்துப் பெரிதாக சத்தம் போட்டான். அவ்வீட்டிலுள்ளவர் என்ன நடந்தது என்பதை அறிய மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். செல்வம் அவருடன் சண்டை போட்டபடி அவர் முகத்தில் அடித்து விட்டான். அவனை அதட்டிக்



கேட்கப் போன பக்கத்து வீட்டுக்காரரையும் கண்டபடி திட்ட ஆரம்பித்தான். பெரிய கல்லை எடுத்து அந்த வீட்டை நோக்கி வீசினான். ஆறுமுகம் வந்து சமாதானம் செய்யும்படி ஆயிற்று. இந்தத் தகராறு ஜாதிக் கலவரத்தையே அந்தத் தெருவில் உருவாக்கி விடும் போலிருந்தது.

தினமும் மனைவியைக் குடித்துவிட்டு அடிக்கத் தொடங்கியதால், அவன் அவனுடன் வாழ்வதைவிட சாவது மேல் என்றெண்ணி பிறந்த வீட்டிற்குச் சென்று விட்டாள். ஆறுமுகம் போய்க் கூப்பிட்டும் வரவில்லை.

செல்வத்தின் இருப்பு அவன் குடும்பத்திற்கும், தெருவிற்கும் பெரிய தலைவேதனையை உண்டு பண்ணிற்று. ஆனால் மாரி அப்படி அல்ல. யாருடனும் பேச மாட்டான். அவன் இருக்கிற இடம் தெரியாது. யாராவது கூப்பிட்டால் ஏதாவது உதவி செய்வான்.

ஆறுமுகம் பிள்ளைகளுக்குப் படிப்பு வரவில்லை. எல்லோருக்கும் குடும்பத் தொழில். வீட்டில் இருக்கும்போது மாரி யாருடனும் சண்டைக்குப் போக மாட்டான். வீட்டில் சாப்பிட என்ன கிடைக்கிறதோ சாப்பிட்டு விட்டுச் சென்று விடுவான். எது சொன்னாலும் கேட்பான்.

அரசாங்க மருத்துவ

அழகியசிங்கர்

மனையிலிருந்து மாரியின் உடல் கிடைப்பதற்குத் தாமதமாகி விட்டது. நள்ளிரவில் தான் வீட்டிற்குக் கொண்டு வர முடிந்தது. தகவல் அறிந்து உறவினர்கள் எல்லோரும் வந்து கொண்டிருந்தனர். வீட்டிலிருந்து தெருவின் ஒரு பகுதி வரை பந்தல் போட்டிருந்தார்கள். விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எல்லோரும் களைத்துப் போனாலும் பேசிக் கொண்டே இருந்தார்கள். தெருவே அமைதி இழந்து காணப்பட்டது போல் தோன்றியது. ஊதிப் போன மாரியின் உடல் வந்தவுடன், எல்லோரும் பெருங் குரலெடுத்து சத்தம் போட்டு அழுதார்கள். ஆறுமுகம் துவண்டு போய்க் கிடந்தான். யாருக்கும் யாரும் ஆறுதல்படுத்த முடியாது போலிருந்தது. கண்டபடி எல்லோரும் மாரி பணி புரிந்த இடத்தைச் சாடினார்கள்.

அடுத்த நாள் இயந்திரத்தனமாய் நகர்ந்தது. மாரியின் உடலுக்கு மரியாதைச் செலுத்தும் பொருட்டு அவன் கம்பெனியில் பணி புரியும் ஊழியர்கள் வந்தார்கள். குறிப்பாகப் பெண் ஊழியர்கள் மாரியின் உடலைப் பார்த்து வாய்விட்டு அழுதார்கள். கிணற்றில் அவனை இறங்கச் சொல்லி கொன்று விட்டார்கள் என்றார்கள். அவர்கள் மூலம் இன்னொரு செய்தியையும் தெரிந்து கொள்ள முடிந்தது. 'மாரிதான் விரும்பி கிணற்றில் இறங்கினானாம். யாரும் அவனை கிணற்றில் இறங்கும்படி வற்புறுத்தவில்லையாம்' என்று மேனேஜ்மன்ட் போலீசில் தகவல் கொடுத்திருக்கிறதாம். அவனைக் காப்பாற்ற இறங்கிய இன்னொருவனும் கிணற்றில் விஷ வாயு தாக்கப்பட்டு இறந்து விட்டான். அவன் பக்கத்தில் வேறு இடத்தில் பணி புரிபவன். அவன் குடும்பம் முழுவதும் வெளியூரில் இருப்பதால் தகவல் போயிருக்கிறதாம். இந்த இரு தொடர் மரணங்கள் நேற்று முழுவதும் பணிபுரியும் ஊழியர்களை பாதித்துள்ளது. மரணம் வாழ்தலை அர்த்தமற்றதாக மாற்றி விடுகிறது.

இறுதி ஊர்வலம் தெருவை விட்டுக் கிளம்பிய போது, மாரியின் அம்மா தெரு மண்ணில் புரண்டு புரண்டு புலம்பியபடி அழுதாள். தெருப் புழுதி, கலைந்த கூந்தல் எல்லாம் சேர்ந்து அவள் முகம் பார்க்க விகாரமாய் இருந்தது. மற்றப் பிள்ளைகள் அவளைச் சமாதானப்படுத்தினார்கள். அடுத்த நாள் தெரு வழக்கம் போல் ஆகி விட்டது.

ஆறுமுகம் குடும்பம் மாரி பணி புரிந்த இடத்திற்குச் சென்று அங்குள்ளவர்களைக் கண்டபடி ஏசியது. போலீசில் புகார் கொடுக்கும்போது, கம்பெனி ஏற்கனவே போலீசில், மாரி விரும்பி கிணற்றில் இறங்கியதாகச் சொல்லி இருந்தது. அங்கு பணி புரிபவர்கள் கம்பெனியை எதிர்த்து எதுவும் சொல்ல விரும்பவில்லை. இறுதி ஊர்வலத்திற்கு வந்திருந்தவர்கள்கூட ஆறுமுகத்தைப் பார்த்துக் கண்டு கொள்ளவில்லை. பையன் போன துக்கத்தோடு பையன் மீது களங்கம் சுமத்தும் முயற்சியும் சேர்ந்து கொண்டது.

ஆறுமுகம் குடும்பம் வக்கீல் மூலம் பிரச்னையைத் தீர்க்க நினைத்தது. இறுதியில் கோர்ட் என்றெல்லாம் போகாமல் குறிப்பிட்ட தொகையை நஷ்ட ஈடாகக் கொடுப்பதாக கம்பெனி ஒப்புக்

பணம் போட்டவர்கள் பொ

கடந்த 28.6.98 'கல்கி' இதழில் ''தம்படிக்கு உதவாத தனி நீதிமன்றம்'' என்ற கட்டுரையை வெளியிட்டிருந்தோம் அல்லவா! அந்தக் கட்டுரையில், நிதி நிறுவன மோசடிகளைப் பற்றி விசாரிக்கும் தனி நீதிமன்றம் 7.8.97-க்கு முன்பு நடந்த மேக்ஸிமா, ஸ்நேகம், ஈஸ்வரி ஆகிய நிறுவனங்களின் மோசடிகளை விசாரிக்க முடியாத நிலையில் உள்ளதைக் குறிப்பிட்டிருந்தோம்.

மேற்கண்ட நிதி நிறுவனங்களைப் போன்று மோசடி விசாரணையில் சிக்கி இருக்கும் மற்றொரு பெரிய நிறுவனம் பாரதி ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ். இந்த நிறுவனத்தின் அதிபர் எஸ். துரைசிங்கம் என்பவர் தமது டெபாஸிட்டர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறார். அந்த சுற்றறிக்கையோடு ஒப்பந்தப் படிவம் ஒன்றும் அனுப்பப்பட்டிருக்கிறது. 'ஷோரூம்'களைத் திறந்து எனக்குத் தொழில் நடத்த அனுமதி கிடைத்தால் மூன்று வருட காலத்திற்குள் எல்லோரது டெபாஸிட் தொகையையும் திருப்பிக் கொடுத்து விடுவேன்!'' என்று அதில் உறுதி கொடுத்திருக்கிறார் அவர். அதாவது முதல் வருடம் 25 சதமும், அடுத்த வருடம் 25 சதமும், மூன்றாவது வருடம் 50 சதமும், 12 சதவீத வட்டியோடு திருப்பிக் கொடுப்பாராம்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் தனி நீதிமன்றத்தைப் பற்றிய நமது கட்டுரையை எல்லா டெபாஸிட்தாரர்களுக்கும் ஜெராக்ஸ்

கொண்டது. எவ்வளவு தொகை என்பதில் கம்பெனிக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை நடந்தது.

ஒரு குறிப்பிட்ட நாளில் கம்பெனியிட மிருந்து மாரிக்கு வர வேண்டிய தொகையைப் பெறுவதற்கு வக்கீலுடன் ஆறுமுகம் குடும்பம் சென்றது. காலையில் சென்றவர்கள் மாலை வரை காத்திருக்கும்படி இருந்தது. கம்பெனியின் முக்கிய பார்ட்னர் வரவில்லை என்பதால் தாமதம். அங்கு இருக்கும் ஒவ்வொரு நொடியிலும் பையன் ஞாபகத்துடன் இருந்தான் ஆறுமுகம். காலையில் இந்த இடத்திற்கு வர பையன் சைக்கிளைப் பயன்படுத்துவான். அந்த சைக்கிள் ஆறுமுகத்தின் அப்பா காலத்தது.

பார்ட்னர் வந்தவுடன் அவர்களை உள்ளே அழைத்தார்கள். மாரி அந்தக் கம்பெனிக்கு செய்த சேவையைப் பாராட்டி நாலு வார்த்தைகள் சொன்னார்கள். அவன் இழப்பை ஈடுகட்ட முடியாது என்றார்கள். ஆனாலும் கம்பெனியின் சார்பாக சிறிய தொகையை அவன் இழப்பிற்காக அளிக்கிறோம் என்றார்கள். அவர்கள் வார்த்தைகள் உதட்டிலிருந்து வந்ததே தவிர, உள்ளத்திலிருந்து வரவில்லை. கிடைத்தத் தொகையில் வக்கிலுக்குப் போக மீதித் தொகையை வீட்டிற்கு எடுத்து வர முடிந்தது. ஜாக்கிரதை உணர்வுடன் கம்பெனிக்காரர்கள் தொகையை பணமாகக் கொடுத்திருந்தார்கள்.

பணத்தை வீட்டிற்குக் கொண்டு வந்து, வைத்தவுடன், ஆறுமுகத்தின் மனைவி சொன்னாள். "இந்தப் பணத்தை டெப்பாஸிட் பண்ணுங்க. இதுல வர்ற வட்டியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பையன் வயசில இருக்கிற அனாதைப் பசங்களுக்குச் சட்டை பேண்ட் வாங்கித் தரலாம்."

ஆறுமுகத்திற்கும் அது உடன்பாடாக இருந்தது. பணத்தை எங்கே போடுவது என்று ஒரு வாரம் அக் குடும்பம் யோசித்தது. வங்கியில் வட்டி குறைச்சலென்பதால், பணத்தை வங்கியில் போட விரும்பவில்லை. தெருவிலுள்ள சிலருடைய அறிவுரைப்படி அதிக வட்டி தரும் ஒரு நிதி நிறுவனத்தைத் தேடி அக்குடும்பம் சென்றது.

அடுத்த ஆண்டு இழுத்து மூடப்பட்ட மோசடி நிதி நிறுவனங்களில், அவர்கள் முதல் போட்ட நிதி நிறுவனமும் ஒன்று!

ஆறுமுகம் தன் மனைவியிடம் சொன்னான்: "யாரோ குடுத்தப் பணத்தை நாம என்ன பெருசா தானம் செய்யிறதுன்னு உறுத்தலாத்தான் இருந்திச்சி. போவுது போ. உறுத்தலில்லாத எவனாவது அனுபவிச்சிட்டுப் போவட்டும்." ●

ரம காட்டுவதே நல்லதாம்!

நிதி நிறுவன மோசடிகள் :

எடுத்து அனுப்பியிருக்கிறார். இந்தத் தகவல்களை நமக்குச் சொன்ன டெபாஸிட்டர்களில் ஒருவரான சந்திரசேகர், ''என்ன செய்யறதுன்னு புரியவில்லை. 'என் நிறுவன வழக்கு தனி நீதிமன்ற விசாரணையில் வராது. வழக்கமான கோர்ட்டுதான். எனவே செட்டில் ஆக நீண்ட காலம் ஆகும். ஆகவே நான் சொல்லும் ஐடியாவைக் கேட்டு ஒப்பந்தப் படிவத்தில் கையெழுத்திட்டு அனுப்பி விடுங்கள்' என்று அவர் சொல்லுவது போலிருக்கிறது. இதைப் பற்றி விசாரியுங்களேன்! என்றார்.

இந்தப் புதிய முன்னேற்றத்தைப் பற்றி நிதி நிறுவன மோசடிகளை விசாரிக்கும் போலீஸ் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டோம். ''பெரும்பாலான மோசடி நிறுவன அதிபர்கள் இப்போது ஜாமீனில் வெளியில் இருக்கிறார்கள். அவர்களது அசையும், அசையாச் சொத்துக்கள் நீதிமன்றத்தில் உள்ளன. நீங்கள் சொல்லுவது போல வேறு சில நிறுவனங்களும் டெபாஸிட்டர்களுடன் ஒரு அண்டர்ஸ்டாண்டிங் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றன. டெபாஸிட்டர்கள் ஏற்கெனவே ஒரு முறை ஏமாந்தவர்கள். இனியும் அவர்கள் ஏமாறக் கூடாது. கோர்ட் வசம் இருக்கும் சொத்துக்கள்தான் டெபாஸிட்டர்களின் நம்பிக்கை. ஏதாவது ஒரு வகையில் அண்டர்ஸ்டாண்டிங் வந்து கோர்ட் அங்கீகாரத்துக்கு அது வரும் போது அரசு எல்லா நிலைகளையும் ஆய்ந்து கோர்ட்டில் தனது நிலையை எடுத்து வைக்கும். டெபாஸிட்டர்கள் பொறுமை காப்பது நல்லது!'' என்றார் ஒரு அதிகாரி.

''இதற்கிடையில் 7.8.97-க்கு முன் நடந்த மோசடிகளையும் தனி நீதிமன்றம் விசாரிக்கும் வகையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முடியுமா என்றும் தமிழக அரசின் சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது. எனவே டெபாஸிட்டர்கள் கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும். மீண்டும் முகம் மூடாத கொள்ளைக்காரர்களிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது!'' என்கிறார்கள் அவர்கள். ●

– ஆரெஸ்வி

இது பொம்பளைங்க சமாசாரம் மட்டும் இல்லே!

"நம்ம உடம்புலேர்ந்து வியர்வையாவும் சிறுநீராவும் வெளியேறுகிறபோது, கால்ஷியமும் சேர்ந்தே போகிறதுன்னு, ரொம்பப் பேருக்குத் தெரியறதே இல்லை. இதை ஈடுகட்டணும்னா நாம் சாப்பிடற உணவுலயும் கால்ஷியம் நிறைய இருக்கற மாதிரி பார்த்துக்கணும்!'' என்கிறார் டாக்டர் உமா ரவிசங்கர்; தில்லி அப்போலோ ஹாஸ்பிடலின் சீனியர் கன்சல்டன்ட் இவர்.

"பல் உறுதியா இருக்கணும்னா, எனாமலுக்குக் கீழே இருக்கிற பகுதிக்கு கால்ஷியம் தேவைப்படுது. வெட்டுக்காயம் ஏதானா பட்டுட்டா, ரத்தம் போய்க்கிட்டே இருக்காம, டக்னு உறையணும்னா அதுக்கும் கால்ஷியத்தோட உதவிதான் தேவை!'' என்கிறார் டாக்டர் உமா.

25 வயதிலிருந்து 35 வயதுக்குள்தான் எலும்பு வளர்ந்து, உறுதிப் படுகிறது. 35க்குப் பிறகு அதில் கால்ஷியம் குறைய ஆரம்பிக்கிறபோது, எலும்பின் திடம் குறைகிறது. அதிலும் மெனோபாஸ் நிலையைத் தாண்டி விட்ட பெண்கள் விஷயத்தில், எலும்பைப் பாதுகாக்கிற ஹார்மோன் ஆன எஸ்ட்ரோஜென் உற்பத்தி ஆவதில்லை.

"இரண்டில் ஒரு பெண்ணும், ஆண்களில் எட்டுப் பேரில் ஒருவரும் ஆஸ்டியோபொரோஸிஸ் வந்து எலும்பு முறிவு ஏற்பட, அவஸ்தைப் படுகிறார்கள். அதிலும் பெண்களைப் பொறுத்தவரை, ஆஸ்டியோ-பொரோஸிஸ் காரணமாக இடுப்பெலும்பு முறிவு ஏற்பட்டு உண்டாகிற அவஸ்தையைப் போலவே, மார்பக, கருப்பைப் புற்று நோய் தாக்கி அவஸ்தைப் படவும் அதே அளவு வாய்ப்பு இருக்கு!'' என்கிறார் இந்த டாக்டர்.

"இளமையா இருக்கிறபோதே இந்த கால்ஷியக் குறைவு நிகழ்ந்துடுது. போதுமான அளவு கால்ஷியம் உட்கொள்ளாமையே அதற்குக் காரணம்.

கால்ஷியம் சத்து சாப்பிடாததால் ரத்தத்திலுள்ள கால்ஷியம் குறைந்து போக, நம் உடலானது எலும்புகளிலுள்ள கால்ஷியம் சத்தை உறிஞ்சிக்கொள்ள ஆரம்பித்து விடுமாம்! அப்படி அது பாட்டுக்கு எடுத்துக் கொண்டே போக, நாமும் கால்ஷியத்தை உணவில் சேர்க்காதபோது, என்ன ஆகிறது? எலும்புகள் பலவீனமடைந்து, ஒரு சின்ன வீழ்ச்சிக்குக் கூட உடைந்து போய் விடுகிற மாதிரி ஆகி விடுகின்றன!

'போதும் பயமுறுத்தல். என்ன சாப்பிட்டால் அது கால்ஷியமாக மாறி உடம்புக்குப் போய் எலும்புகளை வலுப்படுத்தும்?' என்று கேட்கலாம்.

பால், வெண்ணெய், சீஸ், பச்சை இலை உள்ள முட்டைக் கோஸ், கீரை வகைகள், கருவேப்பிலை, கொத்தமல்லி, தனியா, சீரகம், கடுகு இதிலெல்லாம் கால்ஷியம் இருக்கிறது என்று, உலக சுகாதார நிறுவனத்துக்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார் டாக்டர் சி. கோபாலன். வெற்றிலை, சுண்ணாம்பு, ராகி இதில் எல்லாம்கூட ஓரளவு கால்ஷியம் இருக்கிறது என்கிறார் டாக்டர் கோபாலன். இவர் ஒரு சத்துணவு ஸ்பெஷலிஸ்ட். இவர் சொன்னால் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

இன்னொரு உபயோகமான தகவல் - டீன் ஏஜ் பெண்களுக்கு:

த நியுட்ரிஷன் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா ஓர் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறது. அதன்படி, நம் இந்தியப் பெண்களின் சராசரி வளர்ச்சி 12 வயது வரை தேசிய ஆரோக்கிய புள்ளி விவரப்படி ரொம்ப சரியாக இருக்கிறது. 12லிருந்து 18 வயது வரை உயரத்தில் வளர்ச்சியே கிடையாது – அமெரிக்கப் பெண்களை ஒப்பிடும்போது. ஏன்? தானிய வகைகளை ஆகாரத்தில் 12 வயது வரை சேர்த்துக் கொள்ளும் நாம், அந்த வயதைத் தாண்டி விட்டால், அடோலஸன்ட் ஏஜில் அதைக் குறைத்துக் கொண்டே போய் விடுகிறோமாம். 'அப்புறம், இருக்கிற கொஞ்ச நஞ்ச கால்ஷியத்தோடு திருப்திப்பட்டுக்



கொள்ள வேண்டியதுதான்!' என்கிறது இந்த சர்வே.

25 வயதிலிருந்து 50 வயதுக்குள் இருக்கும் பெண்கள், ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 1000 மில்லி கிராம் கால்ஷியமாவது உட்கொள்ள வேண்டும். மெனோபாஸ் நிலை தாண்டிய பெண்கள் 1500 மில்லி கிராம் கால்ஷியம் உட்கொள்ள வேண்டும். 25 வயதிலிருந்து 60 வயது வரையிலான ஆண்களுக்கும் ஒரு நாளைக்கு 1000 மில்லிகிராம் கால்ஷியம் தேவை. கர்ப்பிணிப் பெண்கள், ஒரு நாளைக்கு 1200 மில்லி கிராம் கால்ஷியம் உட்கொள்ள வேண்டும். தாய்ப்பால் கொடுக்கிற பெண்களானால் இது மிகவும் அவசியம்.

ஆஸ்டியோபொரோஸிஸ் என்றால் என்ன?

எலும்புகள் அரித்துப் போய், மெலிந்து பலவீனமாகி இருக்கிற நிலைமைதான் ஆஸ்டியோ-பொரோஸிஸ். அப்போது கீழே தப்பித் தவறி விழுந்து அடிபட்டால்...?

எலும்பு முறிவு அல்ல, நொறுங்கியே போய் விடும்!

— சாருகேசி

ஆதாரம் : 'ஆகில்வி' வெளியீடு.

சமீபத்தில் கைலாஷ் யாத்திரைக்குச் சென்ற ஒரு குழுவில் ஒட்டு மொத்தமாக ஒருவர் பாக்கியில்லாமல் நிலச்சரிவில் இறந்த செய்தி வந்தது. அந்த இடத்தில் இரு(ற)ந்திருக்கக்கூடிய குழுவைச் சேர்ந்த அனந்தராமசுப்ரமணியன் சில்லிடும் (கைலாய மலையில் இருந்ததால் மட்டுமல்ல) அந்த அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்!

மரணத்திலிருந்து மயிரிழையில் தப்பினோம்!

கைலாஷ் தரிசனத்தை முடித்து விட்டுக் கீழிறங்கி 'புத்தி காம்ப்' என்ற இடத்தை அடைந்த சமயம்... அன்று ஆகஸ்ட் பதினேழு. காலை மணி பதினொன்றரை. அங்கிருந்து நாங்கள் கிளம்பி மால்பா என்ற இடத்தை அடைந்து அன்று இரவு அங்கே தங்க வேண்டும். இதுதான் எங்கள் பயணத் திட்டம். ஆனால் முந்தைய இரவு மால்பாவில் தங்கிய யாத்ரீ குழு அங்கிருந்து அன்று கிளம்பவில்லை. காரணம் வழியில் ஏற்பட்டிருந்த பருவநிலைக் கோளாறு. இப்படி ஒரு செய்தி ஒயர்லெஸ்ஸில் வந்ததால் எங்கள் பயணம் ஒத்தி வைக்கப்பட்டது. ஏனென்றால் ஒரு காம்ப்பில் ஒரு கோஷ்டிக்கு மேல் தங்க முடியாது. ஃபைபர் க்ளாஸினால் உருவாக்கப்பட்ட கூடாரங்களும், அவற்றில் உள்ள கட்டில்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் இருக்கும்.

'மேலும் ஒருநாள் இந்த இடத்திலேயே இருக்கும்படி ஆகிவிட்டதே. இந்நேரம் மால்பாவில் அல்லவா நாமிருந்திருக்க வேண்டும்' என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்த அந்த இரவில்தான் பெரும் மலைச்சரிவு ஏற்பட்டு சுமார் 250 பேர் உயிரிழந்தனர். ஆம், மால்பாவில் அன்று தங்கிய 61 யாத்ரிகளும் இறந்து விட்டனர்! அருகிலேயே ஆக்ரோஷத்துடன் காளி நதி ஓடிக் கொண்டிருந்ததால் பலரது உடல்கள் அதில் அடித்துச் செல்லப்பட்டன. மற்றவரது சடலங்கள் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டன.

இது பற்றியெல்லாம் எதுவுமே தெரியாமல் அடுத்த நாள் காலை எங்கள் குழு காலை ஏழு மணிக்கு மால்பா திசையை நோக்கி நடக்கத் தொடங்கியது. அந்த பயங்கரத்தைப் பற்றி எங்களுக்குத் தகவல் வராததற்குக் காரணம், மால்பா கேம்ப்பில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தள்ளி அமைந்திருந்த தகவல் தொடர்பு நிலையமும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது தான்.

சுமார் மூன்று கிலோமீட்டர் நடந்திருப்போம். அப்போதுதான் நடந்த விபரீதத்தைப் பற்றித் தகவல் கிடைத்தது. ஷாக்கடித்தது போலிருந்தது. இறந்தவர்களுக்காக வருத்தப்பட்ட மனிதத்தனம், திட்டப்படி கீழிறங்கியிருந்தால் நாங்கள் அல்லவா இறந்திருப்போம் என்ற சுயநலம் கலந்த ஆசுவாசம் என்று இரு உணர்வுகளும் மாறி மாறி எழுந்தன. மீண்டும் 'புத்தி' காம்ப்புக்கே அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கிருந்த தகவல் தொடர்பு நிலையத்தில் ஓர் ஊழியர் கதறிக் கொண்டிருந்தார், மால்பாவில் அவரது சக ஊழியர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டு.

இரண்டு நாட்கள் அங்கு இருந்த பின், குன்ஜி என்ற நாங்கள் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் செல்ல வேண்டும் என்று உத்தரவு. காரணம் அங்கேதான் ஹெலிபேட் வசதி உண்டு. இறங்கும் வழி முழுவதுமாக அடை



• கைலாஷ் செல்லும் பாதை

பட்டு விட்டதால், ஹெலிகாப்டர் மூலமாகத் தான் எங்களை கீழே அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நிலைமை)

அடுத்த நாள் மதியம் குன்ஜியை அடைந்தோம். ஹெலிகாப்டர் எதுவும் வருவதாகத் தெரியவில்லை. இரண்டு நாட்கள் கழித்து மாலை நான்கு மணி அளவில் எங்கள் தலைக்கு மேல் ஒரு ஹெலிகாப்டர். ஆனால் அந்த இடத்தை இரண்டு மூன்று சுற்றுகள் வலம் வந்துவிட்டு கீழே இறங்காமலேயே அது சென்று விட்டது. (அது அந்தப் பகுதியின் நிலவரம் பற்றிய தகவல்களை அறிந்து வருவதற்காக அனுப்பப்பட்ட ஹெலிகாப்டராம்)




• அனந்த ராமசுப்ரமணியன்

அதற்கு அடுத்த நாள் (23ஆம் தேதி) எங்களுடன் வந்த, சுமார் 55 வயது மதிக்கத்தக்க விநோத் அந்வர்யூ என்ற குஜராத்திகாரரின் உடல்நிலை மிக மோசமடைந்தது. மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. இரண்டாவது முறையாகக் கைலாஷ் யாத்திரைக்கு வந்தவர் அவர். எங்கள் லயஸன் அதிகாரி உடனடியாக உதவி கேட்டு வயர்லெஸ் தகவல் அனுப்பியும், சீரில்லாத வெப்பநிலை காரணமாக எந்த ஹெலிகாப்டரும் அனுப்பப்படவில்லை. 24ஆம் தேதி விடியற்காலை ஒன்றரை மணிக்கு அவர் இறந்து போனார்.

அன்று மாலை நாலரை மணிக்கு ஒரு ஹெலிகாப்டர் வந்திறங்கியது. ஆனால் அது வெறும் மூன்று பேர் மட்டுமே அமரக்கூடிய ஹெலிகாப்டர் என்பதால் இறந்தவரின் உடலை அதில் ஏற்ற முடியவில்லை. அவர் வசித்த பகுதியிலேயே இருந்த இன்னொரு குஜராத்திக்காரர் எங்கள் குழுவில் இருந்தார். அவரையும் வேறு இருவரையும் அதில் அனுப்பினோம். அடுத்ததாக வந்த ஹெலிகாப்டரில் அந்த உடலை ஏற்றி அனுப்பினோம்.

அதற்குப் பிறகு அன்று மட்டுமல்ல; அடுத்த நாள் கூட எந்த ஹெலிகாப்டரும் கண்ணில் படவில்லை. 26ஆம் தேதி விடிந்தது. அன்று விநாயகர் சதுர்த்தி. நிறைய மேக மூட்டம். அன்றும் அங்கேயே தங்க வேண்டிய நிலை உண்டாகுமோ என்ற பயம். விநாயகரை வேண்டிக் கொண்டோம். மாலை நாலு மணிக்கு தட்ப வெப்ப நிலை சீரடைந்தது. நாலரைக்கு வந்திறங்கிய ஹெலிகாப்டர், பாக்கியுள்ள எங்களை பத்திரமாக ஏற்றிக் கொண்டு சென்று பத்திரமாக இறக்கியது.




• இதுதான் ஃபைபர் கண்ணாடி கேம்ப்

ஒரு மணி நேரம் ஹெலிகாப்டர் பறக்கத் தேவைப்படும் எரிபொருளின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபாய் என்பதும், இந்திய விமானப் படையின் மீட்புப் பிரிவினர்தான் எங்களை இலவசமாகவே மீட்டார்கள் என்பதும் தெரிய வந்தது.

சாவின் விளிம்புக்குச் சென்று மீண்டது, சடலத்தோடு அந்தப் பனிப் பிரதேசத்தில் ஒரு நாள் கழித்தது ஆகியவை கைலாஷ் யாத்திரையை மேலும் மறக்க முடியாதவாறு செய்து விட்டன.

சந்திப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)



100% தூய பருத்தியிலான
அதி மென்மையான நவீன தயாரிப்பு.
Poombukar®
VESTS • BRIEFS • PANTIES • TRUNKS
பூம்புகார்
POOMBUKAR HOSIERIES,
TIRUPUR-641 608.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

